KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710
AAXEL

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage

மலர்:- 33, 23 October 2026 இதழ்:- 31

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் 12ம் 1ம் 16ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# கனடாவில் இருந்து பிரியும் திட்டத்தை நிராகரித்த அல்பர்ட்டா மக்கள்

கனடாவிலிருந்து பிரிந்து தனி நாடாகும் முயற்சியைத் தொடங்குவதற்கான திட்டத்தை, ஆல்பர்ட்டா மாகாண மக்கள் பெரும்பான்மையாக நிராகரித்துள்ளனர். வாக்கு எண்ணிக்கையின் முதற் கட்ட முடிவு களின்படி சுமார் 77% மக்கள் கனடாவுடன் தொடர்ந்து இணைந்திருக்க ஆதரவாக வாக்களித்துள்ளனர். சுமார் 23% பேர் மட்டுமே பிரிவினைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். இந்த வாக்கெடுப்பு ஆல்பர்ட்டா மக்கள் கனடாவுடன் தொடர்ந்து இணைந்திருக்க விரும்புகிறார்களா அல்லது எதிர்காலத்தில் சுதந்திரம் குறித்த வாக்கெடுப்பை நடத்துவதற் கான நடவடிக்கைகளைத் தொடங்க விரும்புகிறார்களா என்பதை அறிய நடத்தப்பட்டது. (2ம் பக்கம் பார்க்க)




## ஞானசார தேரருக்கு பொது மன்னிப்பு கிடையாது?

# அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு சிங்கள பௌத்த வேட்பாளராக வளர்க்கப்படும் ஞானசார தேரர்?



இலங்கை அரசியலில் ஞானசார தேரர் கடந்த சில நாட்களாக பெரும் புள்ளியாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார். இதன் நோக்கம், பின்னணி, நீண்ட காலத்திட்டம் என்பவை பற்றி பல்வேறு தகவல்கள் பரவலாக வெளி வருகின்றன. நாட்டின் மூத்த அரசியல் தலைவர்கள் என்று சொல்லப் படுபவர்கள் அனைவரும் கூட்டுச் சேர்ந்தாலும் எந்தத் தேர்தல்களிலும் வெற்றி பெறக்கூடிய வாய்ப்பு இப்போது காணப்படவில்லை என்பது பொதுவான அபிப்பிராயம். நீதிமன்றப் படிகளை தரிசிப்பவர்களாகவும், குற்ற விசாரணைகளை தொடர்ந்து எதிர் பார்த்திருப்பவர்களாகவும் இவர்களில் பலரும் உள்ளனர். (9ம் பக்கம் பார்க்க)

# செம்மணிப் புதைகுழியில் தொற்றுநோயால் இறந்தவர்கள் புதைக்கப்பட்டிருக்கலாம்? தடயவியல் அறிக்கையில் தெரிவிப்பு!

# கனடாவில் இருந்து பிரியும் திட்டத்தை நிராகரித்த அல்பர்ட்டா மக்கள்




கனடாவிலிருந்து பிரிந்து தனி நாடாகும் முயற்சியைத் தொடங்குவதற்கான திட்டத்தை, ஆல்பர்ட்டா மாகாண மக்கள் பெரும்பான்மையாக நிராகரித்துள்ளனர்.

வாக்கு எண்ணிக்கையின் முதற் கட்ட முடிவுகளின்படி, சுமார் 77% மக்கள் கனடாவுடன் தொடர்ந்து இணைந்திருக்க ஆதரவாக வாக்களித்துள்ளனர். சுமார் 23% பேர் மட்டுமே பிரிவினைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

இந்த வாக்கெடுப்பு ஆல்பர்ட்டா மக்கள் கனடாவுடன் தொடர்ந்து இணைந்திருக்க விரும்புகிறார்களா அல்லது எதிர்காலத்தில் சுதந்திரம் குறித்த வாக்கெடுப்பை நடத்துவதற்கான நடவடிக்கைகளைத் தொடங்க விரும்புகிறார்களா என்பதை அறிய நடத்தப்பட்டது. இது சுதந்திரம் குறித்த இறுதி வாக்கெடுப்பு அல்ல.

ஆல்பர்ட்டா மாகாண முதல்வர் டேனியல் ஸ்மித், மக்கள் ஒன்றுபட்ட கனடாவைத் தேர்ந்தெடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஆல்பர்ட்டாவில் சிலர், தங்கள் மாகாணத்தின் வருவாயில் பெரும் பகுதி மத்திய அரசுக்குச் செல்வதாகவும், எண்ணெய் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான கொள்கைகளில் தங்களுக்கு நியாயம் கிடைப்பதில்லை என்றும் குற்றம் சாட்டி வருகின்றனர்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உள்ளிட்ட சிலரும் ஆல்பர்ட்டாவின் சுதந்திர முயற்சிக்கு ஆதரவு தெரிவித்திருந்தனர். இருப்பினும், வாக்கெடுப்பின் முடிவு, கனடாவுடன் தொடர்ந்து இணைந்திருக்கவே பெரும்பாலான மக்கள் விரும்புவதை வெளிப்படுத்தியுள்ளது. ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் அமைதிக்கும் ஒற்றுமை மிகவும் அவசியம். கனடாவின் ஆல்பர்ட்டா மாகாணத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில், பெரும்பாலான மக்கள் கனடாவுடன் தொடர்ந்து இணைந்திருக்க ஆதரவு தெரிவித்துள்ளனர்.

சுமார் 77% மக்கள் கனடாவுடன் இணைந்திருக்க விரும்பியுள்ளனர். இதன் மூலம், மாகாணத்தைப் பிரிப்பதற்கான முயற்சிக்கு பெரும்பான்மையான மக்கள் ஆதரவு வழங்கவில்லை என்பது தெளிவாகிறது.

ஆல்பர்ட்டாவில் உள்ள சிலர், தங்கள் மாகாணத்தின் வருவாய் மற்றும் இயற்கை வளங்கள் தொடர்பாக மத்திய அரசின் கொள்கைகளில் அதிருப்தி தெரிவித்துள்ளனர். இத்தகைய பிரச்சினைகள் இருப்பின், அவற்றை பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்ப்பது அவசியம். மக்களின் குறைகளைக் கேட்டு, மாகாணத்திற்கும் மத்திய அரசுக்கும் இடையே நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும். கருத்து வேறுபாடுகள் காரணமாகப் பிரிவினையை நோக்கிச் செல்வதற்குப் பதிலாக, ஜனநாயக முறையில் தீர்வுகளைக் காண முயற்சிக்க வேண்டும்.

இந்த வாக்கெடுப்பு, மக்களின் விருப்பத்திற்கு மதிப்பளிப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. கனடாவின் ஒற்றுமையைப் பாதுகாப்பதுடன், ஆல்பர்ட்டா மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கும் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இந்த மகத்தான முடிவு, கனடா ஆதரவு மற்றும் பிரிவினைவாத குழுக்களுக்கு இடையே கடந்த ஒரு ஆண்டாக நடைபெற்று வந்த பிரச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

மறுபுறம்,முதல் ஒன்பது கேள்விகளுக்கு 'ஆம்' என்று வாக்களிக்குமாறு அல்பெர்ட்டா அரசாங்கம் தீவிரப் பிரசாரம் மேற்கொண்டது.

அதேவேளையில், மாகாணம் கனடாவுடன் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதையும் முதல்வர் டேனியல் ஸ்மித் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடன் தொல்லையா?
பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்
கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224, Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com


## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங் களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தை களின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# அநுரவுக்கு சூனியம் வைக்கும் பௌத்த தேரர்கள்



சமகால அநுர அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் நிலையில் அது நாசகார சக்தி களுக்கு பெரும் ஆபத்தாக மாறியுள் ளது. இதன் காரணமாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு எதிராக ஒரு தருப்பினர் கடும் எதிர்ப்பு தெரி வித்து வருகின்றனர்.

அவர்களில் ஒரு தரப்பினர் பௌத்த பிக்குகள் தலைமையில் ஒன்றுகூடிய சில தினங்களாக தொடர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

குற்றவாளியாக சிறையில் அடைக்கப் பட்டுள்ள ஞானசார தேரரை உடன் விடு விக்க வேண்டும் என கோரிக்கையின் அடிப்படையில் இந்த போராட்டம் நடைபெற்று வருகிறது.

பௌத்த பிக்குகள் என்றால் ஜனாதிபதி அநுர ஓடி வந்து காலில் வீழ்ந்து ஆசிர் வாதம் பெற்று ஞானசார தேரரின் விடு தலை தொடர்பான அறிவிப்பை வெளி யிடுவார் என அவர்கள் எதிர்பார்த்தனர். எனினும் சட்டத்தின் முன் அனைவரும் ஒன்று தான், சட்டத்திற்கு எதிராக செயற்பட முடியாது என ஜனாதிபதி உறுதியாக அறிவித்துள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதியை தம்வசப்ப டும் நடவடிக்கையில் பௌத்த பிக்குகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். அதற்காக அநுரவுக்கு சூனியம் வைத்து, அவரின் மனதை மாற்றும் முயற்சியில் ஈடுபட்டு ள்ளனர். மாந்தீரிக அடிப்படையிலான பூஜைகள் செய்யப்படுவதுடன், ஜனாதி பதி போன்ற பொம்மை ஒன்றை உரு வாக்கி அதற்குள் தூய சக்திகளை ஏவும் பணியினை பிக்குகள் முன்னெடு த்து வருகின்றனர்.

.து இவ்வாறிருக்க ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தன்னிடம் வந்து, தன்னை வணங்கி மகாசங்கத்தின் சக்தியை ஏற்றுக்கொண்டு, கலகொட அத்தே ஞானசார தேரரை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறினால் மட்டுமே, தாம் பிரித் நீரை அருந்தி, தம் கைகளில் பிரித் பூணூல் கட்டுவதாக பாலங்கொட கசப்ப தேரர் தெரிவித்து ள்ளார். தேரர் ஊடகங்களிடம் பேசுகை யில் இந்த அறிக்கையை வெளியிட்டார். தவறு செய்து விட்டேன் என ஜனாதிபதி மன்னிப்பு கேட்கவேண்டும் ஜனாதிபதி வந்து, ஓ வணக்கத்திற்குரியவரே, எங்களை மன்னியுங்கள், மகாசங்கம் இவ்வளவு சக்தி வாய்ந்தது என்று நாங்கள் நினைக்கவில்லை.நான் தவறு செய்து விட்டேன், ஞானசாரரை விடு விக்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம்'' என்று கூறினால் மட்டுமே, தாம் பிரித் நீரை அருந்தி, தம் கைகளில் பிரித் பூணூல் கட்டத் தயாராக இருப்பதாக தேரர் மேலும் கூறினார். இதேவேளை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கு! புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தைக் கிழித்தெறி!' எனும் தொனிப்பொருளில் 'மாற்றத்து க்கான இளைஞர்கள்' அமைப்பின் தேசிய ஒருங்கிணைப்பாளர் லஹிரு வீரசேகர தலைமையில், அடக்குமுறைச் சட்டங் களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தீப்பந்தங் களை ஏந்திய ஆர்ப்பாட்ட மொன்று செவ்வாய்க்கிழமை 20 ஒக் 2026 மாலை நுகேகொடையில் நடைபெற்றது.

## கோத்தாவின் மனுவை நிராகரித்த நீதிமன்றம்



மருத்துவ சிகிச்சைக்காகத் தாம் வெளி நாடு செல்ல அனுமதி அளிக்குமாறும், விதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டுப் பயணத் தடையைத் தற்காலிகமாக நீக்குமாறும் கோரி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாக்கல் செய்த மனுவை கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. அம் மனுவில் குறிப்பிடப்பட்டிருந்த திகதி தொடர்பான முரண்பாடுகள் மற்றும் சிக்கல்கள் காரணமாகவே இந்த விண் ணப்பத்தை நீதிமன்றம் நிராகரித்து உத்தரவிட்டுள்ளது.


**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# ஒஸ்லோவில் நோர்வே - இலங்கை அமைச்சர்கள் சந்திப்பு!



இலங்கையின் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவுக்கும் நோர்வேயின் போக்குவரத்து அமைச்சர் காம்ஸி குணரத்னத்துக்கும் இடையிலான இருதரப்புச் சந்திப்பு நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் நோர்வேக்கான இலங்கைத் தூதுவர் கபில பொன்சேகாவும் கலந்து கொண்டார். யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட காம்ஸி குணரத்னம், நோர்வே அரசாங்கத்தின் போக்குவரத்துத் துறையில் முக்கிய பொறுப்பை வகிக்கும் இலங்கைத் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்தவராக இருப்பது இச்சந்திப்புக்குக் கூடுதல் முக்கியத்துவத்தை அளித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான போக்குவரத்துத் துறை ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அமைச்சர்கள் கலந்துரையாடினர். பசுமைப் போக்குவரத்து மாற்றம், பொதுப் போக்குவரத்துச் சேவைகளை மேம்படுத்துதல் மற்றும் போக்குவரத்துத் துறையில் முறையற்ற தொழிலாளர் சுரண்டலைத் தடுப்பது உள்ளிட்ட முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டன.

இலங்கையில் சாலை விபத்துகளால் ஆண்டு தோறும் ஏற்படும் உயிரிழப்புகள் குறித்துக் கவலை தெரிவித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடந்த ஆண்டில் மாத்திரம் 2,700க்கும் மேற்பட்டோர் சாலை விபத்துகளில் உயிரிழந்ததாகச் சுட்டிக் காட்டினார். இவர்களில் பெரும்பாலானோர் இளைஞர்கள் என்றும் குறிப்பிட்டார்.

இதனையடுத்து நோர்வேயில் நடைமுறையில் உள்ள மேம்பட்ட சாலைப் பாதுகாப்புத் தொழில்நுட்பங்கள் மற்றும் உத்திகளை இலங்கையில் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

சந்திப்பின் போது இலங்கையின் உள்நாட்டுப் போருக்குப் பின்னரான சமூக நல்லிணக்க முயற்சிகளும் பேசப்பட்டன. யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட காம்ஸி குணரத்னம், நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும், இந்தச்செயல்முறையில் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களின் பங்களிப்பையும் எடுத்துரைத்தார்.

இலங்கை நோர்வே உறவுகளைப் போக்குவரத்துத் துறை ஒத்துழைப்புக்கு அப்பால் சமூக நல்லிணக்கம் மற்றும் மக்களிடையிலான தொடர்பு திசையிலும் முன்னெடுத்துச் செல்வதற்கான வாய்ப்பாக இந்தச் சந்திப்பு அமைந்துள்ளது.

# பௌத்த சாசனத்தின் விதிகளையும் ஒழுக்கத்தையும் பேண முடியா விட்டால் காவி உடையைத் துறந்து வெளியேறுங்கள்



`பௌத்த பிக்குகளுக்கு எனத் தனி மனித உரிமைகள் கிடையாது... அவர்கள் நாட்டின் அரச சட்டத்திற்கு முழுமையாகக் கட்டுப்பட்டவர்களே! பௌத்த சாசனத்தின் விதிகளையும் ஒழுக்கத்தையும் பேண முடியா விட்டால் உடனடியாகக் காவி உடையைத் துறந்து வெளியேறுங்கள் என ஓமல்பே சோபித தேரர் அதிரடியாகத் தெரிவித்தார்.

நாட்டில் பௌத்த பிக்குகள் சிலர் முன்னெடுத்து வரும் சர்ச்சைக்குரிய போராட்டங்கள் மற்றும் சட்டத்திற்கு முரணான செயற்பாடுகள் குறித்துத் தனது கடுமையான கண்டனத்தைப் பதிவு செய்துள்ள பிரபல பௌத்த மதத் தலைவரான ஓமல்பே சோபித தேரர் பௌத்த பிக்குகள் அனைவரும் நாட்டின் பொதுவான அரச சட்டத்திற்கு உட்பட்டவர்களே தவிர, அவர்களுக்கு எனத் தனியான சிறப்பு உரிமைகளோ விதி விலக்குகளோ கிடையாது என அதிரடியாகத் தெரிவித்துள்ளார்.

பௌத்த சாசனத்தின் கௌரவம் மற்றும் பிக்குகளின் ஒழுக்க நெறிகள் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இக்கடுமையான கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

ஓமல்பே சோபித தேரர் மேலும் தெரிவிக்கையில், `பௌத்த பிக்குகளுக்கு எனத் தனிப்பட்ட மனித உரிமைகள் என்று எதுவும் கிடையாது. அவர்கள் நாட்டின் அரச சட்டத்திற்கும், நீதித் துறைக்கும் முழுமையாகக் கட்டுப்பட்டவர்களே ஆவர். பௌத்த சாசனத்திற்குரிய உன்னதமான கோட்பாடுகளையும் விதிகளையும் பேணிப் பாதுகாக்க முடியா விட்டால் தயவு செய்து உடனடியாகக் காவி உடையை (சிவரயம்) துறந்துவிட்டுச் சாதாரண குடிமக்களாக வெளியேறுங்கள்` எனக் காரசாரமாகத் தெரிவித்தார்.

தூய பௌத்த சாசனத்தின் புகழையும் சீலத்தின் மரியாதையையும் காப்பாற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஓமல்பே சோபித தேரர் வெளியிட்டுள்ள இக் கருத்து, தென்னிலங்கை அரசியல் மற்றும் மத வட்டாரங்களில் பெரும் விவாதத்தையும் வரவேற்பையும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# நாங்கள் முடிக்க வேண்டிய வேலை ஒன்று உள்ளது! அமெரிக்கா - இஸ்ரேலுக்கு ஈரான் எச்சரிக்கை!



ஈரானின் அச்சுறுத்தல்களை முடிவுக்குக் கொண்டு வருவதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு விடுத்த எச்சரிக்கைக்கு ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். அமெரிக்காவும் இஸ்ரேலும் தங்களது அதிர்ஷ்டத்தை மீண்டும் ஒருமுறை சோதித்துப் பார்க்கட்டும் என்று சவால் விடுத்துள்ள அவர் ஈரானுக்கும் முடிக்க வேண்டிய வேலை மிச்சம் இருப்பதாகக் கூறியுள்ளார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், இஸ்ரேல் தேர்தலில் நெதன்யாகுவை ஆதரித்துப் பதிவிட்ட கருத்துக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக கருத்தை அவர் தெரிவித்துள்ளார். முன்பு ஒரு முறை ஈரான் மீது தாக்குதல் நடத்த முயன்றபோது, ஈரான் முன்பைவிட மிகவும் வலிமையாக உருவெடுத்ததாக தெரிவித்த அராக்சி, மீண்டும் தங்களது அதிர்ஷ்டத்தை சோதித்துப் பார்க்க வருமாறு தெரிவித்துள்ளார்.

மேலும், உள்நாட்டு நெருக்கடிகள் மற்றும் சிறைத் தண்டனையிலிருந்து தப்பிப்பதற்காகவே நெதன்யாகு அமெரிக்காவை மற்றொரு போருக்குள் தள்ளி வருவதாகவும், இதன் விளைவுகள் குறித்து அவர் சிறிதும் கவலைப்படவில்லை எனவும் குற்றம் சாட்டியுள்ளார். இஸ்ரேல் தேர்தலில் நெதன்யாகுவின் தலைமையை ஆதரித்துள்ள ட்ரம்ப், ஈரான் அச்சுறுத்தல்களை எதிர் கொள்ள அவர் போன்ற ஒரு உறுதியான தலைவர் மட்டுமே இஸ்ரேலுக்குத் தேவைப்படுவதாகத் தெரிவித்திருந்தார்.

இதற்கிடையே, அமெரிக்காவிடம் ஈரான் முன்வைத்த ஹார்முஸ் ஜலசந்தி தொடர்பான 7 நாட்கள் ஒப்பந்த முன்மொழிவு இன்னும் பரிசீலனையில் உள்ளதாக அப்பாஸ் அராக்சி தெரிவித்துள்ளார். அமெரிக்கா தங்கள் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால், ஆறு நாட்களுக்குள் ஹோர்முஸ் ஜலசந்தி திறக்கப்படும் என்றும், ஏழாவது நாளில் பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மறுபுறம், வாஷிங்டன் போஸ்ட் ஏபிசி நியூஸ் மற்றும் இப்சோஸ் இணைந்து நடத்திய புதிய கருத்துக் கணிப்பில், அமெரிக்க அதிபர் ட்ரம்பின் பணி குறித்த ஒப்புதல் மதிப்பீடு 33 சதவீதமாகச் சரிந்துள்ளதும், பிரதிநிதிகள் சபையைக் கைப்பற்றும் போட்டியில் குடியரசுக் கட்சியை விட ஜனநாயகக் கட்சியினர் 8 புள்ளிகள் முன்னிலையில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இது இவ்விறுக்க மத்திய கிழக்கிலுள்ள அமெரிக்காவின் கூட்டாளி நாடுகளான ஒன்பது நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஈரான் மீது அமெரிக்கா மீண்டும் இராணுவத் தாக்குதல்களைத் தொடர்ந்தால் அல்லது நாட்டின் பெட்ரோ கெமிக்கல் வளங்கள் மற்றும் இராணுவத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் இந்த எதிர்த்தாக்குதல் நடத்தப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஈரானிய உயர்மட்ட ஆலோசகரும் பழமைவாத அரசியல்வாதியுமான முஹம்மத் மொக்பர் இதனை தெரிவித்துள்ளார். குறித்த ஒன்பது நாடுகள் எவை என்பது தொடர்பில் அவர் தெரிவித்த கருத்துக்களை சர்வதேச ஊடகங்கள் வெளிப்படுத்தவில்லை. திங்கள்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த இஸ்லாமிய புரட்சிகர காவல் படையின் பேச்சாளர் ஹொசைன் மொஹேபி பிராந்தியத்திலுள்ள பெரும்பாலான அமெரிக்க இராணுவத் தளங்கள் தற்போது செயலிழந்துள்ளதாக உரிமை கோரி இருந்தமை குறிப்பிடத்தக்கது

# கனடிய இராணுவ பயிற்சித் தளத்தில் தீ விபத்து! 4 பேர் பலி! 39 பேர் காயம்!




கனடாவின் ஆல்பர்ட்டா மாகாணத்தில் உள்ள வெய்ன்ரைட் இராணுவப் பயிற்சித் தளத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 39 பேர் மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளதுடன் அவர்களில் குறைந் தது 19 பேர் கவலைக்கிடமான நிலை யில் இருப்பதாக மாகாண முதல்வர் டேனியல் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

17 ஒக் 2026 சனிக்கிழமை மாலை சுமார் 4.00 மணியளவில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டது. அப்போது கனடிய இராணு வத்தின் பயிற்சித் தளத்தில் பல்வேறு பயிற்சி நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

பயிற்சிப் பகுதியில் ஏற்பட்ட புல்வெளித் தீ, பலத்த காற்று காரணமாக வேகமாகப் பரவி, இராணுவத் தளத்தின் நிர்வாகப் பகுதியை நோக்கிச் சென்றதாக இரா ணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தீ விபத்துக்கான காரணம் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தீ விபத்தில் காயமடைந்தவர்கள் எட் மண்டன் உள்ளிட்ட நகரங்களிலுள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். காயமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், அப்பகுதியிலுள்ள மருத்துவமனைகள் கடும் நெருக்கடியை எதிர்கொள்வதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சம்பவம் குறித்து கனடா பிரதமர் மார்க் கார்னி ஆழ்ந்த வருத்தம் தெரிவித்துள்ளார். அமைதிக் காலத்தில் இராணுவம் எதிர்கொண்ட மிக மோச மான துயரச் சம்பவங்களில் இதுவும் ஒன்று என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்த பிரதமர், காயமடை ந்த இராணுவ வீரர்களுக்குத் தேவை யான உதவிகள் வழங்கப்படும் என்றும் உறுதியளித்துள்ளார். இதற்கிடையில், வெய்ன்ரைட் இராணுவத் தளத்தைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தீ பரவியுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உயிர் களையும் வீடுகளையும் ஏனைய கட்ட டங்களையும் பாதுகாக்கும் பணியில் அவசரகால மீட்புக் குழுவினர் தொட ர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

# டக்ளஸிற்கு எதிரான விசாரணையைக் கைவிட்டது இலஞ்சஊழல் ஆணைக்குழு!



ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும், முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா வுக்கு எதிரான முறைப்பாடு தொடர் பில் விசாரணைகளை ஆரம்பித்திருந்த இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழு அதனை தொடர்ந்தும் முன்னெ டுக்காதிருப்பதற்கு தீர்மானித்துள்ள தாக அறிவித்துள்ளது. குறித்த விடயம் சம்பந்தமாக மேலும் தெரிய வருவதாவது,

டக்ளஸ் தேவானந்தா கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சராக இருந்த காலத்தில் பேருவளை கடற்றொழில் துறைமுக நங்கூரமிடப் பகுதியில் மணல் அகழ் வதற்கான விநியோக விலைமனுக் கோரலின் போது முறைகேடு நடந்த தாக இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய ப்பட்டது.

ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கு அமைவாக, பி.சி.- 0301-2023 எனும் கோப்பு இலக்கத்தின் கீழ், 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் பிரகாரம் மேற்கொள்ள ப்பட்ட புலனாய்வின் பின்னர், குறித்த முறைப்பாடு தொடர்பாக மேலதிக நடவடிக்கைகளை எடுக்காதிருப்ப தற்கு ஆணைக்குழு தீர்மானித் துள்ளதாக அறிவித்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

# வீட்டில் வைத்துக் கண்காணிக்க யோசனை!

போதைப்பொருள் குற்றங்கள் மற்றும் ஏனைய சிறு குற்றங்கள் தொடர்பில் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படும் சந்தேகநபர்களில் தெரிவு செய்யப்பட்ட சிலரைச் சிறைச்சாலையில் அடைக்காது, வீட்டில் தடுத்து வைத்து கண்காணிக்கும் புதிய முறைமையையொன்றை அறிமுகப்படுத்த அரசாங் கம் திட்டமிட்டுள்ளதாகச் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சேனக பல்லே தென்ன தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவிக்கையில்,

புதிய திட்டத்தின் கீழ் சந்தேகநபருக்கு சிப் ஒன்று பொருத்தப்பட்டு, அவர்களை கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது சிறைச்சாலைகளில் காணப் படும் கடுமையான நெரிசலைக் கருத்திற்கொண்டே இந்த புதிய நடைமுறையை அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், சிறைச்சாலைகள் திணைக்களம், நீதி அமைச்சு மற்றும் பொலிஸார் இணைந்து இதனைச் செயற்படுத்த எதிர் பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

# கச்சதீவு விவகாரமும் இந்திய உச்ச நீதிமன்ற அவதானிப்பும்

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான உறவுகளில் நீண்ட காலமாக விவாதப் பொருளாக இருந்து வரும் கச்சத்தீவு மற்றும் கடல் எல்லை விவகாரத் தில், இந்திய உச்ச நீதிமன்றம் வெளிப்படுத்தியுள்ள கருத்துக்கள் இரு நாடுகளு க்கு இடையே ஒரு ஆரோக்கியமான சூழலை உருவாக்க வழி வகுத்துள்ளன.

குறிப்பாக இலங்கை மீன்பிடிக்கான கடல் எல்லைகளை மதிப்பதன் அவசியத்தை யும், தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் சட்டவிரோதமாக நுழை வதைத் தவிர்ப்பது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தின் அவதானிப்பை இலங்கை மீன்பிடி, நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் வரவேற்றிருக்கிறார்.

வெளியுறவு அமைச்சு இது குறித்து எதையும் இதுவரை கூறவில்லை. இந்திய உச்ச நீதிமன்றத்தில் கச்சத்தீவை இந்தியாவுக்குத் திரும்பப் பெறுவது தொடர் பான மனுக்கள் மீதான விசாரணையின் போதே இந்த அவதானிப்புகள் வெளியாகி யுள்ளன. நீதிபதி சஞ்சய்குமார் தலைமையிலான அமர்வு, இரு நாடுகளுக்கும் இடையே சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட கடல் எல்லையை மதிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக, வெளிநாட்டுப் படகுகளின் சட்டவிரோத மற்றும் அழிவுகரமான மீன்பிடி முறைகளால், குறிப்பாக கடல் தரைப்பகுதியைச் சேதப்படுத்தும் முறைகளால் இலங்கையின் வடக்கு மாகாண மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்க ப்படுவதாக நீண்டகாலமாகவே சுட்டிக்காட்டப்பட்டு வந்திருக்கிறது.

இந்தச் சூழலில் சட்டவிரோதமாக எல்லை தாண்டி மீன்பிடிக்கும் நடவடிக்கை களைத் தடுத்து கடல் வளங்களைச் பாதுகாப்பது அரசாங்கத்தின் முக்கியப் பொறுப்பாகும்.

1974ஆம், 1976ஆம் ஆண்டுகளில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே கையெழுத்தான ஒப்பந்தங்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால இராஜதந்திரப் புரிதல்களின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டவை. இந்த ஒப்பந்தங்களின் மீதான இறுதித் தீர்ப்பு பெப்ரவரி 2027 வரை ஒத்தி வைக்கப் பட்டிருந்தாலும் தற்போதைய நீதித்துறை அவதானிப்புகள் இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை வளர்க்கப் பெரிதும் உதவும் என நம்பலாம்.

பிரச்சினைகளுக்கு முரண்பாடுகள் மூலம் தீர்வு காண்பதை விட, இருதரப்பு கலந்துரையாடல்கள் மற்றும் இராஜதந்திர வழிமுறைகள் மூலமாகவே நிலையான தீர்வுகளைக் காண முடியும் என்பதை இந்தச் சம்பவம் மீண்டும் உணர்த்து கிறது. இந்திய உச்ச நீதிமன்றத்தின் இந்தக் கருத்துக்கள் மீனவ சமூகங்களின் பாதுகாப்பிற்கும், இரு நாடுகளுக்கு இடையிலான நட்புறவை மேலும் வலுப் படுத்துவதற்கும் ஒரு பாலமாக அமைய வேண்டும்.

# ஷிராந்தி கைது குறித்து கம்பவாரிதி ஜெயராஜ் என்ன சொல்கிறார் தெரியுமா?

ஷிரந்தி ராஜபக்ஸவின் கைது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள் அதிகாரமும் செல்வாக்கும் நிரந்தர மானவை அல்ல என்பதை விளக்கும் வகையில் கம்பராமாயண பாடல் ஒன்றை நினைவு கூர்ந்துள்ளார்.

ராஜபக்ஸ குடும்பத்தினர் எதிர் கொண்டு வரும் நெருக்கடிகளை சுட்டி காட்டிய அவர் ஒரு காலத்தில் உயர்ந்த நிலை யில் இருந்தவர்கள் கால போக்கில் வீழ்ச்சியை சந்திக்க நேரிடலாம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

முதல்நாள் போரில் தோற்று அனைத் தையும் இழந்து நின்ற இராவணனை பார்த்து இராமன் கூறுவதாக கம்பரா மாயணத்தில் இடம்பெறும்,

ஆளையா உனக்கு அமைந்தன மாருதம் அறைந்த பூளையாயின என்ற பாடல் வரிகளை அவர் நினைவு கூர்ந் துள்ளார்.

அதிகாரம் கிடைக்கும் போது நிதானத் துடனும் அறநெறியுடனும் வாழ வேண் டும் என்பதை வலியுறுத்திய கம்பவாரிதி ஜெயராஜ், ஷிரந்தி ராஜபக்ஸவின் நிலை மையை சுட்டி காட்டி,



உயர்வு வரும்போது நாம் நிதானத்து டன் அறம் பேணி வாழ வேண்டும். இல்லாவிட்டால் நமக்கு கிடைத்த வரங் களெல்லாம் பூளை பூவாய் பறந்து போய் விடும் என தெரிவித்துள்ளார்.

மேலும், தன்வினை தன்னை சுட்டிரு க்கிறது. வருத்தப்படுவதை விட நாம் என்ன செய்ய முடியும்? என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்

# 110 கிலோ தங்கம் எங்கே?

நான் இராணுவத் தளபதியாக இருந்த காலத்தில் விடுதலைப் புலிகள் அமைப் பிடமிருந்து சுமார் 220 கிலோ தங்கம் மீட்கப்பட்டது. ஆனால், பின்னர் முன் னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச110 கிலோ தங்கம் என்றே குறிப்பிட்டிரு ந்தார் என அதிர்ச்சி தகவலொன்றை வெளியிட்டுள்ளார். சரத் பொன்சேகா அதிர்ச்சி தகவலொன்றை வெளியிட்டு ள்ளார். நான் இராணுவத்தை விட்டு வெளி யேறிய பின்னரும் தங்கம் மீட்கப்பட்டுள்ளது. அப்படியானால், புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட தங்கத் தில் ஒரு பெரும் பகுதி கொள்ளையடி க்கப்பட்டுள்ளது என்பது தெளிவு என் றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# செம்மணி புதைகுழி வழக்கு:- மரணதண்டனைக் கைதி சோமரத்ன ராஜபக்ஷவிடம் விசாரணை நடத்த அனுமதி






செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் கிரிசாந்தி கொலை வழக்கின் மரண தண்டனை கைதியான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவிடம் விசாரணை மேற்கொள்ள யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

செம்மணி மனித புதைகுழி தொடர்பிலான வழக்கு விசாரணைகள் 19 ஒக் 2026 திங்கட்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நடைபெற்றது வழக்கில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவினால் இடைக்கால அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது

அதேவேளை குற்றப்புலனாய்வு பிரிவினரால் இரு அறிக்கைகள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. அத்துடன் கிரிசாந்தி கொலை வழக்கின் மரண தண்டனை கைதியான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவிடம் விசாரணை மேற்கொள்ள அனுமதி கோரினர்.

அதற்கு அனுமதி வழங்கிய மன்று எதிர் வரும் நவம்பர் மாதம் 19ஆம் திகதி நடைபெறவுள்ள செம்மணி புதைகுழி வழக்கு தொடர்பான நிர்வாக குழு கூட்டத்தில் ஆராய்ந்து மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் எடுக்கப் படும் என மன்று அறிவித்துள்ளது.

1996ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மாணவி கிரிசாந்தி குமாரசுவாமி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வழக்கில், இராணுவ லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ உள்ளிட்டோருக்கு நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்திருந்தது. வழக்கின் விசாரணைகளின் போதே செம்மணிப் பகுதியில் மனிதப் புதைகுழிகள் உள்ளமை தொடர்பான விபரங்களை அவர் வெளிப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க தனக்கு விதிக்கப் பட்டுள்ள வெளிநாட்டுப் பயணத் தடையை நீக்குமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரம் ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

சிங்கப்பூரில் மேற்கொள்ளப்பட்ட இதய அறுவை சிகிச்சையைத் தொடர்ந்து, பெறப்பட வேண்டிய மேலதிக மற்றும் தொடர் மருத்துவ சிகிச்சைகளுக்காக சிங்கப்பூர் செல்ல வேண்டியுள்ளமையால், அதனை கருத்தில் கொண்டு வெளிநாட்டுப் பயணத் தடையை நீக்குமாறு குறித்த நகர்த்தல் பத்திரம் ஊடாகக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலைத் தடுப்பதற்குத் தவறியமை தொடர்பான வழக்கு விசாரணைக்கு அமைவாக, 4 மாதங்களுக்கு முன்னர் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தினால் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## டக்ளஸ் தேவாவின் அலுவலகத்தில் தீவிர தேடுதல்!

யாழ்ப்பாணம், 273, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்திலும் அதன் வளாகத்திலும் குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தினர் பல மணி நேரம் தீவிர தேடுதல் நடவடிக்கையில் 19 ஒக் 2026 திங்கட்கிழமை ஈடுபட்டனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குக் கிடைத்ததாகக் கூறப்படும் தகவலின் அடிப்படையில், யாழ். நீதிமன்றத்தில் தேடுதல் ஆணையைப் பெற்று இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக குற்றப் புலனாய்வு துறையினர் தெரிவித்தனர். இதன் போது 273, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகம் மற்றும் வளாகம் முழுவதும் அதிகாரிகளால் விரிவாகச் சல்லடை போட்டு தேடப்பட்டது.

பரபரப்பை ஏற்படுத்திய பல மணி நேரம் நீடித்த இந்தத் தேடுதலின் நிறைவில்,செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில், கட்சியின் அலுவலக நிர்வாக பொறுப்



பாளரிடம் குற்றப் புலனாய்வு பிரிவினர் வாக்குமூலம் பெற்றுச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



Vivekananthan Sasitharan
*Barrister, Solicitor & Notary Public*



Rajabalini Sasitharan
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

# ஞானசார தேரருக்கு பொது மன்னிப்பு கிடையாது?

ஞானசார தேரருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவது தொடர்பில் அரசாங்கம் தலையிடாது என்பதை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தின் தீர்ப்புகளுக்கு அரசாங்கம் மதிப்பளிக்கும் என்றும், நீதித்துறை நடவடிக்கைகளில் தலையிடப் போவதில்லை என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பதுளையில் 18 ஒக் 2026 நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் மகளிர் பேரணியில் உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். இதன்போது நீதித்துறையின் இறுதித் தீர்மானங்களை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் என்றும், அவற்றை மாற்றியமைக்க நிறைவேற்றுத்துறையிடம் இருந்து எவரும் எதிர்பார்க்கக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி தனது உரையில் கலகொட அத்தே ஞானசார தேரரின் பெயரைக் குறிப்பிட்டு நேரடியாகப் பேசவில்லை. எனினும், தேரரின் சிறைத்தண்டனை மற்றும் அவருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என முன்வைக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பான சர்ச்சையின் பின்னணியில் அவரது கருத்துகள் வெளியாகியுள்ளன.

சட்டங்களை இயற்றுவது நாடாளுமன்றத்தின் பொறுப்பு எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, பொலிஸார், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரிக்கும் ஆணைக் குழு உள்ளிட்ட நிறுவனங்கள் விசாரணைகள் மற்றும் சட்ட அமுலாக்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

எனினும், சட்டத்தை விளக்குவதற்கும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் இறுதி அதிகாரம் நீதித்துறைக்கே, குறிப்பாக உச்ச நீதிமன்றத்திற்கே இருப்பதாக அவர் வலியுறுத்தியுள்ளார்.

நீதிமன்றங்களால் வழங்கப்படும் தீர்ப்புகளுக்கு அரசாங்கம் கட்டுப்பட்டு நடக்கும் என்றும், அதற்கு அப்பால் அரசாங்கத்திடமிருந்து வேறு தீர்மானங்களை எவரும் எதிர்பார்க்கக் கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் 2019ஆம் ஆண்டு ஞானசார தேரருக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதி மன்னிப்பு சட்டவிரோதமானது எனத் தெரிவித்து, கடந்த செப்டெம்பர் 10 ஆம் திகதி உயர் நீதிமன்றம் அதனைச் செல்லுபடியற்றதாக்கியது. இதனைத் தொடர்ந்து, நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக ஞானசார தேரருக்கு விதிக்கப்பட்ட ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனையை நடைமுறைப்படுத்து மாறு ஒக்டோபர் 5ஆம் திகதி மேன் முறையீட்டு நீதிமன்றம் உத்தர விட்டது.

இந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து ஞானசார தேரரை விடுதலை செய்யக் கோரி பல பௌத்த பிக்குகள் மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் குரல் எழுப்பி வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக கொழும்பில் பௌத்த பிக்குகள் பங்கேற்ற போராட்டமும் முன்னெடுக்கப் பட்டது.

இந்நிலையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தற்போதைய கருத்துகள், இந்த விவகாரத்தில் அவர் தலையிட விரும்பவில்லை என்பதற்கான தெளிவான சமிக்ஞையாகப் பார்க்கப்படுகின்றன. இருப்பினும், ஞானசார தேரருக்கு புதிதாக ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்படாது என அவர் நேரடியாக அறிவிக்கவில்லை.

சட்டத்தை அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்தும் நாடொன்றை உருவாக்குவது, எதிர்காலத் தலைமுறையினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானது என்றும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஞானசார தேரருக்கு பொதுமன்னிப்பு:- நான் தவறாக வழி நடத்தப்பட்டேன்- மைத்திரி



கலகொட அத்தே ஞானசார தேரருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கிய விவகாரத்தில் உரிய அமைச்சின் அனுமதியைப் பெறாமல் எனது கையொப்பம் மாத்திரம் பெறப்பட்டது. நான் தவறாக வழி நடத்தப்பட்டேன். இதனால் ஞானசார தேரர் விவகாரத்தில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எனது ஜனாதிபதி பதவிக் காலத்தில் அதிகாரிகளால் மேற் கொள்ளப்பட்ட இந்தத் தவறான நடைமுறையால் மகா சங்கத்தினருக்கு ஏற்பட்ட பாதிப்புக்காக நான் மன்னிப்புக் கோருகிறேன் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஞானசார தேரருக்கு மன்னிப்பு வழங்கிய நடைமுறை தொடர்பாக அவர் 19 ஒக் 2026 திங்கட்கிழமை வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்

கலகொட அத்தே ஞானசார தேரருக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதி மன்னிப்பு தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பில் அந்த மன்னிப்பு வழங்கப்பட்ட நடைமுறையில் தொழில்நுட்பக் குறைபாடு காணப்பட்டமை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு நான் மதிப்பளிக்கிறேன்.

ஞானசார தேரர் தொடர்பில் ஹோமாகம நீதவான் நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகள் நிலுவையில் இருந்தன. அவற்றில் முதலாவது வழக்கு டீ 7417-10 என்ற இலக்கத்தைக் கொண்டது. நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் நீதிமன்றத்தை அவமதித்தமை தொடர்பான இந்த வழக்கில், அரசியலமைப்பின் 105ஆவது உறுப்புரையும் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. இரண்டாவது வழக்கு 40042 என்ற இலக்கத்தைக் கொண்டதாகும்.

இந்த இரண்டு வழக்குகள் தொடர்பிலும் ஞானசார தேரருக்கு மன்னிப்பு வழங்குவதற்காக உரிய அனுமதியைப் பெற வேண்டியிருந்தது. இதற்காக நீதிமன்ற மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சின் அனுமதியைப் பெற வேண்டும் என்று எனது ஜனாதிபதி பதவிக் காலத்தில் ஜனாதிபதி அலுவலகத்தின் சட்டப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த அதிகாரி எனக்கு அறிவித்திருந்தார். எனினும், உரிய அமைச்சின் அனுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக எனது கையொப்பம் மாத்திரம் பெறப்பட்டது. இந்த விடயத்தில் நான் தவறாக வழி நடத்தப்பட்டேன்.

ஞானசார தேரருக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதி (18ம் பக்கம் பார்க்க)

# அமைதியான போராட்டத்திற்கு தடை இல்லை! கலகத்திற்கு சட்டமே பதில் சொல்லும்!




ஒரு ஜனநாயக நாட்டில் அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சிப்பதற்கும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கும், அமைதியான போராட்டங்களில் ஈடுபடுவதற்கும் ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமை உண்டு. அந்த உரிமையை மதிப்பதே ஜனநாயகத்தின் அடிப்படைப் பண்பாகும். அதேவேளை போராட்டம் என்ற பெயரில் வன்முறையையும், கலகத்தையும், சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்கும் செயல்களையும் அனுமதிக்க முடியாது. குறிப்பாக மத அடையாளங்களையும், காவி உடை போன்ற புனிதமான அடையாளங் களையும் முன்னிறுத்தி மக்கள் மத்தியில் குழப்பத்தையும் மோதலையும் உரு வாக்க முயல்வது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

இந்த விடயத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வெளிப்படுத்தியுள்ள உறுதியான நிலைப்பாடு பாராட்டுக்குரியது. அமைதியான போராட்டத்திற்கு அரசாங்கம் தடையாக இருக்காது. ஆனால் எந்த உடையை அணிந்தவராக இருந்தாலும், எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், அந்த அடையாளத்தை முன் வைத்து கலகத்திலோ வன்முறையிலோ ஈடுபட்டால் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் என்ற செய்தி தெளிவானதாக இருக்க வேண்டும். இங்கு கவனிக்க வேண்டியது காவி உடையல்ல் அந்த உடையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் செயல்களே.

காவி என்பது பலருக்கு ஆன்மிகத்தையும் துறவறத்தையும் பிரதிபலிக்கும் புனித அடையாளமாக இருக்கலாம். ஆனால் எந்தவொரு மத அடையாளத்திற்கும் சட்டத்திற்கு மேலான அதிகாரம் கிடையாது. அதேபோன்று, சாதாரண உடையில் இருப்பவருக்கும் சட்டத்தை மீறும் உரிமை கிடையாது. சட்டத்தின் பார்வையில் ஆடையும் அடையாளமும் அல்ல, செயற்பாடு தான் முக்கியம்.

இலங்கை போன்ற பல இனங்களும் பல மதங்களும் வாழும் நாட்டில் இது மிகவும் முக்கியமான செய்தியாகும். மதம் மக்களைப் பிரிப்பதற்காக அல்ல. மனிதர்களை நல்வழிப்படுத்துவதற்காக. மத அடையாளங்களை அரசியல் மோதலுக்கான ஆயுதங்களாக மாற்றும் போது, அதன் பாதிப்பு சம்பந்தப்பட்டவர்களோடு மட்டும் முடிவதில்லை ஒட்டுமொத்த சமூக நல்லிணக்கத்தையும் அது பாதிக்கிறது.

அமைதியாக வீதியில் நின்று எதிர்ப்பை வெளிப்படுத்தும் ஒருவரை அரசு அஞ்சத் தேவையில்லை. ஆனால் அந்த அமைதியான உரிமையின் பின்னால் மறைந்து வன்முறையைத் தூண்டும் முயற்சிகளுக்கு அரசு உறுதியுடன் பதிலளிக்க வேண்டும். அதுவே ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் பாதுகாக்கும் பொறுப்பான அணுகுமுறையாகும்.

அரசாங்கத்தை ஆதரிப்பவராக இருந்தாலும், எதிர்ப்பவராக இருந்தாலும் ஒரே சட்டமே நடைமுறையில் இருக்க வேண்டும். பெரும்பான்மையினருக்கொரு சட்டம், சிறுபான்மையினருக்கொரு சட்டம் என்ற நிலை உருவாகக் கூடாது. மதத் தலைவராக இருந்தாலும், அரசியல்வாதியாக இருந்தாலும், சாதாரண குடிமகனாக இருந்தாலும் சட்டத்தை மீறினால் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். ஜனாதிபதி அநுராவின் இந்த உறுதியான அறிவிப்பு வெறும் ஒரு அரசியல் அறிக்கையாக இல்லாமல், நாட்டில் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டும் நடை முறைச் செயற்பாடாகவும் அமைய வேண்டும். அதேநேரத்தில் சட்ட அமுலாக்கம் எந்தவொரு சமூகத்தையோ மதத்தையோ குறிவைப்பதாகத் தோன்றாத வகையில், பாகுபாடற்றதும் வெளிப்படையானதுமாக இருக்க வேண்டும்.

இலங்கைக்கு இன்று தேவைப்படுவது கலகத்தின் அரசியல் அல்ல. கருத்து மோதல்களை ஜனநாயக வழியில் எதிர்கொள்ளும் அரசியல் பண்பாடாகும். குரலை ஒடுக்காத அரசு வேண்டும். கலகத்தை அனுமதிக்காத அரசும் வேண்டும். மதத்தை மதிக்கும் நாடு வேண்டும். மதத்தின் பெயரில் சட்டத்தை மீற அனுமதிக்காத ஆட்சியும் வேண்டும். இந்த இரண்டிற்கும் இடையிலான தெளிவான கோட்டை அரசாங்கம் உறுதியாகப் பேணுமானால், அது நாட்டின் சட்ட ஆட்சிக்கும் சமூக நல்லிணக்கத்திற்கும் நிச்சயம் வலு சேர்க்கும் என்பதையே ஈழநாடு வலியுறுத்துகின்றது.

# இலங்கையின் ஸ்திரத்தன்மையே டெல்லியின் மூலோபாய இலக்கு - இந்திய ஒயர்ஸ்தானிகர் தெரிவிப்பு!



இந்தியா – இலங்கை இடையேயான உறவு என்பது வெறும் மனிதாபிமான உதவிகளோ அல்லது நெருக்கடிக் கால மேலாண்மையோ மட்டும் அல்ல. மாறாக இது பிராந்தியத்தின் நீண்டகால ஸ்திரத்தன்மை, பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பை மையமாகக் கொண்ட ஒரு வலுவான புவிசார் அரசியல் பங்காண்மை என இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா சுட்டிக்காட்டியுள்ளார்.

தனியார் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேடசெவ்வியிலேயே இவர் இதனை குறிப்பிட்டுள்ளதுடன், 2022ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா பில்லியன் கணக்கான டொலர் அவசர உதவிகளை வழங்கிய போதிலும் இந்தியா – இலங்கை உறவு இப்போது வெறும் நெருக்கடி கால உதவியைத் தாண்டி, எதிர்கால பொருளாதார வளர்ச்சி மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் கட்டமைக்கப்பட்டதொரு நிறுவனப் பங்காண்மையாக பரிணமித்துள்ளது எனவும் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில் இலங்கையுடனான உறவில் இந்தியா எதையும் திணிக்க முயலவில்லை. இலங்கை அரசாங்கமும் மக்களும் எதை விரும்புகிறார்களோ மற்றும் எதனை முன்னுரிமையாகக் கருதுகிறார்களோ அதற்கேற்ப துணையாக நிற்கவே புது டெல்லி தயாராக உள்ளது. இலங்கையின் நிதி மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை என்பது இந்தியாவின் மூலோபாய நலன்களுடன் நேரடியாகத் தொடர்புடையது. நிதி ஸ்திரத்தன்மை மட்டுமன்றி அனைத்துத் துறைகளிலும் இலங்கை பலமடைவதையே இந்தியா விரும்புகிறது. பொருளாதார பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு மற்றும் மருத்துவத் துறை பாதுகாப்பு ஆகியவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை ஆகும். அண்டைய நாட்டில் ஏற்படும் எந்தவொரு சீர்குலைவும் பிராந்தியப் பாதுகாப்பைப் பாதிக்கும் என்பதால், இலங்கையின் அனைத்து துறை சார்ந்த ஸ்திரத்தன்மைக்கும் உறுதுணையாக இருப்பது இந்தியாவின் கடமையாகும்.

இரு நாடுகளின் தேவைகள் மற்றும் விருப்பங்களின் அடிப்படையில் பரிமாற்றங்கள் இடம் பெறுகின்றன. இலங்கை அரசாங்கம் தனது முன்னுரிமைகளைத் தீர்மானிக்கும் பட்சத்தில், அதற்குத் தேவையான தொழில்நுட்ப, நிதி மற்றும் பொருளாதார உதவிகளை வழங்க இந்தியா எப்போதும் தயாராக உள்ளது.

இன்றைய சிக்கலான உலகச் சூழலில் பொருளாதாரப் பாதுகாப்பையும், எரிசக்தி மற்றும் உணவுப் பாதுகாப்பையும் தனித்தனியாகப் பார்க்க முடியாது. இரு நாடுகளும் தங்களது சந்தைகளை பரஸ்பரம் திறந்து கொள்வதும், விநியோகச் சங்கிலிகளை வலுப்படுத்துவதும் இரு நாட்டு மக்களின் எதிர்கால வளத்துக்கு அவசியமானது என்றார்.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் அதிகரிக்கும் வல்லரசுப் போட்டிகளுக்கு மத்தியில், இந்திய உயர்ஸ்தானிகரின் இந்தக் கருத்துக்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்த இராஜதந்திர நகர்வாகப் பார்க்கப்படுகின்றன.

இலங்கையில் பிற வெளிநாட்டுச் செல்வாக்குகள் அதிகரித்து வரும் சூழலில் இந்தியா ஒரு ஆதிக்க சக்தியாக அன்றி, இலங்கையின் இறையாண்மைக்கும் தேவைகளுக்கும் மதிப்பளிக்கும் நம்பகமான மூலோபாயப் பங்காளியாக தன்னை முன்னிறுத்த முயல்கிறது.

இலங்கையின் பொருளாதார மற்றும் உள்கட்டமைப்பு பாதுகாப்பைத் தனது சொந்த தேசியப் பாதுகாப்பின் ஒரு பகுதியாகக் கருதும் டெல்லி, பிராந்தியத்தில் தனது மூலோபாய மேலாதிக்கத்தை வலுப்படுத்தவும், அண்டைய நாடுகளுடனான அயல் நாட்டுக்கு முதலிடம் கொள்கையை மேலும் ஆழப்படுத்தவும் இத்தகைய மென்யான இராஜதந்திர அணுகுமுறையைக் கையாண்டு வருவதாகப் புவிசார் அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதேவேளை இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகளுக்கு டில்லியில் விசேட திறன் விருத்தி மற்றும் பயிற்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்கிடையிலான கல்வி மற்றும் நிர்வாகத் துறை உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இப்பயிற்சி திட்டம் நடத்தப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த 20 அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று, டில்லியில் அமைந்துள்ள தேசிய கல்வி திட்டமிடல் மற்றும் நிர்வாக நிறுவனத்தில் ஒக்டோபர் 05 முதல் 16 வரை நடைபெற்ற விசேட பயிற்சி மற்றும் திறன் விருத்தித் திட்டத்தில் பங்கேற்றது.

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation
• Funeral & Memorial Service
• Reception
• Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு சிங்கள பௌத்த வேட்பாளராக வளர்க்கப்படும் ஞானசார தேரர்?

இலங்கை அரசியலில் ஞானசார தேரர் கடந்த சில நாட்களாக பெரும் புள்ளி யாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார். இதன் நோக்கம், பின்னணி, நீண்ட காலத்திட்டம் என்பவை பற்றி பல் வேறு தகவல்கள் பரவலாக வெளி வருகின்றன.

நாட்டின் மூத்த அரசியல் தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் அனை வரும் கூட்டுச் சேர்ந்தாலும் எந்தத் தேர்தல்களிலும் வெற்றி பெறக்கூடிய வாய்ப்பு இப்போது காணப்படவில்லை என்பது பொதுவான அபிப்பிராயம். நீதிமன்றப் படிகளை தரிசிப்பவர்களாக வும், குற்ற விசாரணைகளை தொடர் ந்து எதிர் பார்த்திருப்பவர்களாகவும் இவர்களில் பலரும் உள்ளனர்.

இதனால் இலங்கையில் இனி ஒரு கட்சி ஆட்சி தான் தொடரக் கூடும் என்ற சந்தேகத்தை இவர்களே பகிரங்க மாகத் தெரிவிக்கும் நிலைமைக்கு அரசியல் சுழிமாறிச் செல்கிறது. ராஜ பக்சக்களின் இளவரசர் என்று அழை க்கப்பட்டு வந்த நாமல் பேபியின் எதிர்காலம் ஜே.வி.பி.யின் பெலவத்தை யில் தங்கியுள்ளது.

கடந்த காலங்களில் தோலிருக்க சுளை பிடுங்கியவர்கள் என்ற அடையாளம் இடப்பட்டவர்கள் தாங்கள் கைது செய்யப்படலாமென்று எதிர்பார்ப்பதால் முற்கூட்டிய பிணைக்கு நீதிமன்றங் களை நாடும் நிலை அதிகரிக்கிறது. இன்னொரு தொகையினர் மருத்துவ மனைகளை தங்கள் வாழ்விடங்களாக மாற்றி வருகின்றனர். இது தொடர்பாக முன்னாள் அரசியல்வாதியும் தற் பொழுது பத்திரிகையாளராகவும் கொழும்பில் பிரகாசிக்கும் ஒரு பிரபலத் துடன் சில நாட்களுக்கு முன்னர் உரையாடும் போது ஒரு விடயத்தை மிகவும் சீரியஸாக எடுத்துச் சொன் னார்.

ஞானசார தேரர் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சிங்கள பௌத்தத்தின் பொதுவேட்பாளராக நிறுத்தப்படுவாரா னால் ஆச்சரியப்பட நேராது என்பது அவர் கூற்று. அத்துடன், ஞானசார தேரர் யார் என்பதை அறிய வேண்டு மானால் விக்கிபீடியாவை பார்ப்பது அவசியம் என்றும் கூறினார். அவர் கூறியதை அறிய விக்கிப்பீடியாவை தேடியபோது பின்வரும் சில முக்கிய மான தகவல்களை படிக்க நேர்ந்தது. அதில் சிலவற்றை மட்டும் கீழே தருகிறேன்:

தென்னிலங்கையில் பல அரசியல் தலை வர்களை பிரசவித்தது காலி மாவட் டம். இங்குள்ள கலகொட அத்த என்ற கிராமம் ஞானசாரரின் பிறப்பிடம். பல பிள்ளைகளைக் கொண்ட சாதாரண குடும்பம் ஒன்றில் பிறந்தவர் இவர். தமது வாழ்க்கையை காலியிலுள்ள அடர்ந்த காட்டுப் பகுதியில் தமக்குத் தாமே கடுமையான ஒழுக்க விதிகளை வகுத்து மடாலய வாழ்க்கையை மேற் கொண்டதாக இவர் அடிக்கடி கூறு வார். ஆனால் 2025ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வெளியான கார்டியன் பத்திரிகை இதற்கு மாறாக இவர் பற்றி குறிப்பிட்டுள்ளது. இளமைக் காலத் தில் ஒரு முரட்டுத்தனமானவராக இருந்ததாகவும், சிறை வாழ்க்கை யிலிருந்து தப்புவதற்காக பௌத்த துறவிகளின் காவி உடையை அணி ந்ததாகவும் தெரிவித்துள்ளது.

பௌத்த துறவிகளுக்கென உருவாக்க ப்பட்ட ஜாதிக ஹெல உறுமயவில் 2000ம் ஆண்டில் இணைந்த இவர் நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வி யடைந்ததைத் தொடர்ந்து ராஜபக்ச குடும்பத்தோடு நெருக்கமாகி அரசிய லில் ஒரு முக்கிய புள்ளியானார். 2012ல் சிங்கள பௌத்த தேசிய வடிவமான பொதுபல சேனவை ஆரம்பித்து அதன் செயலாளராகி தமது இனவாத ஆவேச உரைகளாலும் செயற்பாடு களாலும் பிரபலமானார்.

இலங்கையில் சிங்கள பொலிஸ் சிங்கள இராணுவம் இருக்கிறது. இனி மேல் ஒரு முஸ்லிமோ வேறொரு சிறு



பான்மையினரோ சிங்களவரில் கை வைத்தால்... அது அவர்களின் இறுதி யாக அமையும் என்று மாபெரும் பேரணியில் கர்ச்சித்து தம்மை சிங்கள பௌத்த காவலராக முதன்மைப்படுத் தினார்.

2014 யூன் மாதம் அளுத்கம என்ற முஸ்லிம் கிராமத்தில் ஒரு பௌத்த பிக்குவுக்கும் முஸ்லிம் இளைஞருக் கும் இடையில் தர்க்கம் இடம்பெற்ற போது 'போதும், இது போதும்' என்ற இவரது சுலோகம் முஸ்லிம்களு க்கு எதிரான ஆர்ப்பாட்டமாக மாறி அவர்களின் வாழ்விடங்களை தீக்கிரை யாக்கியது. அவ்வேளையில் இரண்டு இந்துக் கோவில்களும் தாக்குதலுக் குள்ளாகின.

இதற்கு முன்னராக 2000ம் ஆண்டில் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் இல் லாது மதுபோதையில் வாகனம் ஒன்றை ஓட்டிச் சென்று ஏற்படுத்திய விபத்தில் பொலிசாரினால் கைதாகினார் (நீதிமன்ற வழக்கு இலக்கம் 6315–2000). நீதிமன்றத்தை அவமதித்த வழக்கொன்றில் 2018ம் ஆண்டு ஆறு வருட சிறைத்தண்டனை பெற்ற இவருக்கு, 2019 மே மாதம் 23ம் திகதி அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமக்கான அதிகாரத்தைப் பயன்படுத்தி பொதுமன்னிப்பு வழங்கி னார்''.

ஆனால், 2026 செப்டம்பர் 10ம் திகதி மூன்று நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்றம் பொது மன்னிப்பை ரத்துச் செய்து, சிறைத்தண்டனையின் மிஞ்சிய காலத்தை அவர் சிறையில் கழிக்க வேண்டுமென உத்தரவிட்டது. இதனைத் தொடர்ந்து தலைமறை வான ஞானசார தேரரை அடர்ந்த காட்டுப் பகுதியில் வைத்து கைது செய்து சிறைச்சாலையில் அடைத் தது. மீண்டும் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது இவரது காவியுடை நீக்கப்பட்டு சிறைச்சாலை உடை வழங்கப்பட்டதே இப்போது பெரிய விடயமாக பேசப்படு கிறது.

மகாசங்கத்தினர் ஜனாதிபதி அநுர குமரவை சந்தித்து ஞானசார தேரரு க்கு பொதுமன்னிப்பு வழங்குமாறு விடுத்த வேண்டுகோளை அவர் ஏற்க வில்லை. தனிப்பட்ட ஒருவருக்கு சலுகை காட்டுவதற்காக சட்டத்தை மீற முடியாது என்பது ஜனாதிபதியின் நிலைப்பாடு. ஞானசார தேரர் என்ப வருக்கு தனியாக விதிவிலக்கு அளிக்க முடியாது என்று கூறிய ஜனாதிபதி அநுர குமர பொதுவாக பௌத்த துறவிகளின் காவியுடை தொடர்பாக சிறைச்சாலை சட்டத்தில் திருத்தங் களை கொண்டு வரலாமென்றும் அதற்கு ஒரு குழுவை நியமித்து முடிவெடுக்கலாமென்றும் தெரிவித்த கருத்தை மகாசங்கத்தினர் ஏற்றுக் கொண்டு ஜனாதிபதிக்கு நன்றி தெரி வித்தனர்.

ஆனால், பிரச்சனையாகியுள்ள இவ் விடயத்தை அரசியலாக்கி அதில் லாபம் தேட விரும்பிய பெயர் குறிப் பிட முடியாத பௌத்த துறவிகள் கண்டியிலிருந்து கொழும்பு ஜனாதிபதி அலுவலகம் நோக்கி பாதயாத்திரையை ஆரம்பித்தனர். நாடு தழுவிய சிங்கள பௌத்தர்களை எழுச்சியடையச் செய்து அநுர குமர அரசுக்கு எதிராக ஓர் அறகலையை உருவாக்குவது இதன் பின்னணியாக இருந்தது. எனி னும், நீதிமன்ற உத்தரவைத் தொடர் ந்து ஜனாதிபதி செயலகம் முன்னால் நடத்திய ஆர்ப்பாட்டத்தை பௌத்த துறவிகள் கைவிட நேர்ந்தது.

ஞானசார தேரருக்கு பொதுமன்னிப்பு வழங்குவதை அநுர குமர முழுமை யாக மறுத்து விட்டார். ஆனால், பொதுவாக சிறைச்சாலை சட்டத்தில் பௌத்த துறவிகள் அணியும் காவி உடை தொடர்பாக மாற்றங்களை கொண்டு வர துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமென்ற இவரது கூற்றை மகாசங்கத்தினர் ஏற்றுக் கொண்டுள்ள னர். ஆனால், வீதியில் ,றங்கி ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்ட பௌத்த துறவி கள் கேட்பது சட்டத்திருத்தம் அல்ல. ஞானசார தேரருக்கு மீண்டும் பொது மன்னிப்பு வழங்க வேண்டுமென்பதே இவர்களது கோரிக்கை.

அரசியல் என்பது தீர்வு காண முடி யாதவைகளை கேட்டுப் போராடுவது. ஞானசார தேரருக்கு ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்பட மாட் டாது என்பது போராட்டம் நடத்தும்

கட்டுரையாளர்:-
**பனங்காட்டான்**

பிக்குகளுக்கு நன்கு தெரியும். எக் காரணம் கொண்டாவது பொது மன்னிப்பை ஜனாதிபதி வழங்குவாரா னால் 2019ல் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன வழங்கி பொது மன்னிப்பு தவறென்று உயர்நீதிமன்றம் கடந்த மாதம் வழங்கிய தீர்ப்பை மீறிய குற்றச்சாட்டு அநுர குமர மீதும் பாயும்.

இந்தப் பின்னணியில் பார்க்கையில் அநுர குமர ஆட்சியில் ஞானசார தேரருக்கு பொதுமன்னிப்பு கிடைக்கு மென எதிர்பார்ப்பது மடைத்தனம். இது விடயத்தில் ஜே.வி.பி.யின் மறு வடிவமான தேசிய மக்கள் சக்தி நிலை யான நிலைப்பாட்டில் இருப்பது தெரி கிறது.

இது ஒருபுறமிருக்க, பௌத்த துறவி களின் காவியுடை தொடர்பாகத் தான் சிறைச்சாலைகள் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படுகிறதா அல்லது அனைத்து மதத்தலைவர்கள் விடயத் திலும் பொதுவானதாக திருத்தம் மேற்கொள்ளப்படுகிறதா என்பது பற்றி ,துவரை தெளிவாகவில்லை. இது தொடர்பாக துரிதமாக நடவடிக்கை எடுத்து பொதுமக்களுக்கு விளக்க மளிக்க வேண்டிய கடப்பாடு தமிழ் – முஸ்லிம் அரசியல் கட்சிகளுக்கும் அதன் தலைமைகளுக்கும் உண்டு.

ஊடகங்களிலும் பொதுவெளியிலும் ,து தொடர்பாக தெரிவிக்கப்படும் விடயங் களைப் பார்க்கையில், பௌத்த துறவி களின் காவியுடை சம்பந்தமாகவே சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட விருப்பதாக அறியமுடிகிறது. ,துதான் நடைமுறையெனில் தேசிய மக்கள் சக்தி அரசும் பௌத்த மதத்துக்கே முன்னுரிமை வழங்கும் நிலையிலிருப் பதை மற்றைய இன–மத மக்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

எதுவுமே தெரியாதவர்கள் அல்லது புரியாதவர்கள் போல தமிழ் – முஸ்லிம் அரசியல் தலைமைகள் பாசாங்கு பண்ணிக் கொண்டிருப்பார்களேயா னால் சட்டம் ஓர் இருட்டறை யாகவே தொடரும். இது ஞானசார தேரர் மட்டுமன்றி இவர் போன்ற மதவாதிகள் நாட்டின் ஜனாதிபதியாகுவதற்கு இலகு வாக வழி வகுத்து விடலாம்.



# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

17 ஒக்டோபர் 2026 2026 முதல் 23 ஒக்டோபர் 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர் களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கணபதிப்பிள்ளை பத்மாவதி

வேலணை முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை அவர்களது 11வதுஆண்டு நினைவு நாள் 19 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இரகுநாதர் மயில்வாகனம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு மயில்வாகனம் இரகுநாதர் அவர்களது 11வது ஆண்டு நினைவு நாள் 18 ஒக்டோபர் 2026 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு மயில்வாகனம் இரகுநாதர் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 30வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கந்தையா பேரின்பநாதன்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா பேரின்பநாதன் (லெப் கேணல் நாதன்) அவர்களது 30வது ஆண்டு நினைவு நாள் 26 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது சகோதரி திருமதி யோகாம்பிகை இலங்கேஸ்வரன் அவர்கள் அன்னாரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார். திரு நாதன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு ஜெயேந்திரன் இராஜேந்திரன்

யாழ்ப்பாணம் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு ஜெயேந்திரன் இராஜேந்திரன் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 24 செப்டம்பர் 2026 ஆகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 21 ஒக்டோபர் 2026 புதன்கிழமை அன்பு, பாரதி செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு ஜெயேந்திரன் இராஜேந்திரன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் மூன்று இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 17வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பொன்னையா அன்னம்மா

கச்சாய் வீதி கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பொன்னையா அன்னம்மா அவர்களது 17வது ஆண்டு நினைவு நாள் 21 ஒக்டோபர் 2026 புதன்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 24 ஒக்டோபர் 2026 சனிக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி பொன்னையா அன்னம்மா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 15வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வே.இ.இராசையா அவர்கள்

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த சமூகத் தொண்டர் திரு வே.இ.இராசையா அவர்களின் 15வது ஆண்டு நினைவு நாள் 27 ஒக்டோபர் 2026 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு இராசையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




10 ஒக்டோபர் 2026 சனிக்கிழமை யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி சசிதரன் சசிகலா இணையர்களின் செல்வப்புதல்வன் துவாரகனின் 30வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் துவாரகன் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




11 ஒக்டோபர் 2026 ஞாயிற்றுக்கிழமை யாழ்.திருநெல்வேலியைச் சேர்ந்த திரு துரையப்பா அழகரத்தினம் அவர்களதும் வேலணையைச் சேர்ந்த திரு இரத்தினம் செல்லத்துரை அவர்களதும் நினைவாக அன்னார்களது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




12 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி ஜெயராணி சாந்தகுமார் அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி ஜெயராணி சாந்தகுமார் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



12 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் ராம் சபாரெத்தினம் செல்வன் கிருஷ்ணா சபாரெத்தினம் சகோதரர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன்கள் ராம் கிருஷ்ணா சகோதரர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




12 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் ராம் சபாரெத்தினம் செல்வன் கிருஷ்ணா சபாரெத்தினம் சகோதரர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன்கள் ராம் கிருஷ்ணா சகோதரர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




12 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் ராம் சபாரெத்தினம் செல்வன் கிருஷ்ணா சபாரெத்தினம் சகோதரர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன்கள் ராம் கிருஷ்ணா சகோதரர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




13 ஒக்டோபர் 2026 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பிறேம்குமார் கலாஜினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் நிருஜன் பிறேம்குமாரின் இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் நிருஷன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுளக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




15 ஒக்டோபர் 2026 வியாழக்கிழமைகனடாவில் வசிக்கும் திரு திருமதி விஜயகுமார் ரேவதி தம்பதிகளின் அன்பு மகளும் திரு திருமதி சசிதரன் சசிகலா தம்பதிகளின் அன்பு மருமகளும் திரு துவாரகனின் அன்புத் துணைவியாருமான திருமதி சபீனா துவாரகனின் இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி சபீனா துவாரகம் அவர்கள் தனது குடும்பத்தினர் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிந்தார்




12 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சௌந்தரராஜா கருணகலாவதி தம்பதிகளின் செல்வப்புதல்வன் சஞ்சேய் சௌந்தரராஜாவின் 15வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக செல்வன் சஞ்சேய் 17 ஒக்டோபர் 2026 சனிக்கிழமையன்று தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




18 ஒக்டோபர் 2026 ஞாயிற்றுக்கிழமை அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இரகுநாதர் மயில்வாகனம் அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




19 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமை வேலணை முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




24செப்டம்பர் 2026 வியாழக்கிழமை யாழ்.மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு. ஜெயேந்திரன் இராஜேந்திரன் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 21 ஒக்டோபர் 2026 புதன்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




24 செப்டம்பர் 2026 வியாழக்கிழமை யாழ்.மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு. ஜெயேந்திரன் இராஜேந்திரன் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 21 ஒக்டோபர் 2026 புதன்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




24 செப்டம்பர் 2026 வியாழக்கிழமை யாழ்.மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு. ஜெயேந்திரன் இராஜேந்திரன் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 21 ஒக்டோபர் 2026 புதன்கிழமை செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




23 ஒக்டோபர் 2026 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு கோணேஸ்வரன் இராசையா அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு கோணேஸ்வரன் இராசையா அவர்கள் தனது குடும்பத்தானருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்

# அநுராதபுரத்தில் அநுராவுக்கு ஆதரவாகத் திரண்ட பௌத்த பிக்குகளும் பொதுமக்களும் பேரணி!





ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்துக்கு மக்கள் வழங்கிய ஆணையைப் பாதுகாக்க வேண்டும் என்றும், திருடர்கள், ஊழல்வாதிகள் மற்றும் போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி, 'ஜனவரம புரவசியோ' (மக்கள் ஆணைக்கான பிரஜைகள்) அமைப்பின் ஏற்பாட்டில் பௌத்த பிக்குகள் தலைமையில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்ற இரண்டாவது பாரிய அமைதிப் பேரணி 19 ஒக் 2026 திங்கட்கிழமை அநுராதபுரத்தில் நடைபெற்றது.

பதாகைகளை ஏந்தியவாறு அநுராதபுரம் நகருக்குள் பேரணியாகச் சென்ற பௌத்த பிக்குகளும் பொதுமக்களும், ஜனாதிபதிக்கு மக்கள் வழங்கிய ஆணையின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டும் என்றும், வடக்கிலும் தெற்கிலும் இளைஞர்கள் ஆயுதப் போராட்டங்களில் ஈடுபட்டதற்கு நாட்டில் சட்டம் சீர்குலைந்திருந்தமையும் ஒரு காரணம் என்றும் எனவே நாட்டில் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

இதன்போது தேரர் ஒருவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்

ஒரு நாடு முன்னேறுவதற்கு முதன்மையானது அந்த நாட்டின் சட்டக் கட்டமைப்பும் ஒழுக்கமும் ஆகும். 5,000 ஆண்டுகள் நிலைத்திருக்க வேண்டிய உன்னதமான பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பதற்கு வினயம் அவசியமாகும். அதேபோன்று, எந்தவொரு நாட்டிலும் முதலிடம் வகிக்க வேண்டியது சட்டக் கட்டமைப்பாகும்.

சட்டம் சீர்குலைந்திருந்த நாட்டை தற்போது இளைஞர்கள் ஓரளவுக்குச் சீரமைத்து முன்னோக்கிக் கொண்டு செல்லும் நிலையில் அதனை மீண்டும் சீர்குலைப்பதற்குப் பல்வேறு தரப்பினர் பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் தோற்றுவிக்கின்றனர். எனவே, இத்தகைய செயற்பாடுகளைக் கண்டு இளைஞர்கள் மனம் தளரவேண்டிய அவசியமில்லை.

கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியுள்ளது. அவற்றைப் படிப்படியாகத் தீர்த்துக் கொண்டு முன்னோக்கிச் செல்லவேண்டும். மதம் எதுவாக இருந்தாலும், நாட்டின் சட்டக் கட்டமைப்பைச் சீரமைத்து நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்ல வேண்டும்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க உள்ளிட்ட அரசாங்கத்தின் அனைத்துத் தரப்பினரிடமும் நாம் வலியுறுத்துவது என்னவென்றால், நாட்டில் சட்டம் அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதாகும். ஜனாதிபதி கூறுவதைப் போன்று சட்டம் அனைவருக்கும் மேலானதாக இருக்க வேண்டும். எனக்கும், நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் சட்டமே முதன்மையானதாக இருக்க வேண்டும். இரண்டு சட்டங்கள் இருந்தால், அது இரண்டு நாடுகள் இருப்பதற்குச் சமமாகும்.

வடக்கில் இளைஞர், யுவதிகள் ஏன் ஆயுதப் போராட்டத்துக்குத் தள்ளப்பட்டார்கள்? தெற்கில் இளைஞர், யுவதிகள் ஏன் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்? இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதற்கு நாட்டில் சட்டம் சீர்குலைந்திருந்தமையும் ஒரு காரணமாகும். எனவே தற்போது நாடு ஓரளவுக்குச் சீரமைக்கப்பட்டு முன்னோக்கிச் செல்லும் இந்தச் சந்தர்ப்பத்தில், மீண்டும் நாட்டைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. நாட்டின் சட்டக் கட்டமைப்பைச் சீரமைத்து அனைவருக்கும் ஒரே சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை ஜனாதிபதி உள்ளிட்ட ஆட்சியாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

நீண்டகால அனுபவங்களின் அடிப்படையில் பல்வேறு விடயங்களை நாம் பார்த்திருக்கிறோம். நாட்டின் வளங்கள் மக்களைச் சென்றடையாத நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டின் உயர்மட்ட அரசியல் அதிகாரிகளும் உயர்மட்டத்தில் இருந்த சில பௌத்த மதகுருமார்களும் இணைந்து நாட்டை இந்த நிலைக்குக் கொண்டு வந்தனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பதவியிலிருந்து விலகிச் செல்லும் போது நாட்டை ஒரு கேக் துண்டுடன் ஒப்பிட்டு, 'இது ஒரு கேக் அனைவரும் இதைப் பகிர்ந்து கொள்ளுங்கள்' என்று கூறியிருந்தார். ஆனால், கடந்த காலங்களில் நாட்டின் வளங்களில் ஒரு பகுதியைக் கூட மக்களுக்குக் கிடைக்காத நிலை ஏற்பட்டது. இதன் விளைவாக நாடு பாரிய வீழ்ச்சியைச் சந்தித்தது.

தற்போது இளைஞர்கள் நாட்டின் ஆட்சிக் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். அதலபாதாளத்துக்குச் சென்ற நாட்டை மீண்டும் முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு வரும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனவே, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க உள்ளிட்ட ஆட்சியாளர்கள் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டும். அனைவருக்கும் சட்டம் சமமாக நடைமுறைப்படுத்தப்பட்டு, நாடு முன்னேற்றப் பாதையில் தொடர்ந்து பயணிக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை என்றார்.



# ஒரு நோபல் பரிசும்:- உலக அரசியலும்

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
– யசீந்திரா –



தென்னாபிரிக்கரான நவநீதம்பிள்ளை, இந்த ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசை பெற்றிருக்கின்றார். முக நூல்களில் பல தமிழர்களும் தங்களின் கொண்டாட்ட மனோநிலையை வெளிப்படுத்தியிருக்கின்றனர். அவருடன் எடுத்து புகைப்படங்களை பதிவிட்டு தங்களின் மகிழ்ச்சியை காண்பித்து வருகின்றனர். அவர் ஒரு தமிழர் என்றவாறான புரிதலும் பலரிடம் இருப்பதாக தெரிகிறது. தமிழ்ச் சூழலின் அரசியல் வறுமைக்கான சான்றுகளில் இதுவும் ஒன்று. எதைக் கொண்டாடுவது என்பதைக் கூட அறிய முடியாத மொட்டை மூளையாளர்களாகவே பெரும்பாலான வர்கள் இருக்கின்றனர். ஆனால் நவநீதம்பிள்ளை எங்குமே தன்னை இனரீதியாக அடையாளப்படுத்திய ஒருவரல்ல. அதற்கான தேவையும் அவருக்கில்லை.



நவிப்பிள்ளை, 2008 – 2014 வரையான காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளராக இருந்தவர். இந்தக் காலத்தில் தான் இலங்கையின் இறுதி யுத்தம் தொடர்பான மனித உரிமை மீறல் விவகாரம் சர்வதேச மயப் பட்டது. 2013 இல்பிள்ளை, இலங்கையின் நிலைமைகளை ஆராய் வதற்காக விஜயம் செய்திருந்தார்.

வடக்கு கிழக்குப் பகுதிகளின் நிலைமைகளை நேரடியாக ஆராய்ந் திருந்தார். அவர் திருகோணமலைக்கு விஜயம் செய்த போது, அவரைச் சந்தித்த சிவில் சமூகப் பிரதிநிதிகளில் இந்தக் கட்டுரையாளரும் ஒருவர்.

இலங்கையின் மனித உரிமைகள் விவகாரத்தில் இறுதி கட்ட யுத்தம் தொடர்பான விடயங்களை கவனத்தில் கொள்கின்றீர்களா அல்லது அதற்கு பின்னரான காலப்பகுதியையும் கவனத்தில் கொள்கின்றீர்களா என்று நான் கேட்ட கேள்விக்கு

அவர் அளித்த பதிலோ புதிரானது. மனிதஉரிமைகள் பேரவை என்பது ஐக்கிய நாடுகள் சபை அல்ல – அங்கு பொதுச் சபை உண்டு, பாதுகாப்புப் பேரவை உண்டு. அவரின் பதில் உடனடியாக எனக்கு விளங்கவில்லை பின்னர் மீண்டும் ஒரு முறை யோசித்த போது தான் விளங்கியது. மனித உரிமைகள் பேரவையால் முடிவு களை எடுப்பதால் மட்டும், விடயங்கள் நகர்ந்து விடப் போவதில்லை என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகவே அவர் அவ்வாறு பதிலளித்திருக்கின்றார்.

அவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர், கனடிய புலம்பெயர் அமைப்பு ஒன்றின் அழைப்பில், நினைவுப் பேருரை ஆற்றியிருந்தார். அதில் இப்படி கூறியிருந்தார். ஐக்கிய நாடுகள் சபை என்பது, புவிசார் அரசியல் போட்டிக்குள்ளும் நாடுகளின் குறுகிய தேசியவாத நலன்களுக்குள்ளும் சிக்குப் பட்டிருக்கின்றது. இதற்கு எனது சொந்த நாடான தென்னாபிரிக்காவும் விதிவிலக்கல்ல. அவருடைய மேற்படி .இண்டு கருத் துக்களையும் ஒப்பிட்டு நோக்கினால் உங்களால் உலக அரசியலை ஓரளவு புரிந்து கொள்ள முடியுமல்லவா! நவநீதம் பிள்ளை அவரது பதவிக்கும் சிந்தனைக்கும் உண்மையாக இருந்தவர் என்பதில் இரண்டாவது பேச்சுக்கு இடமில்லை. நோபல் பரிசுக்கான அவரது தகுதி தொடர்பிலும் எவரும் கேள்வி எழுப்ப முடியாது தான் ஆனால் அவர் தற்போது பெற்றிருக்கும் அமைதிக்கான நோபல் பரிசு என்பது அதிகம் அரசியல் மயப்படுத்தப்பட்ட ஒன்று என்பதையும் எவராலும் மறுக்க முடியாது.

கடந்த ஆண்டு, வெனிசுலாவின் எதிர் கட்சித்தலைவரான மரியா கொரினா மச்சா டோவிற்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. அப்போதைய வெனிசுலாவின் ஆட்சியாளராக இருந்த நிக்கலோஸ் மதுராவின் சர்வாதிகாரப் பிடியிலிருந்து, இரகசியமாக நாட்டை விட்டுவெளியேறியிருந்த நிலையிலேயே அவருக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது.

வெனிசுலாவில் ஜனநாயகத்தை மீட்பதற்கான இரும்புப் பெண் மணியாக செயற்பட்டார். அமைதியான வழியில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்காக தன்னை அர்ப்பணித்திருந்தார். என்னு மடிப்படையிலேயே அவருக்கு பரிசு அறிவிக்கப்பட்டது. ஆனால் உண்மையில் மதுராவை ஆட்சியிலிருந்து இராணுவரீதியாக அகற்றிக் கொண்டு சென்றதன் மூலம் தான் அங்கு ஜன நாயகம் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்த ஆண்டு ஜனவரியில் ஜனாதி தி டொனால்ட் ட்ரம்பின் விசேட உத்திர விற்கு அமைவாக இரண்டு மணித் தியாலய இராணுவ நடவடிக்கையின் மூலம் மதுரோ அதிரடியாக ஆட்சி யிலிருந்து அகற்றப்பட்டார். அப்படிப் பார்த்தால் இறுதியில் அமெரிக்காவே வெனிசுவேலாவில் ஜனநாயகத்தை ஸ்தாபித்தது என்பது தானே உண்மை. அப்படிப் பார்த்தால் நவிப் பிள்ளையை விடவும் ஜனாதிபதி

ட்ரம்ப் தானே நோபல் பரிசுக்கு அதிகம் தகுதியானவர். ஏனெனில் ஏற்கனவே அமைதிக்கு பங்களித்தார் என்னுமடிப்படையில் தான், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவிற்கு 2009இல் நோபல் பரிசு வழங்கப்பட்டிருந்தது. இந்த அடிப்படையில் தான் நோபல் பரிசு அதிகம் அரசியல்மயப்படுத்தப்பட்ட ஒன்று என்பதை குறிப்பிட்டிருந்தேன். நவீப்பிள்ளைக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டு, ஒரு மணித்தியாலத்திற்கு பின்னர், உலகில் என்ன நடந்தது? உலக அரசியல் எந்தளவு சிக்கலானதாக மாறியிருக்கின்றது என்பதை புரிந்து கொள்ளுவதற்கு இது போதுமானது. அமெரிக்கா சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை முற்றிலுமாக தடை செய்திருக்கின்றது. கடந்த மாதம், ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றும் போது ஜனாதிபதி ட்ரம்ப், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலிருந்து நாடுகளை வெளியேறுமாறு குறிப்பிட்டிருந்தார். அதன் தொடர்ச்சியாக தற்போது நீதிமன்றம் முற்றிலுமாக தடை செய்யப் பட்டிருக்கின்றது. ஏற்கனவே நீதிமன்றத்தின் நீதிபதிகள் பலர் மீது அமெரிக்கா தடை விதித்திருந்த நிலையில், தற்போது முற்றிலுமான தடையை அறிவித்திருக்கின்றது.

நவநீதம் பிள்ளை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னைநாள் நீதிபதியாவார். முன்னைநாள் நீபதி அமைதிக்கான நோபல் பரிசை பெற்றிருக்கின்ற போது சர்வதேச குற்றவியல் நீதிமன்றமே அமெரிக்காவின் தடைப் பட்டியலில் இருக்கின்றது.

சர்வதேச அரசியல் எதை நோக்கி நகர்கின்றது என்பதில் பல்வேறு குழப்பங்கள் காணப்படுகின்ற நிலையில், மேலும் ஒரு குழப்பமாக இந்த விடயம் இடம் பெற்றிருக்கின்றது. நவீப் பிள்ளைக்கு நோபல்பரிசு கிடைத்ததை அவரும் அவருடைய குடும்பமும் கொண்டாட முடியும் ஏனெனில் அவரைப் பொறுத்தவரையில் இது அவருக்கான ஒரு உயரிய அங்கீகாரம்

ஆனால் இதனால் உலகெங்கும் அமைதியை, நீதியை, பரிவை எதிர்பார்த்து காத்திருக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை. அவர்களுடைய வாழ்வில் அமைதி திரும்பப் போவதில்லை. எத்தனையோ அமைதி ஒப்பந்தங்கள், மனித உரிமைகள் பேரவையில் எத்தனையே பிரகடனங்கள் ஆனாலும் பாலஸ்தீன மக்களின் வாழ்வில் நிம்மதி திரும்பவில்லையே – ஏன்?

அவர்களுடைய வாழ்வில் நிம்மதி திரும்ப வேண்டும் என்றால், அது முற்றிலும் அந்தப் பிராந்தியத்தில் இஸ்ரேலுடன் ஒரு புரிந்துணர்வு இல்லாமல் நிகழவே முடியாது. இதனைத் தான் இதுவரையான நிகழ்வுகள் நிரூபித்திருக்கின்றன.

சமாதானம், இப்படியொரு சொல்லை கேட்க நேர்கின்ற போதெல்லாம், லெபனானுக்கான அமெரிக்கத் தூதுவர், டொம்பராக் ஒரு முறை கூறியது தான் நினைவுக்கு வருவதுண்டு. அவர் இவ்வுல அரசியலை மிகவும் அச்சொட்டாக புரிந்திருக்கின்றார் எனலாம். அவர் கூறுவார் – சமாதானம் என்பது ஒரு மாயை. ஒரு போதுமே சமாதானம் இருந்ததில்லை – பெரும்பாலும் இருக்கவே போவதில்லை

ஏனெனில் ஒவ்வொருவரும், அவர்களின் நியாயம் என்னும் உரிமைகளுக்காக சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர். இதற்கு முடிவில்லை. இதில் யாரோ ஒருவர் தான் மேலாதிக்கம் செலுத்த முடியும். இதுதான் இன்றைய உலக நிலைமை.

உள்ளூரிலும் இதுதான் நிலைமை – அமைதியின்மை காணப்படும் அனைத்து இடங்களிலும் இது தான் நிலைமை. ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய வாதம் சரியாக இருக்கின்ற போது, இறுதியில் ஒரு வருடைய ஆற்றலும், அவருக்கு இருக்கின்ற வாய்ப்புக்களுமே அவருக்கான வெற்றியை வழங்கும். அது இன்னொருவருக்கோ தோல்வியையும் அவமானத்தையும் வழங்கும். தோல்வியையும் அவமானத்தையும் எதிர் கொண்டவர், தனக்கான வாய்ப்பு கிடைக்கும் வரையில் தனக்குள் குரோதத்துடன் அமைதியாக இருப் பார். இதுதான் நிலைமை என்றால் அமைதி என்பது ஒரு மாயைதானே!

நான் யோசிப்பதுண்டு, இந்த அடிப் படையில் நோக்கினால் உலகின் பல பாகங்களிலும் அமைதியின் பெயரில் தலையீடு செய்யும் ஆற்றலோடு அமெரிக்கா தானே இருக்கின்றது. ஆகக் குறைந்தது தற்காலிகமாக வேனும் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட அமெரிக்காவினால் பங்களிப்பை வழங்க முடிகிறதல்லவா. அப்படியென் றால், ஜனாதிபதி ட்ரம்ப் அமைதிக்கான நோபல் பரிசை கோருவதில், ஒரு தவறும் இல்லையே?

உண்மையில் அமெரிக்கத் தலைவர் களுக்குத் தானே அதிக தகுதியுண்டு. உலகில் யுத்தங்களை தீர்மானிக்கவும் தேவைப்பட்டால் அமைதியை ஏற்படு த்தும் வல்லமையோடு இருக்கின்றவர் களுக்குத்தானே அமைதிக்கான பரிசு போக வேண்டும். நவீப் பிள்ளை போன்றவர்களால் எதைச் சாதித்து விட முடியும். அவர் சர்வதேச சட்டங் களுக்கு பங்களித்திருக்க முடியும், தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காக பங்களித்திருக்க முடியும் – ஆனால், அவற்றை நடைமுறைப்படுத்துவது யார்? யுத்தம் முடிந்து

பதினேழு ஆண்டுகளாகி விட்டது, ஒரு சிறிய முன்னேற்றம் கூட தமிழரின் மனித உரிமைக் கோரிக்கை யில், அரசியல் தீர்வுக் கோரிக்கையில் ஏற்படவில்லையே! பிறகேன் நோபல் பரிசை எண்ணிக் கொண்டாட்டம்?

# செய்யறிவு உலகில் செம்மொழித் தமிழும் தமிழரும்

## ரொறன்ரோவில் 4 நாட்கள் தமிழின் பெருமையைப் பறைசாற்றிய மாநாடு 2026

செயற்கை அறிவு உலகம் வேகமாக விரிந்து பரந்து கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்தில் செம் மொழித் தமிழின் தொன்மையையும் தமிழரின் பண்பாட்டு அடையாளத் தையும் நவீன அறிவியலோடு இணைத்துச் சிந்திக்க வைத்த செய்யறிவு உலகில் செம்மொழித் தமிழும் தமிழரும் 2026 மாநாடு ரொறன்ரோவில் கடந்த 15ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை வெகு சிறப்பாக நடைபெற்றது.

தமிழ் மொழியின் தொன்மை, தமிழ ரின் பண்பாடு, கலை, அறிவியல் சிந்தனை ஆகியவற்றை செயற்கை அறிவின் புதிய உலகத்துடன் இணைக்கும் நோக்கில் நடைபெற்ற இம்மாநாடு, கனடா வாழ் தமிழர்களு க்கு மட்டுமன்றி உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கும் ஒரு முக்கிய மான அறிவியல்—பண்பாட்டு சந்திப் பாக அமைந்தது.

மாநாட்டின் ஆரம்ப நாளான 15ஆம் திகதி இடம்பெற்ற தமிழர் பண்பாட்டு அணிவகுப்பு அனைவரினதும் கவனத்தையும் ஈர்த்தது. பெரும் பாலானோர் வேட்டி, சால்வை, சேலை போன்ற பாரம்பரிய ஆடைகளில் அணி வகுத்து வந்ததுடன், பறை முழங்க மேளதாள வாத்தியங்கள் ஒலிக்க பொய்க்கால் குதிரை ஆட்ட மும் நடனங்களும் இடம்பெற்ற காட்சி தமிழர் பண்பாட்டின் தொன் மையையும் தொடர்ச்சியையும் வெளி ப்படுத்தியது.

அந்தக் காட்சியைப் பார்த்த பலருக் கும் 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாண த்தில் நடைபெற்ற உலகத் தமிழாரா ய்ச்சி மாநாடு நினைவுக்கு வந்தது. அன்றைய யாழ்ப்பாண மண்ணில் தமிழுக்காக எழுந்த எழுச்சியின் ஓர் ஒலிப் பெருக்கமாகவே ரொறன்ரோ வில் இடம் பெற்ற இந்தப் பண்பாட்டு அணிவகுப்பையும் பார்க்க முடிந் தது.

இம்மாநாட்டின் முக்கியத்துவத்தை மேலும் உயர்த்திய அம்சமாக உல கின் பல்வேறு நாடுகளில் இருந்து பெறப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் அமைந்தன.

13க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 497 ஆய்வுக் கட்டுரைகள் மாநாட்டுக்காகப் பெறப்பட்டிருந்தன. அவற்றில் கவனமான பரிசீலனைக்குப் பின்னர் 90 ஆய்வுக் கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு மாநாட்டில் வெற்றிகரமாகச் சமர்ப்பிக்கப்பட்டன.

இதன் மூலம் ரொறன்ரோவில் நடை பெற்ற இம்மாநாடு வெறுமனே ஒரு பண்பாட்டு விழாவாக அல்லாது, உலகத் தமிழறிஞர்கள், கல்வியாளர் கள், ஆய்வாளர்கள் மற்றும் அறிவு சார் துறையினரை ஒன்றிணைத்த ஒரு முக்கியமான ஆய்வுக் களமாக வும் தன்னை நிலைநிறுத்தியது.

உலகின் பல்வேறு நாடுகளில் இருந் தும் கல்வியாளர்கள், ஆய்வாளர்கள், கலைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை, மாநாட்டுக்கு சர்வ தேசத் தோற்றத்தையும் அறிவுசார் கனத்தையும் வழங்கியது.

மாநாட்டின் முதல் இரண்டு நாட் களும் ஆய்வரங்குகளாக இடம்பெற் றன. தமிழ் மொழி, அதன் தொன்மை, எதிர் காலம் செயற்கை அறிவுத் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி, அதில் தமிழின் இடம் போன்ற பல்வேறு தளங்களில் கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து 17ஆம் திகதி நடைபெற்ற கலைநிகழ்வுகள் மாநாட்டுக்கு வேறொரு பரிமாண த்தை வழங்கின.

கனடாவில் வாழும் இளம் தமிழ் கலைஞர்களுடன் ஏனைய நாடுகளில் வாழும் தமிழ்க் கலைஞர்களும் இணைந்து தமது திறமைகளை வெளிப்படுத்தியமை குறிப்பிடத் தக்கது. ஆய்வும் அறிவியலும் மட்டு மன்றி, தமிழரின் கலை, இசை, நடனம், பண்பாடு ஆகியனவும் தமிழின் அடையாளத்தை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் வலிமையான கருவிகள் என்பதை இந்நிகழ்வு உணர்த்தியது.

நான்கு நாட்கள் நடைபெற்ற இம் மாபெரும் நிகழ்வை மிகுந்த நேர்த்தி யுடனும் திட்டமிடலுடனும் முன்னெ டுத்து வெற்றிகரமாக நிறைவு செய்வதில் திரு. நிமால் விநாயக மூர்த்தி அவர்களும் அவரது குழு வினரும் ஆற்றிய பணி பாராட்டுக் குரியது.

உலகின் பல்வேறு பகுதிகளில் இரு ந்து பேராளர்களை வரவேற்று, அவர் களுக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து, ஆய்வரங்குகள் முதல் கலை நிகழ்வுகள் வரை ஒவ்வொரு நிகழ்வையும் ஒழுங்கமைத்து நடத் துவது சாதாரணமான பணியல்ல. அதன் பின்னணியில் நீண்டகாலத் திட்டமிடலும் கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் இருந்திருக்க வேண்டும்.

அவர்களது உழைப்புக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கும் வகையில் 18ஆம் திகதி நடைபெற்ற வருடாந்த இராப்போசன விருந்தும் விருது வழங்கும் நிகழ்வும் அரங்கம் நிறை ந்த நிகழ்வாக அமைந்தது.

மாநாட்டில் பங்கேற்ற பேராளர்கள், ஆய்வாளர்கள், கலைஞர்கள் மற்றும் இதனைச் சிறப்புற நடத்துவதற்கு ஒத்துழைத்த அனைவரையும் கௌர விக்கும் வகையில் இடம்பெற்ற இந்த நிகழ்வு, நான்கு நாள் மாநாட்டின் நிறைவுக்கு ஒரு சிறப்பான முத்தாய்ப் பாக அமைந்தது.

எந்தவொரு பெரிய நிகழ்விலும் குறைகள் முற்றாக இல்லாமல் இருப்பது அரிது. இம்மாநாட்டிலும் சில குறைபாடுகள் தென்பட்டன என்பதை மறுப்பதற்கில்லை. எனினும் அவற்றை முன்னிறுத்தி நிகழ்வின் ஒட்டுமொத்த வெற்றியை மறைத்து விட முடியாது.

காலத்தின் தேவையை உணர்ந்து, செயற்கை அறிவின் புதிய உலகில் செம்மொழித் தமிழின் இடம் என்ன? தமிழரின் அறிவு, பண்பாடு, கலை, மொழி ஆகியவற்றை நவீன தொழில் நுட்பத்துடன் எவ்வாறு இணைத் துச் செல்ல முடியும்? என்ற கேள்வி களுக்கு விடை தேடும் முயற்சியாக இம்மாநாடு அமைந்தமைதான் அதன் மிகப்பெரிய சிறப்பு.

தமிழ் ஆயிரமாயிரம் ஆண்டுகள் பழைமையான மொழி என்று பெருமை பேசுவதோடு நின்று விடா மல், எதிர்கால உலகின் அறிவியல் மொழியாகவும் தமிழை முன்னெடு த்துச் செல்ல வேண்டிய காலகட்டத் தில் நாம் வாழ்கின்றோம்.

அந்தப் பயணத்திற்கான ஒரு சிந்தனை வாசலை ரொறன்ரோ மாநாடு திறந்திருக்கிறது.

1974இல் யாழ்ப்பாண மண்ணில் தமிழுக்காக ஒன்று கூடிய ஆய்வுல கம், பல தசாப்தங்களுக்குப் பின்னர் புலம்பெயர் தமிழர் வாழும் ரொறன்ரோ மண்ணில் புதிய தொழில்நுட்ப உலகை நோக்கி திரும்பியுள்ளது.

அன்று தமிழின் தொன்மையை உலகுக்கு எடுத்துச் சென்றோம் இன்று அந்தத் தமிழின் எதிர்கால த்தை செயற்கை அறிவின் உலகில் நிலைநிறுத்த வேண்டிய பொறுப்பு எம்முன் நிற்கின்றது.

அந்தப் பொறுப்பை நினைவு ஊட்டிய வகையில், செய்யறிவு உலகில் செம்மொழித் தமிழும் தமிழரும் — 2026'' மாநாடு காலத்தின் தேவை யறிந்து நடைபெற்ற ஒரு முக்கிய மான தமிழ்ச் சந்திப்பாக வரலாற்றில் பதிவாகும் என்பதில் ஐயமில்லை.

T.K.பரமேஸ்வரன்

போட்டோ:- ஐயா4U


















# நவிப்பிள்ளை அம்மையார் ஈழத்தமிழர்களோடு நிற்பாரா?

நீங்கள் தனியாக இல்லை. உண்மை வெளிவரும். —பாலஸ்தீனர்களுக்கான உலகளாவிய ஆதரவு குறித்து நவிப் பிள்ளை

ஹென்றி பி.ககனும் கென்ஸோ சோஆயும் இந்த ஆண்டு வேதியல் துறைக்கான நோபல் பரிசை வென்றுள்ளார்கள். ஹென்றி பி.ககன் பிரான்ஸைச் சேர்ந்தவர். சிறுவயதில் நாஜிகளிடமிருந்து ஒளிந்து வாழ்ந்தவர். இன அழிப்பில் இருந்து தப்பியவர். இன்று தனது 95ஆவது வயதில் நோபல் பரிசை வென்றிருக்கிறார். இன அழிப்பில் இருந்து தப்பிய ஒருவர் வேதியலுக்கான நோபல் பரிசை வென்றிருக்கும் இதே ஆண்டில் இன அழிப்புக்கு எதிரான துணிகரமான சட்ட நடவடிக்கைகளுக்காக நவிப்பிள்ளை அம்மையாருக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது.

அவருக்கு நோபல் பரிசு கிடைத்த பின் ஈழத் தமிழ் இன அழிப்பு தொடர்பான அம்மையாரின் நிலைப்பாடு மீண்டும் வாதப் பொருளாகியிருக்கிறது. நாலாம் கட்ட ஈழப் போரின் போது நவிப்பிள்ளை அம்மையார் ஐநா மனித உரிமைகள் ஆணையாளராக இருந்தார். மே 18க்குப் பின் அப்பொழுது ஐநா செயலராக இருந்த பான்கீ மூன் வன்னி கிழக்கின் மீது ஹெலிகாப்டரில் பறந்தபடி இறுதிக்கட்டப் போருக்கு பின்னரான போர்க்களக் காட்சிகளைப் பார்த்த போது நவிப்பிள்ளை அம்மையார் பொறுப்பில் இருந்தார்.

ஐநா மனித உரிமைகள் ஆணையாளராக அவர் 2013ல் இலங்கைக்கு வருகை தந்தார். அவருடைய தமிழ் அடையாளம் காரணமாக அப்பொழுது அமைச்சராக இருந்த மேர்வின் டி சில்வா அவரை அவமதித்தார். அவருக்கு ஒரு திருமணம் செய்து வைக்கப் போவதாகவும் கூறினார். தமிழ்ப் பகுதிகளில் அம்மையார் பாதிக்கப்பட்ட மக்களைக் கண்டார் கதைத்தார். எனினும் நடந்தது இன அழிப்பு என்று சொல்லவில்லை. அதற்குப் பின்னரும் சொல்லவில்லை. இன்று வரையிலும் அவர் இலங்கைத் தீவில் இடம் பெற்றது இன அழிப்பு என்று சொல்லவில்லை. ஏன் அவ்வாறு கூறவில்லை?

ஏனென்றால் நடந்தது இன அழிப்பு என்பதனை சட்ட ரீதியாக நிரூபிக்க வேண்டும் என்று அவர் கூறுவது தான் காரணமா? அல்லது அவர் இன அழிப்பு தான் நடந்தது என்று நன்கு தெரிந்த பின்னரும் அதைக் கூறாமல் விடுவதற்காக வேறு சட்ட ரீதியான காரணங்களை கூறுகிறாரா?

தென்னாபிரிக்காவில் தொடங்கி ஆபிரிக்கா மற்றும் பலஸ்தீனம் வரையிலும் இன அழிப்புக் களங்களை நேரடியாகத் தரிசித்தவர் அவர். அது தொடர்பான நீதி விசாரணைப் பொறிமுறைகளில் நேரடியாகப் பங்கேற்றவர். இலங்கையில் நடந்தது இன அழிப்பா இல்லையா என்பதனை உணரத் தேவையான எல்லாத் தகமையும் அறிவும் முதிர்ச்சியும் அவருக்கு உண்டு. இலங்கையில் இடம் பெற்றது இன அழிப்பு என்பது அவருக்கு நன்கு விளங்கும். ஆனால் அவர் அதை வெளிப்படையாகக் கூறத் தயாரில்லை. ஏன்?

ஏனென்றால் அவர் அப்பொழுது பதவிப் பொறுப்பில் இருந்த ஓர் உலகளாவிய ராஜதந்திரி. ராஜதந்திரிகள் தேவதைகள் அல்ல. தாங்கள் சார்ந்த நாட்டின் அல்லது உலகப் பொது அமைப்பின் ராணுவப் பொருளாதார அரசியல் ராஜதந்திர இலக்குகளை நிறைவேற்றும் ஆணையைப் பெற்ற ராஜதந்திரிகள் தான். நவிப்பிள்ளை அம்மையாரும் ஒரு ராஜதந்திரி தான். தேவதை அல்ல.

பொறுப்புகளில் இருக்கும் போது அவர் அதை அவ்வாறு கூறமுடியாத ஒரு நிலைமை இருந்திருக்கலாம். குறிப்பாக ஐநாவில் அவர் மனித உரிமைகள் ஆணையாளராக இருந்த போது அதனை அவர் அவ்வாறு உத்தியோகபூர்வமாக கூறுவதற்கு அவருடைய பதவி அவரை அனுமதிக்காமல் இருந்திருக்கலாம். ஏனெனில் ஐநா இன்று வரையிலும் இலங்கையில் இடம்பெற்றது இன அழிப்பு என்று கூறவில்லை. இலங்கையில் இடம் பெற்றது இன அழிப்பு என்று கூறுவதற்கு ஏன் ஐநா தயாரில்லை?



ஏனென்றால் ஐநாவை முகாமை செய்யும் நாடுகள் உலக அளவிலும் பிராந்திய அளவிலும் பலமிக்க நாடுகள் நடந்தது இன அழிப்பு என்பதனை உத்தியோகபூர்வமாக அறிவிக்கக்கூடாது என்று ஓர் அரசியல் தீர்மானத்தை எடுத்திருக்கின்றன என்பது தான் உண்மை. போர் குற்றம் மனிதகுலத்துக்கு எதிரான குற்றம் என்ற வரையறைக்குள் மட்டுமே இலங்கை விவகாரத்தை அணுக வேண்டும் என்பது ஓர் அரசியல் தீர்மானம். இலங்கைத் தீவில் இடம்பெற்றது மனித உரிமை மீறல்கள் அல்லது மனித குலத்துக்கு எதிரான குற்றச் செயல்கள் என்று கூறுவதன் மூலம் போரில் ஈடுபட்ட இரண்டு தரப்பையும் விசாரிக்க வேண்டும் என்ற தீர்மானம் ஓர் அரசியல் தீர்மானம். இன அழிப்பு என்பதை நிரூபிக்கத் தேவையான பரந்துபட்ட சக்திமிக்க ஒரு விசாரணைப் பொறிமுறையை இன்று வரை உருவாக்காமல் இருப்பதும் ஓர் அரசியல் தீர்மானம். 2021ஆம் ஆண்டு சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான அலுவலகத்தை(OSLAP) மட்டுப்படுத்தப்பட்ட ஆணையைக் கொண்ட மனித உரிமைகள் பேரவைக்குள் பெட்டி கட்டியதும் ஓர் அரசியல் தீர்மானம்.

இந்துமகா சமுத்திரத்தில் இலங்கைத் தீவை எவ்வாறு கையாள வேண்டும்? இனப்பிரச்சினையை எவ்வாறு கையாள வேண்டும்? அதை எங்கே கொண்டு போய்இஎந்தச் சட்டகத்துக்குள் வைக்க வேண்டும்? என்பவை எல்லாம் அரசியல் தீர்மானங்கள். ஐநாவில் அதை மனித உரிமைகள் பேரவைக்குள் பெட்டி கட்ட வேண்டும் என்பது ஓர் அரசியல் தீர்மானம்.

அதனால் ஐநாவின் அரசியல் தீர்மானங்களை ஓர் ஐநா ஆணையாளராக நவிப்பிள்ளை பின்பற்றினார். ஐநாவில் அவர் பொறுப்பில் இருந்த கால கட்டங்களில் இன அழிப்பு என்று அவர் சொல்லாமல் விட்டது அவருடைய தனிப்பட்ட விருப்பம் என்பதை விடவும் ஐநாவின் அரசியல் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

அவர் பதவியில் இருந்த காலத்திலும் அது தான் ஐநாவின் முடிவு. இப்பொழுதும் அதுதான் ஐநாவின் முடிவு. அதாவது ஐநா ஈழத் தமிழர்களுக்கு வழங்கக் கூடிய நீதியின் வரையறை அது. அம்மையார் கூறுவது போல இன அழிப்பை நிரூபிக்கத் தேவையான விசாரணைப் பொறிமுறைகளை யார் உருவாக்குவது? எப்படி உருவாக்குவது? அதில் ஐநாவுக்கு உள்ள பங்கு என்ன? மனித உரிமைகள் பேரவைக்குள் பெட்டி கட்டப்பட்டிருக்கும்வரை அவ்வாறான ஒரு விசாரணைப் பொறிமுறை சாத்தியமா?

ஆனால் தனக்குரிய உலக மன்றப் பொறுப்புகளில் இருந்து நீங்கிய பின்இ இன அழிப்பு தொடர்பான உலகளாவிய நீதி விசாரணைப் பொறிமுறைகளில் அவர் வகித்த பதவிகளில் இருந்து நீங்கிய பின்னரான காலகட்டத்திலும் கூட இன்று வரையிலும் அவர் இலங்கையில் இடம்பெற்றது இன அழிப்பு என்று சொல்லவில்லை.ஏன் சொல்லவில்லை? இந்தக் கேள்வியைத் தான் ஒரு தார்மீகக் கேள்வியாக ஈழத் தமிழர்கள் அம்மையாரிடம் கேட்க வேண்டும்.

தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலா அவருக்குப் பொறுப்புகளை வழங்கியது அவர் ஒரு தமிழ்ப் பெண் என்பதற்காக அல்ல. தொழில்சார் தகமைகள் காரணமாகத் தான் இன அழிப்புக்கு எதிரான விசாரணைப் பொறிமுறைகளில் அவருக்கு இருந்த முதிர்ச்சி காரணமாகத் தான். தென்னாபிரிக்காவில் இருந்து பாலஸ்தீனம் வரையிலும் அவருக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்கள் அவர் தமிழர் என்பதற்காக வழங்கப்படவில்லை. அவருடைய சேவை மூப்பு சட்டச் செயற்பாடு போன்றவற்றிற்காக வழங்கப்பட்டன. அப்படித்தான் நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது அவர் தமிழர் என்பதற்காக அல்ல. ஆனால் நோபல் பரிசு வென்ற முதலாவது தமிழ்ப் பெண் என்று அடிப்படையில் ஈழத் தமிழர்கள் அவரிடம் கேட்கலாம். இப்பொழுதாவது நடந்தது இன அழிப்பு என்று சொல்லுவீர்களா? அல்லது ஒரு கெட்டிக்கார சட்டத்தரணி போல சட்டரீதியாக அதை நிரூபிக்க வேண்டும் என்று கூறுவீர்களா? என்று கேட்கலாம்.

நோபல் பரிசை பெற்றதால் இப்பொழுது அவருடைய அந்தஸ்து அங்கீகாரம் உலக அளவில் அதிகரித்திருக்கிறது .இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட ஒருவர் ஈழத்தில் இடம் பெற்றது இன அழிப்புத`தான் என்று கூறுவாராக இருந்தால் அது நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும். அவர் ஏன் இதுவரையிலும் அப்படிச் சொல்லவில்லை என்று கேட்டு அவரை நிந்திப்பதை விடவும் விமர்சிப்பதை விடவும் அவரை இப்பொழுதாவது

**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**- நிலாந்தன் -**



அவ்வாறு சொல்ல வைக்கலாமா என்று தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும்.உலகப் பரப்பில் உயர்ந்து நிற்கும் ஒரு தமிழ்ப் பெண்ணை நீதிக்கான தமது போராட்டத்தில் எப்படிப் பங்காளி ஆக்குவது என்றுதான் தமிழ்மக்கள் சிந்திக்க வேண்டும். அது தான் ஓர் அரசைப் போல சிந்திப்பது.

இங்கு இஸ்ரேலிய உதாரணத்தைச் சுட்டிக் காட்டலாம். பலஸ்தீனத்தில் யூதர்களின் தாயகத்தை அங்கீகரிக்குமாறு இந்தியாவிடம் ஆதரவு கேட்டு ஐன்ஸ்டீன் 1947ஆம் ஆண்டு ஜீன் 13ஆம் திகதி இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவுக்கு ஒரு கடிதம் எழுதினார். நேரு அந்தக் கோரிக்கையை அப்பொழுது நிராகரித்து விட்டார். எனினும் உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானியாக திகழ்ந்த யூதரான ஐன்ஸ்டீன் எழுதிய கடிதத்திற்கு அந்த நேரத்தில் ஒரு பெறுமதி இருந்தது.

அப்படித`தான் நவிப்பிள்ளை அம்மையார் இப்பொழுது நோபல் பரிசு வென்றிருக்கும் ஒரு பின்னணியில் ஈழத் தமிழர்களுக்கு நடந்தது இன அழிப்பு என்று கூறுவாராக இருந்தால் அல்லது அதற்கு வேண்டிய சுயாதீனமான விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்குமாறு உலக சமூகத்தைத் தூண்டுவாராக இருந்தால் அது நீதிக்கான ஈழத் தமிழர்களின் போராட்டத்தில் ஒரு முக்கிய அடைவாகக் கருதப்படும்.

எனவே இந்த இடத்தில் அவர் ராஜதந்திரியாக இருந்த பொழுது என்னென்ன சொன்னார் யாருக்கு எதிராகச் சொன்னார் என்ற விவாதங்களில் ஈடுபடுவதை விடவும் ஓர் ஓய்வு பெற்ற ராஜதந்திரியாக நோபல் பரிசை வென்ற முதல் தமிழ்ப் பெண்ணாக அவரை எப்படி நீதிக்கான போராட்டத்தின் பங்காளி ஆக்கலாம் என்றுதான் ஈழத் தமிழர்கள் சிந்திக்க வேண்டும்.

ஈழத் தமிழர்கள் மத்தியில் நீதிபதிகளாக இருந்தவர்கள் குறிப்பாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தன்னுள் கொண்டிருக்கும் ஒரு நீதி பரிபாலனக் கட்டமைப்புக்குள் நீதிபதிகளாக இருந்தவர்கள் ஓய்வு பெற்றபின் தமிழ்த் தேசிய அரசியலுக்குள் வருகிறார்கள். உதாரணமாக விக்னேஷ்வரன். அவர்கள் பதவிப் பொறுப்புகளில் இருந்தவரை அதாவது நீதிபதிகளாக இருந்தவரை அவர்கள் அரசியலில் என்ன கதைக்கலாம் செய்யலாம் என்பதில் அடிப்படையான வரையறைகள் இருந்தன. அப்படித்தான் இப்பொழுது கனடாவில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் உண்டு. பிரித்தானியாவில் ஒரு பெண் அமைச்சர் உண்டு. (18ம் பக்கம் பார்க்க)

# தேனிசைத் தென்றல் தேவா எளிய இதயங்களை மெல்லிசையில் மீட்ட “கானா” நாயகன்!

தமிழ்த் திரையுலகில் ‘தேனிசைத் தென்றல்’ என்ற அடைமொழியோடு ரசிகர்களை தனது எளிய, துள்ளலான மெட்டுகளால் கட்டிப்போட்ட இசையமைப்பாளர் தேவா, இசைப் பிரியர்களையும் திரைத் துறையையும் கண்ணீரில் ஆழ்த்திவிட்டு இன்று காலை இயற்கை எய்தினார்.

கிராமப்புற உழைக்கும் வர்க்கத்து மக்களின் உணர்வுகளுக்கு தனது இசையின் மூலம் உயிர் கொடுத்த அவரது மறைவு, தமிழ் இசை உலகுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

தமிழ் திரையுலகின் இசை எல்லைகளை இசைஞானியும் இசைப் புயலும் தங்களின் ஆளுமையால் முழுமையாக ஆக்கிரமித்திருந்த காலகட்டம் அது. ஒரு புறம் கிராமத்து மண்ணின் மனத்தையும், செவ்வியல் இசையின் அற்புதங்களையும் தங்கு தடையின்றி வழங்கி வந்த இளையராஜாவின் மாயா ஜாலம், மறு புறம் நவீனத் தொழில்நுட்பத்தையும், மேற்கத்திய இசைப் புதுமைகளையும் கொண்டு வந்து உலகை வியக்க வைத்த ஏ.ஆர்.ரஹ்மானின் புதிய அலை. இந்த இரண்டு இமயங்களுக்கு இடையே தனக்கென ஒரு தனித்துவமான இடத்தை உருவாக்குவது என்பது சாதாரண காரியமல்ல.

ஆனால் தேவா அதை மிக எளிதாக சாதித்துக் காட்டினார். மக்களின் இதயத் துடிப்பை மிகத் துல்லியமாக உணர்ந்திருந்த தேவா, தொழிலாளர்கள், அடித்தட்டு மக்களின் கொண்டாட்டங்களுக்கு ஏற்ற



எளிய, துள்ளலான இசையை தனது அடையாளமாக மாற்றினார். பந்தா இல்லாத இசை அமைப்பு, கேட்ட உடனே உதடுகள் முணுமுணுக்கும் எளிமையான மெட்டுகள், அடித்தட்டு மக்களின் வாழ்வியலோடு பிணைந்த வாத்தியங்களின் பயன்பாடு எனத் தனக்கான ஒரு தனி இடத்தை அவர் அமைத்துக்




கொண்டார்.

அண்ணாமலை’ படத்தில் ‘வந்தேண்டா பால்காரன்’, ‘பாட்ஷா’ படத்தில் இடம் பெற்ற ‘நான் ஆட்டோ காரன்’ போன்ற பாடல்கள் உழைக்கும் வர்க்கத்தினரின் தேசிய கீதங்களாக இன்றும் விளங்குகின்றன. அதுமட்டுமின்றி இந்தப் பாடல்கள் ரஜினிகாந்தின் திரைப் பயணத்திலும் அழிக்க முடியாத இடத்தை பிடித்துள்ளன. இன்றளவும் ரஜினி படங்களில் வரும் ‘சூ ப்பர் ஸ்டார்’ டைட்டில் கார்டுக்கு தேவாவின் இசையே பயன்படுத்தப்படுகிறது. இன்னொரு புறம் கமல்ஹாசனின் ‘அவ்வை சண்முகி’, ‘பஞ்ச தந்திரம்’, பம்மல் கே.சம்பந்தம்’ போன்ற படங்களின் பாடல்கள் பெரும் வரவேற்பை பெற்றவை.

சென்னை நகரத்தின் மூலை முடுக்குகளில் மட்டுமே ஒலித்துக் கொண்டிருந்த ‘கானா’ என்ற எளிய மக்களின் இசை வடிவத்தை, தமிழ் சினிமா என்னும் மேடைக்குக் கொண்டுவந்து, அதனை எல்லா தரப்பினரும் ரசித்துத் தலையாட்ட வைத்த பெருமை தேவாவையே சேரும்.

வடசென்னை வட்டார மொழியையும், எளிய மனிதர்களின் உரையாடல்களையும் அடிப்படையாகக் கொண்ட பாடல்களை திரையில் ஒலிக்கச் செய்து, அடித்தட்டு மக்களின் இசையை கவனிக்க வைத்தார். ‘கவலைப்படாதே சகோதரா’, ‘சலோமியா’, ‘அண்ணா நகரு ஆண்டாளு’, ‘உதயம் தியேட்டருல’ போன்ற பாடல்கள் மூலம் கானா இசையை உலகறியச் செய்தவர் தேவா.

ஒரு புறம் கானாவில் கலக்கிக் கொண்டிருந்தாலும், இன்னொரு புறம் இதமான மெலடிப் பாடல்களிலும் அவர் நிகழ்த்திய அற்புதங்கள் எண்ணற்றவை. ‘நேருக்கு நேர்’ படத்தில் இடம் பெற்ற ‘மனம் விரும்புதே உன்னை’, ‘காதல் கோட்டை’ படத்தில் ‘நலம் நலமறிய ஆவல்’, ‘ஆசை’ படத்தில் இடம் பெற்ற ‘மீனம்மா’, ‘புல்வெளி’ என தேவா வழங்கிய மெலடிப் பாடல்கள் ஒவ்வொன்றும் ஆன்மாவைத் தொடும் ரகம்.

விஜய், அஜித் இருவரின் ஆரம்பகாலத் திரைப் பயணத்தில் தேவாவின் பாடல்கள் ஆற்றிய பங்கு மகத்தானது. அஜித்தின் திரை வாழ்க்கையில் மிகப் பெரிய திருப்புமுனையாக அமைந்த ‘ஆசை’, ‘காதல் கோட்டை’, ‘வாலி’, ‘முகவரி’, போன்ற படங்களுக்கும் விஜய்யின் ‘ரசிகன்’, ‘விஷ்ணு’ , ‘ஒன்ஸ் மோர்’, ‘மின் சாரக் கண்ணா’, ‘குஷி’ உள்ளிட்ட படங்களுக்கும் தேவா இசையமைத்த பாடல்களும் பின்னணி இசையும் மிகப்பெரிய பலமாக அமைந்தன.

விஜய்யை முதல் முதலாக பாடகராக அறிமுகப்படுத்தியதும் தேவாதான். இது தவிர பிரபுதேவா, சூர்யா, பிரசாந்த், முரளி, சரத்குமார் என ஏராளமான ஹீரோக்களின் படங்களுக்கும் சூ ப்பர் ஹீரோ பாடல்களை தேவா வாரி வழங்கியிருக்கிறார். தமிழ் தவிர்த்து, தெலுங்கு, கன்னடம், மலையாளம் உள்ளிட்ட மொழிகளிலும் தேவா இசையமைத்துள்ளார்.

தமிழ்நாடு அரசின் சிறந்த இசையமைப்பாளர் விருது, கலைமாமணி உட்பட பல உயரிய விருதுகளை தேவா பெற்றுள்ளார். பாடகராகவும் அவர் பாடிய ஏராளமான கானா பாடல்கள், திருவிழாக்கள், திருமண நிகழ்வுகள் மற்றும் பேருந்துப் பயணங்களில் இன்றும் தவிர்க்க முடியாத இடத்தைப் பிடித்துள்ளன. நீண்ட இடைவெளிக்குப் பிறகு 2014ம் ஆண்டு அனிருத் இசையில் வெளியான ‘மான் கராத்தே’ படத்தில் ஒரு பாடலை பாடி இருந்தார். அதன்பிறகு ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் ‘மாமன்னன்’ படத்தில் நெஞ்சமே நெஞ்சமே’ ரீப்ரைஸ் பாடலை இசையமைப்பாளர் தேவா பாடியுள்ளார்.

ஏறத்தாழ 400க்கும் மேற்பட்ட படங்களுக்கு இசையமைத்து, அடக்கமும் எளிமையும் நிறைந்த முகத்தில் என்றும் மாறாத புன்னகையும் கொண்ட ‘தேனிசைத் தென்றல்’ தேவாவின் மறைவு, தமிழ் இசை பிரியர்களின் நெஞ்சங்களில் ஆறாத சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



# ஒருங்கிணைக்கப்படும் அமெரிக்கக் கொள்கைகள்!



கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்

அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையை பொருளாதாரக் கொள்கை எல்லைக் கொள்கை மற்றும் எரிசக்திக் கொள்கை ஆகியவற்றில் இருந்து பிரிக்க முடியாது என, கடந்த மாதம் அமெரிக்க காங்கிரஸில் உரையாற்றிய இராஜாங்க செயலாளர் மார்கோ ரூபியோ கூறியிருந்தார். இவை அனைத்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை, ஒன்றிலிருந்து ஒன்றை வேறுபடுத்த முடியாதது என்பதே இதன் அர்த்தம்.

பொருளாதாரக் கொள்கைக்காக வெளியுறவு கொள்கையோ, வெளியுறவு கொள்கைக்காக பொருளாதார கொள்கையோ, விட்டுக் கொடுக்கப்படாது. எல்லை அல்லது பாதுகாப்பு அல்லது எரிசக்தி தொடர்பான கொள்கைகளும் அவ்வாறு தான்.

ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த இவற்றில் எவற்றையும் விட்டுக் கொடுக்காமல் அமெரிக்க நலன்களை உறுதி செய்வதே தமது இலக்கு என்பதை வெளிப்படுத்தியிருந்தார் மார்கோ ரூபியோ. அவரது இந்தக் கருத்து சில வாரங்களுக்கு முன்னர் அமெரிக்க தூதரகத்தின் எக்ஸ் தளத்தில் பதிவிடப்பட்டிருந்தது.

இந்த விடயங்களை அமெரிக்கா வலியுறுத்துகிறது என்பதை அடிப்படையாகக் கொண்டுதான், அந்தப் பதிவு இலங்கை உள்ளிட்ட முக்கியமான சில நாடுகளின் அமெரிக்க தூதரக சமூக ஊடகத் தளங்களில் பதிவிடப்பட்டது.

இந்த கருத்தின் பின்புலத்தில், அமெரிக்காவின் மொன்டானா மாநிலத்தின் ஆளுநர் கிரேக் கியான்போர்ட் அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட பயணம் உற்றுக் கவனிக்க வேண்டியதொன்றாகும்.

அமெரிக்காவின் பிற மாநிலங்களை விட, அண்மைக் காலத்தில் மொன்டானா மாநிலம் இலங்கையுடன் அதிக ஈடுபாடுகளைக் கொண்டுள்ளது. அமெரிக்க மாநிலங்கள், மூன்றாம் உலக நாடுகளுடன் தனித்தனியான உறவுகளை மேம்படுத்தும் திட்டங்களை செயற்படுத்துகின்றன. அந்தத் திட்டங்கள் பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் பிற ஒத்துழைப்பு விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கும். ஒவ்வொரு மாநிலங்களும் தேசிய காவல்படை எனப்படும் துணை இராணுவ அமைப்புகளை கொண்டிருக்கும்.

இவை முழு நேர இராணுவ படைப் பிரிவுகள் அல்ல, தேவைப்படும் போது இராணுவத்திற்கு உதவக் கூடிய வகையில் பயிற்சிகள் வழங்கப்பட்டு சிவில் பணிகளில் ஈடுபடுபவர்களைக் கொண்ட படைப்பிரிவுகள் தான் இவை. இந்த படைப்பிரிவுகள் பல்வேறு நாடுகளுடன் தனியான உறவுகளை பேணுகின்றன. நாடுகளுடன் பாதுகாப்பு உறவுகளை மட்டும் வைத்திருக்கும் இந்த மாநிலங்கள், தனிப்பட்ட சிறப்பு உறவுகளையும் கையாள தொடங்கியுள்ளன.

மொன்டானா மாநில தேசிய காவல் படையுடன் இலங்கை 2021ஆம் ஆண்டு பாதுகாப்பு புரிந்துணர்வு உடன்பாட்டில் கையெழுத்திட்ட பின்னர் பேரிடர் மீட்பு, உதவி உள்ள விடயங்களில் கூட்டுப் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இந்த பயிற்சிகளை இன்னும் பலப்படுத்துவது தொடர்பான பேச்சுக்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. அண்மையில் இடம் பெற்ற கூட்டுப் பயிற்சியின் போதும், கனடாவில் இடம் பெற்ற பசுபிக் பிராந்திய இராணுவத் தலைவர்களின் மாநாட்டின் போதும், இந்த உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

இந்த சூழலில் மொன்டானா மாநில ஆளுநர் கிரெக் கியான்போர்ட் மற்றும் மொன்டானா தேசிய காவல்படையின் துணை தளபதி பிரிகேடியர் ஜெனரல் டிரென்டன் கிப்சன் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு குழு கொழும்புக்கு பயணம் மேற்கொண்டது.

இந்த குழுவின் அடிப்படை நோக்கம், இலங்கையுடன் வர்த்தக மற்றும்



பாதுகாப்பு உறவுகளை பலப்படுத்துவதாகும். இது வெளிப்படையாக அமெரிக்க தூதரகத்தினால் குறிப்பிடப்பட்டிருந்த காரணம். அமெரிக்காவின் பரப்பளவில் 4ஆவது பெரிய மாநிலமான மொன்டானா, கடல் எல்லை இல்லாத ஒரு நிலப்பகுதியாகும். வடக்கே கனடாவைஎல்லையாக கொண்ட மொன்டானாவின் புவி யியல் அமைப்பு இரண்டு முற்றிலும் மாறுபட்ட தோற்றங்களைக் கொண்டது.மாநிலத்தின் மேற்கில் மூன்றில் இரண்டு பங்கு பகுதி உயரமான மலைத்தொடர்கள், அடர்ந்த பசுமைக் காடுகள் மற்றும் ஆழமான பள்ளத்தாக்குகளால் சூழப்பட்டது.

மொன்டானாவின் கிழக்குப் பகுதி பரந்த புல்வெளிகள், வறண்ட நிலங்கள் மற்றும் விவசாயப் பண்ணைகளைக் கொண்ட சமவெளிப் பிரதேசமாக உள்ளது. மொன்டானாவின் பொருளாதாரம் இயற்கை வளங்கள், விவசாயம் போன்றவற்றை பெரிதும் சார்ந்துள்ளது.

விவசாயம், கால்நடை வளர்ப்பு போன்றவற்றை முதன்மைத் தொழிலாக கொண்ட இந்த மாநிலத்தில், கோதுமை, பார்லி போன்ற தானியங்கள் பெருமளவில் விளைவிக்கப்படுகின்றன. இலங்கையுடன் முதலில், பாதுகாப்பு புரிந்துணர்வு உடன்பாட்டை செய்து கொண்ட மொன்டானா, அடுத்த கட்டமாக, வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்கான நகர்வுகளை ஆரம்பித்திருக்கிறது. இது மொன்டானா மா நிலத்தின் இலக்கு அல்ல, ஒட்டுமொத்த அமெரிக்காவின் இலக்கு.

மொன்டானாவில் அதிகம் விளையும் கோதுமை, இலங்கையில் அதிகம் நுகரப்படும் ஓர் உணவுத் தானியமாகும். பார்லி அதிகம் விளைந்தாலும் அது இலங்கையில் மிகப்பெரிய அளவில் நுகரப்படுவதில்லை. இவற்றுக்கு அடுத்ததாக பருப்பு வகைகள் உற்பத்தியில் மொன்டானா மாநிலம் முக்கிய பங்கு வகிக்கிறது.

அமெரிக்காவின் ஒட்டுமொத்த பருப்பு உற்பத்தித்துறையில், மொன்டானா மாநிலமே முதலிடத்தில் இருக்கிறது.

கோதுமை மட்டுமே பயிரிடப்பட்டு வந்த விவசாய நிலங்களில், மண் வளத்தை மேம்படுத்துவதற்காகப் பயிர் சுழற்சி முறையில் இங்கு பருப்பு வகைகள் பெருமளவில் பயிரிடப்படுகின்றன. அமெரிக்காவில் உற்பத்தியாகும் சிவப்பு (மைசூர்) பருப்பில் 70 சதவீத்திற்கும் அதிகம், மொன்டானாவில் விளைவிக்கப்படுகிறது. இது இலங்கையில் அதிகளவில் நுகரப்படுகிறது. அதைவிட, அமெரிக்காவின் பட்டாணிப் பருப்பு உற்பத்தியிலும் மொன்டானா முன்னணி மாநிலம்.

கொண்டைக்கடலை உற்பத்தியிலும் இந்த மாநிலம் அமெரிக்காவில் முன்னணியில் உள்ளது. மொன்டானாவின் அரை வறண்ட தட்பவெப்பநிலை பருப்பு வகைகள் வளர்வதற்கு மிகவும் ஏதுவாக உள்ளது. மொன்டானாவில் விளையும் பெரும்பாலான பருப்புகள், இந்தியா, பாகிஸ்தான், ஜப்பான் போன்ற ஆசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மொன்டானாவில் விளையும் மைசூர் பருப்பு, பட்டாணி மற்றும் கொண்டைக்கடலை ஆகிய பருப்பு வகைகள் இலங்கையின் அன்றாட உணவுப்பழக்கத்தில் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன.இலங்கையின் மொத்த பருப்பு நுகர்வில் சுமார் 80 முதல் 95 சதவீதம் வரை வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது.

இலங்கையில் ஒரு நபர் சராசரியாக ஆண்டுக்கு 13 முதல் 14 கிலோ பருப்பு வகைகளை நுகர்கிறார். இலங்கையில் நுகரப்படும் மொத்த பருப்பு வகைகளில் 64 சதவீதம், மைசூர் பருப்பு தான். இலங்கை ஆண்டு தோறும் 1.70 முதல் 1.90 இலட்சம் மெட்றிக் தொன் பருப்பினை இறக்குமதி செய்து நுகர்கிறது. இவை பெரும்பாலும், அவுஸ்ரேலியா மற்றும் கனடாவில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன.சர்வதேச சந்தையில் அவுஸ்திரேலிய பருப்புகளின் விலை குறைவாக இருப்பதால் இலங்கை இறக்குமதியாளர்கள் அதை அதிகம் விரும்புகின்றனர். கொண்டைக்கடலை ரஷ்யா, துருக்கி, பல்கேரியா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. அமெரிக்காவிலிருந்து மிக குறைந்தளவிலான கொண்டைக் கடலை மற்றும் பருப்பு வகைகளே தனியார் நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இந்தப் பின்னணியில் தான், இலங்கையின் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில், மொன்டானா மாநில ஆளுநர் கிரெக் ஜியான்போர்ட், இலங்கையின் வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்கவைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

மொன்டானாவில் விளையும் மைசூர் பருப்பு, பட்டாணி மற்றும் கொண்டைக்கடலை ஆகியவற்றை இலங்கைக்கு ஏற்றுமதி செய்வதில் உள்ள வர்த்தகத் தடைகள் மற்றும் வரிகளை குறைப்பது குறித்து இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டுள்ளது. இதனால், வரும் காலங்களில் மொன்டானா பருப்புகள் இலங்கைச் சந்தையில் பெரியளவில் இடம்பிடிக்க வாய்ப்புள்ளது.அமெரிக்கா தனது பாதுகாப்பு, பொருளாதார, கொள்கைகளை வெளியுறவுக் கொள்கையுடன் திட்டமிட்டு ஒருங் கிணைக்கிறது. இருதரப்பு வர்த்தக இடைவெளியைக் குறைக்கும் நடவடிக்கைகளை அமெரிக்கா தீவிரப் படுத்தியிருக்கிறது.

அமெரிக்க வர்த்தக பணியகத்தின் தரவுகளின்படி, 2025ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து அமெரிக்கா, 3.1 பில்லியன் டொலர் பெறுமதியான பொருட்களை இறக்குமதி செய்திருந்தது. ஆனால், இலங்கைக்கு 368.8 மில்லியன் டொலர் பெறுமதியான பொருட்களையே அமெரிக்கா ஏற்றுமதி செய்தது. இதனை ஒரு தலைப்பட்சமான வர்த்தகம் என்கிறது ட்ரம்ப் நிர்வாகம். இந்த இடைவெளியை குறைக்க வேண்டும் என அமெரிக்கா தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வருகிறது. இதனை மையப்படுத்தி ட்ரம்ப், அதிக வரிகளை விதித்த போதும், அதிகளவு பொருட்களை இறக்குமதி செய்வதாக இலங்கை வழங்கிய உறுதிமொழிகளின் பின்னர் வரிகள் குறைக்கப்பட்டன. ஆனாலும், அமெரிக்கா எதிர்பார்த்தபடி, இருதரப்பு வர்த்தக இடைவெளியை குறைப்பதற்கான நடவடிக்கைகளில் இலங்கை அரசாங்கம் இறங்கவில்லை. நாங்கள் சிறிய நாடு, எங்களிடம் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யக் கூடிய பொருட்கள் குறைவாகவே இருக்கிறது போன்ற காரணங்களை கூறி தப்பிக்க முயன்றது இலங்கை. ஆனால் அமெரிக்கா திட்டமிட்டு காய்களை நகர்த்துகிறது. தனது விவசாய உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கான நகர்வுகளை அது தொடங்கியிருக்கிறது.

அமெரிக்காவிடமிருந்து குறிப்பிட்டளவு மசகு எண்ணெயை வாங்கியதுடன், தப்பிக்கலாம் என்று நினைத்திருந்த அரசாங்கத்திற்கு, அமெரிக்கா அதிர்ச்சி கொடுக்க ஆரம்பித்திருக்கிறது. கனடாவுடன் வர்த்தகப் போர் நடத்தும் அமெரிக்கா, கனடாவில் இருந்து இலங்கை இறக்குமதி செய்யும் பருப்புகளை, தன் பக்கம் திருப்ப முற்படுகிறது. இது ஒரு பக்கத்தில் கனடாவுக்கு கொடுக்கப்படும் அடி.இன்னொரு பக்கத்தில் இலங்கையின் சந்தை அதன் வசமாகப் போகிறது.

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! பலரா லும் செய்ய முடியாத காரியங் களை வெற்றிகரமாக முடிப்பீர் கள். தொழில் வியாபாரத்தில் வாக்கு வன்மையால் எளிதாக நல்ல லாபம் கிடைக்க பெறுவீர்கள். பிரச்சனை களை பேசியே தீர்த்து விடுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் பதவி உயர்வு. கூடுதல் பொறுப்பு கிடைக்க பெறுவர்கள். எதிலும் திட்டமிட்டு செய லாற்றுவதால் மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும்.




ரஷபராசி அன்பர்களே! புத்தி சாதுர்யத்தை பயன்படுத்தி காரி யங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். செயல் திறன் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைச்சல் உண்டாகும். புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். பணவரத்து திருப்தி தரும். புதிய வேலைக்கு முயற்சி செய்வது நன்மை தரும். வாழ்க்கை துணை உங்க ளுக்கு பல விதத்திலும் உதவிகள் செய் வார்.




மிதுனராசி அன்பர்களே! மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். நெருக்கடியான சந்தர்ப் பத்தில் உதவிகள் கிடைப்பது கடினமாக இருக்கும். எந்த காரியங்களில் ஈடுபட்டாலும் மனத் தடு மாற்றம் இல்லாமல் இருப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங் களில் இழுபறியான நிலை காணப்படும். அதிகாரிகள் கூறிய வேலையை செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். சகஊழியர் களிடம் அனுசரித்து செல்வது நல்லது.




கடகராசி அன்பர்களே! செயல் திறன் மேலோங்கும். மதிப்பும், மரியாதையும் கூடும். தொழில் வியாபாரம் தொடர்பாக பயணங் கள் சென்று வரவேண்டி இருக் கும். வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திப்பர். குற்றச்சாட்டு களுக்கும் ஆளாகலாம் கவனம் தேவை. குடும்பத்தினரிடம் வாக்குவாதத்தில் ஈடுபடா மல் அனுசரித்து செல்வது நல்லது. மரு த்துவம் தொடர்பான செலவும் ஏற்படலாம்.




சிம்மராசி அன்பர்களே! நண்பர் களுடன் சேர்ந்து செய்யும் காரி யம் சாதகமான பலன் தரும். திட்டமிட்டு செய்யும் பயணங் கள் வெற்றி பெறும். செலவு செய்வது பற்றி யோசனை செய்து தேவையென்றால் மட்டுமே செய் வீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் சக பணியாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து முக்கிய முடிவுகள் எடுப்பது நன்மை தருவதாக இருக்கும்.




கன்னிராசி அன்பர்களே! எதிர் காலம் தொடர்பான திட்டங்கள் மனதில் தோன்றும். எதையும் முன்னேற்பாட்டுடன் செய்வீர் கள். விவேகம் உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடந்து முடிய திறமையாக செயல்படுவீர்கள். உத்யோகத்தில் இருப்ப வர்கள் ஏற்கனவே செய்த திறமையான பணிகளுக்கு உரிய நற்பலனை பெறுவார் கள். குடும்பத்தில் தாய்வழி உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.




துலாம்ராசி அன்பர்களே! அறிவு திறமை வெளிப்படும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண் டாகும். அடுத்தவர்களின் குற்ற ச்சாட்டுக்கு ஆளாகநேரிடலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இரு க்கும். வாடிக்கையாளர்களிடம் சாமர்த்திய மாக பேசுவதன் மூலம் வியாபாரம் வளர்ச்சி பெறும். பிறர் கூறும் ஆலோசனைகளை ஆராய்ந்து பார்த்து செய்வது நல்லது. உத்யோகஸ்தர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். வாக்குவாதத்தையும், கோபத்தையும் தவிர்ப்பது நல்லது.




விருச்சிகராசி அன்பர்களே! நீங் கள் நல்லதாக பேசினாலும் எதிரில் உள்ளவர்கள் அதை தவறான கண்ணோட்டத்துடனேயே பார்ப் பார்கள். மற்றவர்களின் செயல்களால் மன அமைதி கெடவும் வாய்ப்பு உண்டு. தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் கூடுதல் முயற்சிக்கு பிறகு எதிர்பார்த்தபடி நடந்து முடியும். வியாபாரத்தில் புது மையை செய்வீர்கள். உத்யோகத்தில் இருப் பவர்களுக்கு பிடித்தமான இடத்திற்கு வேலை மாற்றம் கிடைக்கலாம்.






தனுசுராசி அன்பர்களே! கடின மான பணிகளையும் செய்து முடிக்கும் துணிச்சல் ஏற்படும். காரிய வெற்றியால் மனதில் சந்தோஷம் உண்டாகும். இருக்கும் இடத்தை விட்டு வெளியில் சென்று தங்க நேரிடும். தொழில் வியாபாரம் பற்றி மன தில் இருந்த கவலை நீங்கி தைரியம் உண்டாகும் கணவன், மனைவிக் கிடையே இருந்த மனவருத்தம் குறை யும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வேலையை சிறப்பாக செய்து முடிப்பர்.




மகரராசி அன்பர்களே! எந்த ஒரு காரியமும் வெற்றியடை வதுடன் லாபகரமாகவும் இருக் கும். இழுபறியாக இருந்த ஒரு சில விஷயங்கள் நல்ல முடிவு க்கு வரும். வீடு, வாகனங்கள் வாங்கும் நிலை உருவாகும். தொழில், வியாபாரம் முன்னேற்றம் காணப்படும். வியாபார வளர்ச்சிக்கு புதிய திட்டங்களை தீட்டுவீர் கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு நிலு வையில் உள்ள பணம் கைக்கு கிடைக் கும். பயணங்களால் லாபம் கிடைக்கும்.




கும்பராசி அன்பர்களே! எதை யும் ஆராய்ந்து பார்த்த பிறகே அதை செய்ய முற்படுவீர்கள். தொட்ட காரியம் வெற்றியில் முடிந்தாலும் சற்று கால தாமதம் ஆக லாம். புதிய நண் பர்கள் கிடைப்பார்கள். தொழில், வியாபாரம் மிகவும் சிறப்பாக நடைபெறும். வியாபாரம் மற்றும் தொழிலை விரிவுபடுத்துவது பற்றி திட்டங்களை செயல்படுத்துவீர்கள். பயண ங்கள் சாதகமான பலனை தரும். உத்யோ கஸ்தர்கள் முன்னேற்றம் காண்பர்.




மீனராசி அன்பர்களே! ஆக்க பூர்வமான யோசனைகள் தோன் றும். கடித போக்குவரத்து அனு கூலமான பலனை தரும். புது வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதக மான பலன் தரும். தொழிலில் முன்னேற்றம் காணப்படும். சாமர்த்தியமாக வாடிக்கை யாளர்களுடன் பேசிஅவர்களை தக்க வைத் துக் கொள்வீர்கள். உத்யோகத்தில் இருப்ப வர்கள் எதிர் காலம் பற்றிய திட்டங்களை வகுப்பார்கள். குடும்பத்தில் இருப்ப வர்களி டம் தன்மையாக பேசி பழகுவது நல்லது.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

## நவிப்பிள்ளை அம்மையார் ஈழத் தமிழர்களோடு....

(15ம் பக்கத் தொடர்ச்சி) நோர்வேயில் ஒரு பெண் அமைச்சர் உண்டு. இவர்கள் எல்லாரும் தாங்கள் தமிழர்கள் என்பதற்காகஇதமிழ்த் தேசிய அரசிய லைக் குறித்து தன்னிச்சையாக முடிவுகளை எடுக்க முடியுமா? கனடாவில் இப்பொழுது அமைச்சராக இருக்கும் ஹரி ஆனந்தசங்கரி கனடாவின் வெளி யுறவுக் கொள்கைத் தீர்மானங்களை மீறி ஈழத் தமிழர்கள் தொடர்பாக முடிவு களை எடுக்க முடியுமா? லண்டனில் உமா குமரன் அவ்வாறு முடிவெடுக்க முடியுமா? நோர்வேயில் ஹம்சாஜினி அவ்வாறு முடிவெடுக்க முடியுமா? இல்லை. அவர்கள் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசின் கொள்கை களைத் தான் பிரதிபலிக்கலாம். நடைமுறைப்படுத்தலாம். தமிழர்களாக மட்டும் முடிவெடுக்க முடியாது. அவர்கள் எந்த அரசாங்கத்தின் ஆணைக்கு உட் பட்டு இயங்குகிறார்களோ அதன் வெளியுறவுத் தீர்மானங்களைதத்தான் பிரதி பலிப்பார்கள். தமிழர்களின் இன உணர்வை முழுமையாகப் பிரதிபலிக்க முடியாது. இது நவிப்பிள்ளை அம்மையாருக்கும் பொருந்தும்.

எனவே பதவிப் பொறுப்பில் இருந்தவரை அவர் உத்தியோகபூர்வமாக தெரி வித்த கருத்துக்களைக் குறித்து தமிழ் மக்கள் உணர்ச்சி வசப்படத் தேவை யில்லை. அதற்காக அவரைப் பகைவரை நோக்கித் தள்ளத் தேவையில்லை. மாறாக ஓர் அரசைப் போல சிந்தித்து அவரை எப்படி இன அழிப்புக்கு எதிரான நீதிக்கான போராட்டத்தில் பங்காளி ஆக்கலாம் என்றுதான் சிந்திக்க வேண்டும் செயற்பட வேண்டும்.

## ஆசிரியர் தினம் 2026:- கைபேசிகளின் காலத்தில்

(20ம் பக்கத் தொடர்ச்சி) கல்விச் சீர்திருத்தச் செயன்முறை குறித்து மின்னணு மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களின் தலைவர்களுக்குத் தெளிவுபடுத் துவதற்காக ஒரு நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது. இந்நிகழ்வில், கல்வி,உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பாகப் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தும் உபகுழுவின் தலைவரான பேராசிரியர் பிரபாத் ஜயசிங்க, பின்வருமாறு உரையாற்றினார்.... புதிய சீர்திரு த்தங்கள் மூலம் கல்விப் புலத்தில் பல முக்கிய மாற்றங்கள் நிகழ்கின்றன. மனனம் செய்வதை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் மைய முறை யிலிருந்து விலகி, மாணவர்களை மையமாகக் கொண்ட, ஆழமான மற்றும் உண்மையான உலக அனுபவங்களுடன் இணைந்த கற்றல் முறையை நோக்கி நகர்வது இதன்போது இடம்பெறுகின்றது.

இதில் அறிவாற்றல் வளர்ச்சிக்கு மேலதிகமாக, பிள்ளையின் உணர்வுபூர்வ மான, சமூக, உடலியல் மற்றும் ஒழுக்கவியல் வளர்ச்சியை உறுதிப்படுத்து வதே நோக்கமாக அமைகின்றது. 21ஆம் நூற்றாண்டின் தேர்ச்சிச் சட்டகமாக அடிப்படை எழுத்தறிவு (தொழில்நுட்ப, நிதி, ஊடக மற்றும் அறிவியல் சார்ந்த) நபரிடைத் தேர்ச்சிகள் (விமர்சனச் சிந்தனை,தொடர்பாடல்) மற்றும் பெறுமானக் கட்டமைப்புடன் பிள்ளைகளை ஆயத்தப்படுத்துவது இதன் போது இடம்பெறுகின்றது. மாற்றுக் கற்றல் வழிகளைப் பின்பற்றிப் பொதுக் கல்வி, தொழிற்கல்வி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியை ஒன்றுடன் ஒன்று இணைத்து, 13ஆம் தரம் வரை எந்தவொரு பிள்ளையையும் கைவிடாத பரந்த பாதையொன்றை உருவாக்குவதும் புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்குள் இடம்பெறுகின்றது .புதிய மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்தி இதுவரை இருந்து வரும் நினைவாற்றலைப் பரிசோதிக்கும் இறுதிப் பரீட்சை முறை யிலிருந்து விடுபட்டு, மாணவரின் பகுப்பாய்வு, ஆக்கபூர்வமான மற்றும் பிரச்சினையைத் தீர்க்கும் திறன்களைத் தொடர்ச்சியாக அளவிடும் முறை களை அறிமுகப்படுத்துவதன் மூலம் தொடர் மதிப்பீட்டின் ஊடாகப் பிள்ளைகளின் திறமைகளைத் தீர்மானிப்பது இதன்போது இடம்பெறுகின்றது நல்ல விஷயம்.அதைச் செய்யட்டும். ஆனால் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையை நீக்குவதும் அதற்குள் அடங்குமா?

## ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியல் நிலைப்பாட்டு

(21ம் பக்கத் தொடர்ச்சி) அக்கட்சியின் வழமை யான பாணி. எதுவாயினும் சுமந்திரன் விருப்பந் தான் கட்சியின் முடிவாக இருக்கும். இந்தவகையில் பார்த்தால் சஜித்தைத் தவிர வேறு தெரிவு இருக்குமா என்பது இன்னும் இரண்டாண்டுகளின் பின் தெரியவரும். எதுவரினும் எத்தனை பேர் அவர்களு டன் கூட வருவார்கள் என்பது இங்கும் கேள்விக்குறி தான். தமிழ்த் தேசிய முன்னணி எனப்படும் கொங்கிரஸைப் பொறுத்தவரை ஜனாதிபதித் தேர்த லைப் பொறுத்துத் தெரிவுப் பிரச்சினை இருக்கப் போவதில்லை. ஏனெனில் தமிழ் மக்கள் அத்தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என இலகுவாகக் கடந்து சென்று விடுவார்கள். பாராளுமன்றத் தேர்தலைப் பொறுத்து ஏனைய கட்சிகளுடன் கூட்டுச்சேர்வதற்கான வாய்ப்புக் குறைவாகையால் வழமை போலத் தனித்தவில் தான் அடிக்கவேண்டும். மகிந்த அன்ட் பமிலியே ஊச லாடும் போது டக்ளஸ் பாராளுமன்ற உறுப்பினராக வந்தாலென்ன வரா விட்டாலென்ன? இரண்டும் ஒன்றுதான்.

இந்தவகையில் பல சிங்களத் தலைவர்களைப் போலவே தமிழ் முஸ்லிம் தலைவர்களுக்கும் ஆட்சியதிகாரம், அமைச்சுப் பதவிகளல்ல அரசியலில் தப்பிப் பிழைப்பதே பெரிய போராட்டமாக இருக்கப்போகிறது போலவே தென்படுகிறது.

## கடும் எதிர்ப்பால் பின்வாங்கிய ட்ரம்ப்!

(22ம் பக்கத் தொடர்ச்சி) அந்த நேரலை ராணுவம் மற்றும் நாட்டின் கௌரவ த்தை களங்கப்படுத்தும் என்று கூறி, அதனை நிறுத்துமாறு ட்ரம்பிடம் வலியுறுத்தினர். இந்நிலையில் பல்வேறு தரப்பில் இருந்தும் எதிர்ப்பு கிளம்பிய தால் தனது முடிவில் இருந்து ட்ரம்ப் அரசு பின்வாங்கியுள்ளது. மாறாக, பாதிக் கப்பட்டவர்களின் நெருங்கிய குடும்பத்தினர் விரும்பினால், மரண தண்ட னையை நேரில் காணலாம் என்று தெரிவித்துள்ளார்.

(7ம் பக்கத் தொடர்ச்சி) மன்னிப்பு தொடர்பில் சந்தியா எக்னலிகொட மற்றும் பாக்கியசோதி சரவணமுத்து ஆகியோருடன் தொடர்புடைய சட்ட நடவடிக்கை களும் எடுக்கப்பட்டன. இந்த விவகாரத்தில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் மூலம் மன்னிப்பு வழங்கப்பட்ட நடைமுறையில் காணப்பட்ட குறைபாடுகள் வெளிப்படுத்த ப்பட்டுள்ளன. எனது ஜனாதிபதி பதவிக்காலத்தில் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட தவறுகளின் காரணமாக ஞானசார தேரர் மீண்டும் சிறையில் அடைக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தால் மகா சங்கத்தினருக்கு ஏற்பட்ட பாதிப்புக்காக நான் வருந்துதம் தெரிவிப்பதுடன், அவர்களிடம் மன்னிப்பும் கோருகிறேன் என்று அவ்வறிக்கையில் மைத்திரிபால சிறிசேன மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஜோதிலிங்கம்

சில ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணம். திருமறைக் கலாமன்ற மண்டபம் ஒன்றில் ஜோதிலிங்கம் தனது நூல் ஒன்றை வெளியிட்டார். அந்த மேடையில் நான் பேசினேன். ஜோதிலிங்கத்தின் தமையனும் சமயச் சொற்பொழிவாளருமாகிய சிவமகாலிங்கமும் அதில் பேசினார்.

நூல் வெளியிட்டு வைக்கப்பட்ட பின் சிவமகாலிங்கம் என்னோடு கதைக்கும் போது சொன்னார்....''நிலாந்தன் என்னுடைய தம்பியை அதாவது ஜோதிலிங்கத்தை 1980களின் இறுதிப்பகுதியில் எவ்வளவு கஷ்டப்பட்டு யாழ்ப்பாணத்தில் இருந்து பாதுகாத்துக் கொண்டு போய் கொழும்பில விட்டன். ஆனால் யார் இவனை யாழ்ப்பாணத்தில் இருக்க விடாமல் துரத்தினார்களோ. அவர்களுடைய அரசியலை இவன் இப்பொழுது ஆதரித்துக் கதைக்கிறான்.

அப்படியென்றால் என்பதுகளின் இறுதியில் இவனைப் பாதுகாத்துக் கொண்டு போன எனக்கு விசரா? அல்லது இவனுக்கு விசரா? என்று கேட்டார். நான் அவருக்குச் சொன்னேன் அண்ண உங்களுக்கும் விசர் இல்ல ஜோதிக்கும் விசர் இல்ல. இது பண்புருமாற்றம் – transformation. ஆயுதப் போராட்டம் நிகழ்ந்த எல்லா நாடுகளிலும் எல்லாச் சமூகங்களிலும் இது நிகழ்ந்திருக்கிறது. இது நிகழாவிட்டால் சமூகம் மாற்றத்துக்கு உள்ளாக முடியாது. இறந்த காலத்திலேயே தேங்கி நின்று விடும். அன்றைக்கு நீங்கள் ஜோதியைப் பாதுகாத்ததும் சரி இன்றைக்கு ஜோதி கதைக்கும் அரசியலும் சரி. அதுதான் பண்புருமாற்றம். அன்றைக்கு நீங்கள் பாதுகாத்துக் கொடுத்திருக்கா விட்டால் இன்றைக்கு சமூகம் கொண்டாடும் ஜோதி உயிருடன் இருந்திருக்க மாட்டார்'' என்று.

ஈழத் தமிழர்கள் சுமார் 4 தசாப்த கால ஆயுதப் போராட்டத்தை நிகழ்த்திய ஒரு சமூகம். ஆயுதப் போராட்டத்தோடு நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்பட்ட எல்லாருடைய கைகளிலும் இரத்தக்கறை உண்டு. எல்லாருடைய எழுத்துக்களிலும் இரத்தக் கறை இருக்கும். எனவே இதில் என்னுடையது தேவ ரத்தம் உன்னுடையது அசுர ரத்தம் என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. ரத்தம் ரத்தந் தான். ரத்தம் சிந்தும் ஓர் அரசியலைக் கடந்து வந்த சமூகம் அந்த இறந்த காலத்தில் இருந்து கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில் புதிய காலத்துக்குத் தன்னைத் தகவமைத்துக் கொள்ள வேண்டும். அதுதான் பண்புருமாற்றம்.

ஜோதிலிங்கம் மட்டுமல்ல, தராகி சிவராமும் அவ்வாறு பண்புருமாற்றத்தைப் பிரதிபலித்த ஒரு கருத்துருவாக்கி தான். சிவராமின் இறுதி நிகழ்வின் போது சரிநிகர் பத்திரிகையின் ஆசிரியர் சிவக்குமார் அதைச் சுட்டிக் காட்டிப் பேசியிருந்தார். 1980களின் பிற்பகுதியில் இந்திய – இலங்கை உடன்படிக்கைக்கு உடனடுத்த காலப்பகுதியில் கிழக்கில் மட்டக்களப்பில் இடம் பெற்ற ஒரு திட்டமிடப்பட்ட தாக்குதலில் புளட் இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் சிலர் கொல்லப்பட்டார்கள். இந்தச் சம்பவத்தில் சிவராமும் இலக்கு வைக்கப்பட்டதாக ஒரு தகவல் உண்டு. சிவராம் அந்தத் தாக்குதலை முன்கூட்டியே அறிந்து அந்த வாகனத்தில் வராமல் தன்னைப் பாதுகாத்துக் கொண்டார் என்ற ஒரு கொன்ஸ்பிரேசி விளக்கமும் உண்டு. இத்தாக்குதல் தொடர்பாக சிவராம் ஒருமுறை என்னிடம் சொன்னார். அன்றைக்கு என்னைக் கொல்லத் திரிந்தவர்கள் இன்றைக்கு என்னை கௌரவிக்கிறார்கள் என்று.

சிவராமின் இறுதி நிகழ்வில் சரிநிகர் ஆசிரியர் சிவகுமார் இந்தச் சம்பவத்தைச் சுட்டிக்காட்டிப் பேசினார். அன்றைக்கு கொல்லப்பட்டு இருந்திருந்தால் சிவராம் எப்படி அழைக்கப்பட்டு இருந்திருப்பார்? ஆனால் 2005இல் அவர் கொல்லப்பட்ட போது அவர் மாமனிதர் என்று அழைக்கப்படுகிறார். இப்படி எத்தனை மாமனிதர்கள் எதிரிகளாகக் கணிக்கப்பட்டு அல்லது துரோகிகளாகக் கணிக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார்கள்? என்ற பொருள்பட சிவக்குமார் கேள்வி எழுப்பியிருந்தார்.

சிவக்குமார் ஜோதிலிங்கம் சேரன். சிவராம். குருபரன் இப்படிப் பலருக்கு 1980களின் பிற்பகுதியில் தாயகம் பாதுகாப்பாக இருக்கவில்லை. அவர்கள் கொழும்பில் தஞ்சங்கோர வேண்டியிருந்தது. ஆனாலும் அவர்கள் கொழும்பின் அரசியலைப் பிரதிபலிக்கவில்லை. கொழும்பில் இருந்தபடியே தமிழ் மக்களின் கூட்டுக் காயங்களையும் துயரங்களையும் பிரதிபலித்தார்கள். அதாவது தங்களுடைய மக்களோடு நின்றார்கள் மக்களுக்காக நின்றார்கள். ஒரு இயக்கத்துக்குடாக அவர்கள் போராட்டத்தைப் பார்க்கவில்லை. மக்களுக்கு ஊடாகவே போராட்டத்தைப் பார்த்தார்கள்.தமது மக்களோடு நின்ற காரணத்தால் அரசையும் அரசாங்கத்தையும் எதிர்த்தார்கள்.

இது தான் பண்புருமாற்றம். தமது மக்களோடு நிற்கும் எல்லா அரசியல் போராளிகளும் செயற்பாட்டாளர்களும் அவ்வாறான பண்புரு மாற்றத்துக்கு தயாராக இருப்பார்கள். ஜோதிலிங்கமும் தயாராக இருந்தார்.

அவர் எந்த காலகட்டத்தில் எந்த கட்சியோடு நின்றார்?அ ல்லது எந்த இயக்கத்தில் உறுப்பினராக இருந்தார்? அல்லது எந்த இயக்கத்தால் தேடப்பட்டார்? அல்லது எந்த இயக்கத்துக்கு எதிராகச் செயல்பட்டார்? அல்லது எந்தக் கட்சிக்கு எதிராக எழுதினார்? ... என்பவையெல்லாம் இங்கு முக்கியமல்ல. எல்லாக் காலங்களிலும் அவர் மக்களோடு நின்றாரா? இல்லையா? என்பதுதான் இங்கு முக்கியம். ஜோதிலிங்கம் மக்களோடு நின்றார்.



மக்களோடு நின்ற காரணத்தால் தான் அவர் தான் உறுப்பினராக இருந்த அமைப்பையும் விமர்சித்தார் கட்சிகளை விமர்சித்தார். தான் ஆதரித்த கட்சிகளில் இருந்து வெளியேறினார். மக்களோடு நின்ற காரணத்தால் தான் தன்னை ஆபத்துக்கு உள்ளாக்கிய அரசியலை மக்களுக்கு ஊடாகப் பார்த்தார். இயக்கங்களுக்கு ஊடாகப் பார்க்கவில்லை.

அவர் ஈ.பி.ஆர்.எல்.எஃ.பில் ரமணியாக இருந்த காலத்தில் தொடங்கி அவர் தலைமறைவாக இருந்து தப்பி ஓடிய காலம்.பின்னர் ஆசிரியராக கொழும்பு மைய அரசியற் செயற்பாட்டாளராக இருந்த காலம். அதன்பின் 20009ஐ உடனடுத்த காலம். மீண்டும் யாழ்ப்பாணத்தில்என்று கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு கால அவருடைய அரசியல் வாழ்வைத் தொகுத்து பார்த்தால்



அவர் எப்பொழுதுமே தன் மக்களோடு நின்றிருக்கிறார். தன்னுடைய மக்களின் கூட்டுக் காயங்களை. கூட்டுக் கோரிக்கைகளை கூட்டுணர்வை பிரதிபலித்திருக்கிறார். தனது மக்களின் நீதிக்கான போராட்டங்களில் எப்பொழுதும் முன்னணியில் காணப்பட்டிருக்கிறார். தனது மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் எல்லா நடவடிக்கைகளிலும் அவர் முன்னணியில் நின்றிருக்கிறார். அவர் மக்களோடு நின்றிருக்கிறார். அதனால் அரசுக்கும் அரசாங்கத்துக்கும் எதிராகச் செயற்பட்டிருக்கிறார். அதுதான் ஜோதிலிங்கம். அவர் தன் மக்களோடு நின்றபடியால். மக்களுக்கு ஊடாக அரசியலைத் தரிசித்தபடியால். பண்புருமாற்றத்துக்குத் தயாராக இருந்தார்.

அவருடைய அரசியல் நிலைப்பாடுகளில் அதிதீவீரம் இருந்ததுண்டு. அதனாலேயே பகைவரைச் சம்பாதித்ததும் உண்டு. ஆனால் மனித உறவுகளைக் கையாளும் போது அவர் பகை பாராட்டியவர் அல்ல. நட்புப் பாராட்டியவர் தான். அவருக்கு அஞ்சலி செலுத்திய எல்லாக் கட்சித் தலைவர்களும் அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். முரண்பாடுகள் இருந்த போதும் உறவைப் பேணியவர் என்று.

பல்கலைக்கழகத்துக்கு வந்த காலத்தில் இருந்து. கடைசியாக கடந்த மாதம் திலீபனின் நினைவு வீதி வளைவில் தமிழ் மக்களின் நினைவு கூர்தலுக்கான உரிமைக்கான போராட்டம் வரையிலும்.அவர் தனது மக்களுடைய நீதிக்காக போராடியவர்.எல்லாச் சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் எல்லா அரசியல் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் போராடியவர். சாதி ஒடுக்குமுறையாகட்டும். மலாயகத் தமிழர்களின் நீதிக்கான போராட்டங்கள் ஆகட்டும். எல்லாவற்றிலும் ஜோதிலிங்கம் பாதிக்கப்பட்ட மக்களின் பக்கம் நின்றார்.

ஏன் அதிகம் போவான்? 1980களின் பிற்கூறில் யாழ்.பல்கலைக்கழகத்தில் கடத்திக் காணாமல் ஆக்கப்பட்ட விஜிதரன் என்ற மாணவனுக்கான போராட்டக் களத்தில் தலைமை வகித்தவர் அவர்தான். அதேசமயம் கடந்த 17 ஆண்டுகளாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டக் களங்களிலும். நீதிக்கான போராட்டக் களங்களிலும் அவர் காணப்பட்டார்.

மேலோட்டமாகப் பார்த்தால் அவர் அங்கேயும் நிற்கிறார் இங்கேயும் நிற்கிறார் என்று ஒரு தோற்றம் கிடைக்கும். ஆனால் அவருடைய அரசியல் நம்பிக்கைகளை ஆழமாகத் தொகுத்துப் பார்த்தால் அவர் எப்பொழுதும் தனது மக்களோடு நின்றிருக்கிறார். தனது மக்களோடு நிற்கும் எந்த ஒரு வாழ்நாள் போராளியும் பண்புருமாற்றத்திற்குத் தயாராக இருப்பார்.

பல்கலைக்கழகத்தில் மாணவர் தலைவராக தோளில் ஒரு துணிப்பையோடு காணப்பட்டவர். இறக்கும்வரையிலும் தோளில் துணிப்பையோடு பெரும்பாலான போராட்டக் களங்களில் முன்னணியில் நின்றார். அந்தத் துணிப்பைக்குள் சில புத்தகங்கள் இருக்கும். அந்த புத்தகங்களை தன் கண்ணில் படும் எல்லாருக்கும் தேடித் தேடிக் கொடுப்பார். கிறிஸ்தவ சுயாதீன திருச்சபைகளைச் சேர்ந்தவர்கள் தமது துண்டுப் பிரசுரங்களைத் தேடித்தேடி விநியோகிப்பதுபோல.

சிறிய உருவம் நரைத்த நறுக்கப்பட்ட மீசை. கரகரத்த அடிக்குரலில் கதைப்பார். கடைசியாக திலீபனின் நினைவு வீதி வளைவிலும் அவ்வாறுதான் காட்சி தந்தார் கதைத்தார். அவரை கடந்த திங்கட்கிழமை. அவருடைய ஊர்ச் சுடலையில் அவருடலைத் தகனம் செய்தோம்.

தோளில் துணிப்பையோடு கரகரப்பான அடிக்குரலில் கதைக்கும் அந்தச் சிறிய உருவம் இனி எங்கள் மத்தியில் இல்லை. ஆனால் அவர் எழுதிய நூல்கள் உண்டு. எழுதிய கட்டுரைகள் உண்டு. கொடுத்த நேர்காணல்கள் உண்டு. கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு காலம் வாழ்ந்து காட்டிய பண்புரு மாற்ற வாழ்க்கை உண்டு.

சிவராமுக்கு நான் எழுதிய நினைவுக் குறிப்பின் கடைசிப் பந்தியில் நான் கூறியது போல. ஜோதிலிங்கத்துக்கு அஞ்சலி செலுத்துவது என்பதை. ஆயுத மோதல்களுக்குப் பின்னரான கடந்த 17 ஆண்டுகால அனுபவத்தின் அடிப்படையில் சொன்னால். பண்புரு மாற்றத்துக்குத் தயாராக இருப்பது தான்.ஒரு பண்புரு மாற்றத்தை நோக்கித் தமிழ்மக்கள் மத்தியில் கருத்துருவாக்கம் செய்வது தான்.

# ஆசிரியர் தினம் 2026:- கைபேசிகளின் காலத்தில் முன்னுதாரணம் மிக்க ஆசிரியராக இருப்பது?

– நிலாந்தன் –

கடந்த வாரம் ஆசிரியர் தினம் நாடு முழுவதும் கொண்டாடப் பட்டது. அது தொடர்பான காணொளிகள் அதிகளவு பகிரப்பட்டன. கைபேசிகளின் காலத்தில் ஓர் ஆசிரியர் தினம் தொடர்பான காணொளிகள் அவ்வளவு பரவலாகப் பகிரப்பட்டது இந்தமுறை தான் எனலாமா?




அந்த காணொளிகளில் அதிகமானவை நடனக் காட்சிகள் ஆசிரியர்கள் ஏதோ ஒரு பாட்டுக்கு நடனமாடுகிறார்கள். அந்தப் பாட்டுகளில் பெரும்பாலானவை சினிமாப் பாடல்கள். இன்னொரு தொகுதி காணொளிகளில் ஆசிரியர்கள் பாட்டுப் பாடுகிறார்கள். அந்தப் பாட்டுகளும் அதிகமானவை சினிமாப் பாடல்கள் தான். சிறு தொகுதி காணொளிகளில் ஆசிரியர்கள் நாடகம் நடிக்கிறார்கள். அது ஒப்பீட்டளவில் குறைவு.

ஒரு நடன ஆசிரியை சொன்னார், தன்னுடைய பள்ளிக்கூடத்தில் ஒரு பாடலுக்கு நடனமாட வேண்டும் என்று தீர்மானித்த போது, எது பாடல் என்பதனை தீர்மானிப்பதிலேயே வெவ்வேறு அளவுகோல்கள் முன்வைக்கப்பட்டதாக. பாடல்கள் அனேகமாக சினிமா பாடல்கள் தான். அதில் பிள்ளைகளுக்கு முன்னுதாரணமாக அமையக்கூடிய ஒரு பாடலை தேர்வு செய்ய வேண்டும் என்று ஆசிரியர்கள் விரும்பியிருக்கிறார்கள்.

அந்தப் பாடலுக்கு நடனமாடும் போதும் அந்த நடனம் முன்னுதாரணமாக அமைய வேண்டும் என்றும் அவர்கள் எதிர் பார்த்திருக்கிறார்கள். அதாவது மாணவர்களுக்கு முன் ஆடினாலும் சரி, பாடினாலும் சரி நடித்தாலும் சரி, அது பிள்ளைகளுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பு ஆசிரியர்களிடம் இருந்திருக்கிறது. அவ்வாறு முன்னுதாரணமாக இருப்பதற்காக, பண்பாட்டு ரீதியான அளவுகோல்களை வைத்துக் கொண்டு எந்தப் பாடலுக்கு? எப்படி ஆடுவது? என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் சிங்களப் பகுதிகளில் இருந்து கிடைத்த நடனக் காட்சிகளில் அவ்வாறான பண்பாட்டு இறுக்கங்கள் இருக்கவில்லை. அங்கே ஆசிரியர்கள் உற்சாகமாகவும் பண்பாட்டு இறுக்கம் இல்லாமலும் ஒப்பீட்டளவில் சுதந்திரமாகவும் ஆடினார்கள்.சில சிங்களப் பள்ளிக்கூடங்களில் நடனக் காட்சிகள் அல்லது நாடகங்கள் கற்பனை வளம் மிக்கவைகளாக, படைப்புத்திறன் மிக்கவைகளாக, ரசிக்கத் தக்கவைகளாக இருந்தன. தமிழ்ப் பகுதிகளில் கிடைத்த பல காணொளிகளில் பெரும்பாலானவை பண்பாட்டு இறுக்கம் காரணமாக யாந்திரிகமானவைகளாகக் காணப்பட்டன. அதனால் அது முழுமையாக கலையாக பரிணமிக்கவும் இல்லை. நாடகங்களும் அப்படித்தான்.

என்றாலும் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் பார்வையாளர்களாக இருக்கத் தக்கதாக ஆசிரியர்கள் அவைக்காற்றுவது என்பது ஒரு வித்தியாசமான அனுபவம். அது ஆசிரியர்-மாணவ உறவில் இருக்கக் கூடிய இறுக்கத்தையும் இயல்பின்மையையும் நீக்கக் கூடியது. இந்த அடிப்படையில் பார்த்தால் இம்முறை ஆசிரியர் தின கொண்டாட்டங்கள் சந்தோஷமானவைகலைப் பரிமாணம் கொண்டவை. ஆசிரியர்-மாணவ உறவில் இறுக்கத்தைத் தளர்த்துபவை.

போட்டிப் பரீட்சைகள் காரணமாக தனியார் கல்வி நிறுவனங்கள் பாடசாலைகளை விடவும் முக்கியத்துவம் பெறும் ஒரு கல்விச் சூழலில் இந்த ஆண்டு ஆசிரியர் தினம் பள்ளிக்கூடங்களில் விமரிசையாக கொண்டாடப்பட்டிருக்கிறது. அதே சமயம் இதே காலப்பகுதியில் நிகழ்ந்த இரு வேறு சம்பவங்களையும் இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.அவையும் ஆசிரிய-மாணவ உறவுகளுடன் தொடர்புடையவை.

முதலாவது ஒரு காணொளி சமூக ஊடக வலைத்தளங்களில் பரவலாகப் பகிரப்படுகிறது. அது வவுனியாவில் ஒரு பள்ளிக்கூடத்தில் நடந்தது. நயினாதீவைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் தன்னுடைய படிப்புத் தேவைகளுக்காக ஓர் ஆண்டு விடுமுறையில் பாடசாலையை விட்டுப் போகிறார். அவரை வழியனுப்ப விரும்பாத பிள்ளைகள் வகுப்பறையின் கதவை மூடி அவரைப் போக விடாமல் தடுத்து அழுகிறார்கள். ஆண் பிள்ளைகள் அவருடைய கைகளைப் பிடித்து இழுத்து நிறுத்துகிறார்கள் அழுகிறார்கள். பெண் பிள்ளைகள் தங்களுக்குள் ஒரு கூட்டமாக நின்று ஒருவர் மற்றவருடைய தோளில் கைகளை போட்டு வட்டமாக நின்று அழுகிறார்கள்.

இது ஒரு காட்சி. இன்னும் ஒரு காட்சி யாழ்ப்பாணம் டெம்பிள் ரோட்டில் இடம் பெற்றது. ஒரு கொலையும் தற்கொலையும். சமையற்கலை நிபுணரான ஒரு பெண்ணை அவருடைய மாணவர் ஒருவர் கொலை செய்து விட்டு அதைத் தடுக்க முற்பட்ட அந்தப் பெண்ணின் தாயாரையும் காயப்படுத்தி விட்டு தானும் புகையிரதத்தின் முன் பாய்ந்து தற்கொலை செய்கிறார். இந்தக் காட்சியை முன்வைத்து சமூகஊடக வலைத்தள பஞ்சாயத்துக்கள், கட்டைப் பஞ்சாயத்துக்கள் விதம்விதமான தீர்ப்புகளை வழங்கினார்கள். அந்த செய்தியும் ஆசிரியரும் மாணவ-உறவு சம்பந்தப்பட்ட ஒரு செய்திதான். ஆனால் கெட்ட செய்தி.

மேற்கண்டவாறான ஒரு கல்விச் சூழலில் குறிப்பாக நமது நாட்டின் போட்டிப் பரீட்சைக் கல்விச் சூழலில், உலகம் முழுவதுமான செயற்கை நுண்ணறிவுச் சூழலில் ஆசிரியர்-மாணவ உறவில் எப்படிப்பட்ட மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன?

ஆசிரியரின் இடத்தை செயற்கை நுண்ணறிவு கைப்பற்றியிருக்கும் ஒரு காலகட்டம் இது வென்று கூறப்படுகிறது. தொகுக்கப்பட்ட தகவல்களை பகுப்பாய்வு செய்யும் விடயத்தில் செயற்கை நுண்ணறிவு ஒரு புதிய ஆசிரியராக எழுச்சி பெற்றிருக்கிறது என்பது உண்மை. ஆனால் அந்த ஆசிரியருக்கு இதயம் கிடையாது. இதயமுடைய ஓர் ஆசிரியர் பிள்ளையை அதன் உளவியலை அறிந்து ஆற்றப்படுத்துவார். ஆனால் செயற்கை நுண்ணறிவுச் செயலிக்கு அந்த பொறுப்பும் இல்லைஅந்த பரிமாணமும் இல்லை.பிள்ளைக்கும் செயலிக்கும் இடையே இதயபூர்வமான உறவு இல்லை.

செயலிகளின் கைதிகளாக உள்ள பிள்ளைகளில் பெரும்பாலானவை ஆழமான வாசிப்பை இழந்து விடுகின்றன. ஆழமான யோசிப்பை எதிலும் ஆழமான தியானிப்பை இழந்து விடுகின்றன. இதனால் எல்லாவற்றையும் ஸ்குரோல் பண்ணிக் கடக்கின்ற, எல்லாவற்றிலும் நுனிப்புல் மேய்கின்ற,எதிலும் கூர்ந்து கவனிக்காத, ஆழமாகப் பார்க்காத கவனத்தை ஒன்றுகுவிக்காத ஓர் உளவியல் மேலெழுகிறது.

இதனை ஆங்கிலத்தில் டூம் ஸ்க்ரோலிங் என்று அழைக்கிறார்கள். இதன் விளைவாக ஒரு கட்டத்தில் பிள்ளைகளின் மூளை அழுகி விடும் என்ற பொருள்பட ப்ரெயின் ரொட் என்ற ஆங்கில வார்த்தையைப் பயன்படுத்துகிறார்கள். இவ்வாறு எதையும் கூர்ந்து கவனிக்காமல் நுனிப்பில் மேயும் பிள்ளைகளை அந்த நோய்க்கூறான பண்பிலிருந்து காப்பாற்றுவதற்கும், பிள்ளைகளின் மூளைகள் அழுகுவதிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்கும், சில வாரங்களுக்கு முன் சிங்கப்பூர் அரசாங்கம் ஒரு வித்தியாசமான அறிவிப்பை விட்டது. 15 நிமிடங்கள் ஊன்றி வாசிக்கும் பிள்ளைகளுக்கு சன்மானம் தரப்படும் என்பதே அது. அது போலவே ஸ்வீடன், பின்லாந்து, நோர்வே, டென்மார்க், பிரான்ஸ் இத்தாலி ஆகிய நாடுகள், பள்ளிக் கல்வியில் அதிகமாக பயன்படுத்தப்பட்ட டப்லட்கள் மற்றும் டிஜிட்டல் திரைகள் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை என்பதைத் தொகுத்து உணர்ந்திருக்கின்றன. தொடர்ச்சியான டிஜிட்டல் திரைப் பயன்பாட்டின் விளைவாக பிள்ளைகளின் வாசிப்புத் திறண், நினைவாற்றல் மற்றும் கவனம் செலுத்தும் திறன் குறைவதாக அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். இதனால், இந்தநாடுகள் மீண்டும் அச்சிடப்பட்ட பாடப்புத்தகங்கள் குறிப்புப் புத்தகங்கள் பேனா காகிதம்.....ஆகியவற்றைப் பள்ளிகளில் அதிகமாகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளன. ஸ்வீடனின் கல்வி அமைச்சர், மாணவர்களுக்கு அதிக பாடப்புத்தகங்கள் தேவைஎன்று கூறியுள்ளார். டென்மார்க் பள்ளி நேரங்களில் கைபேசிகளைத் தடைசெய்து, அச்சிடப்பட்ட புத்தகங்களுக்கு நூற்றுக்கணக்கான மில்லியன் க்ரோனர் முதலீடு செய்து வருகிறது. நோர்வே சிறிய மாணவர்களுக்கான AI கருவிகளின் பயன்பாட்டையும் இந்த ஆண்டு கட்டுப்படுத்தியுள்ளது.

கல்வியலாளர்களும் உளவியலாளர்களும் கூறுகிறார்கள், கையால் எழுதுவது நினைவாற்றலை பலப்படுத்துகிறது என்று. தட்டச்சு செய்வதால் அதே அளவிலான பயன் கிடைப்பதில்லை என்று. அதாவது டூம் ஸ்க்ரோலிங் பிரைன் ரொட் போன்ற ஆபத்துக்களை மேற்கு நாடுகள் உணரத் தொடங்கி விட்டன. அவற்றுக்கு எதிரான தற்காப்பு நடவடிக்கைகளிலும் இறங்கி விட்டன. இலங்கையிலும் ஒரு குறிப்பிட்ட வயதுக்கு உட்பட்டவர்கள் கைபேசிகளை பயன்படுத்துவதற்கு சட்டத் தடை உண்டு.

அண்மையில் ஜப்பான் நாடு குழந்தைகள் மத்தியில் மதத்தின் மீதான அச்சத்தை வளர்ப்பது உளவியல் ரீதியிலான ஒரு துஷ்பிரயோகம் என்று ஏற்றுக் கொண்டிருக்கிறது. மதத்தின் மீதான பயத்தை அதாவது பாவம்- புண்ணியம் தொடர்பான பயத்தை பிள்ளைகள் மத்தியில் ஊக்குவிப்பது,அவர்களை உளவியல் ரீதியாகத் துஸ்பிரயோகம் செய்வது என்று யப்பான் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

ஆனால் நமது நாட்டில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் சோதனையானது அந்த வயது பிள்ளைகளுக்கு ஓர் உளவியல் சித்திரவதை என்பதை எத்தனை கல்வியியலாளர்கள் சுட்டிக் காட்டி விட்டார்கள்? எத்தனை உளவியலாளர்கள் சுட்டிக்காட்டி விட்டார்கள்? ஆனால் நாடு அந்தச் சோதனையைக் கைவிடத் தயாராக இல்லை. இலங்கைத்தீவின் கல்வி முறையில் எந்தப் பெரிய மாற்றங்களைச் செய்தாலும் அது முதலில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் உளவியல் தீமைகளை அகற்றுவதில் இருந்துதான் தொடக்கப்பட வேண்டும்.

கடந்த 14ஆம் திகதி அலரி மாளிகையில் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் குறித்த உண்மையான சரியான தகவல்களை மக்களுக்குத் தொடர்பாடல் செய்வதற்காக உருவாக்கப்பட்ட 'RIES' (Reform Information & Enquiry Service) உத்தியோகபூர்வ இணையதளத்தை வெளியிடுதல் மற்றும(18ம் பக்கம் பார்க்க)

# ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியல் நிலைப்பாட்டு மாற்றமும் தமிழ் முஸ்லிம் அரசியல் தலைவர்களும்

ஞானசார தேரருக்கு ஆதரவாக பிக்குகள் முன்னெடுத்த போராட்டம் தொடர்பில் மகாநாயக்கர்களுடனான சந்திப்பின் போது ஐக்கிய மக்கள் சக்தியின் மூத்த தலைவர் லக்ஷ்மன் கிரியெல்லவின் வெளிப்பாடும் அப்போராட்டம் தொடர்பாக அக்கட்சியின் தலைவர் சஜித்தின் நிலைப்பாடும் தமிழ், முஸ்லிம் மக்களிடையே பெரும் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது.

அதனால் அக்கட்சியிலுள்ள அக்கட்சிக் கூட்டில் இணைந்துள்ள மற்றும் ஆதரவு நிலைப்பாட்டிலுள்ள தமிழ்,முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்கும் அது கடும் அதிருப்தியைத் தோற்றுவித்துள்ளதைக் காண முடிகிறது. இதன் காரணமாக அக்கட்சி அதிகளவில் பெற்றிருக்கும் சிறுபான்மை தேசிய இனங்களின் ஆதரவை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்பதற்கப்பால் அக்கட்சி தீவிர பௌத்த சிங்கள இனவாத தரப்பை நோக்கி நகரத் தொடங்குகிறதா என்ற ஐயமும் மக்கள் மத்தியில் எழத்தொடங்கியுள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

பொதுவாக சிங்களத் தேசியக் கட்சிகள் அனைத்துமே அடிப்படையில் பௌத்த சிங்கள இனவாத உணர்வைக் கொண்டிருந்தாலும் ஒப்பீட்டு ரீதியில் அது தொடர்பான வெளிப்பாடுகளிலும் அணுகுமுறைகளிலும் அக்கட்சிகளுக்கிடையில் வேறுபாடுகள் நிலவி வந்துள்ளன. சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் அதன் வழிவந்த பொதுஜன பெரமுன மற்றும் அதன் கூட்டாளிக் கட்சிகளும் வெளிப்படையாகவே இனவாத அணுகுமுறைகளை வெளிப்படுத்துவதில் ஒருபோதும் தயக்கம் காட்டியதில்லை.

அவற்றுடன் ஒப்பிடும் போது ஐக்கிய தேசியக் கட்சி பேரினவாதம் தொடர்பில் அடக்கி வாசிக்கும் போக்கையே பின்பற்றி வந்துள்ளது. அதன் காரணமாகவே வடக்கு கிழக்குக்கு வெளியில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்களின் ஆதரவை அக்கட்சி அதிகளவில் பெற்று வந்துள்ளது. அதுமட்டுமன்றி வடக்கு கிழக்கில் அதிக ஆதரவைப் பெற்ற தமிழரசுக் கட்சியும் பல சந்தர்ப்பங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவான நிலைப்பாட்டையே வெளிப்படுத்தி வந்துள்ளது.

அதே போலவே அக்கட்சியிலிருந்து பிரிந்து உருவான ஐக்கிய மக்கள் சக்திக்கும் இன்று தமிழ்,முஸ்லிம் மக்களின் ஆதரவு இருந்து வருகிறது. இதன் காரணமாகவே கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் கணிசமான தமிழ், முஸ்லிம் வாக்குகளை அக்கட்சியால் பெறமுடிந்தது.

ஆனால் அக்கட்சியின் தற்போதைய வெளிப்பாடுகள் அந்நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படுகிறதா என்ற ஐயத்தைத் தோற்றுவித்துள்ளது. அந்த ஐயம் நிஜமாவதற்கான அரசியல் சூழ்நிலையும் தெற்கில் காணப்படுவதாகவே தோன்றுகிறது. ஒருபுறத்தில் ஆளும் தேசிய மக்கள் சக்தியான ஜே.வி.பி தனது கடந்தகால இனவாத அணுகுமுறையை மறைத்து அரசியலை முன்னெடுக்க விரும்புகிறது. அதனால் பேரினவாதிகளின் ஆதரவு அக்கட்சிக்கு எதிராக மாறி வருவதை சமகால நிகழ்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. மறுபுறத்தில் இதுவரையும் இனவாதத்துக்குத் தலைமை தாங்கி வந்த பொதுஜன பெரமுனவின் அரசியல் எதிர்காலம் கேள்விக்குரியதாக மாறி வருகிறது. பொதுஜன பெரமுனவின் ஆதரவுத்தளம் நாடு தழுவிய ரீதியில் பரந்து காணப்பட்டாலும் அதன் செயற்பாட்டு மையம் மகிந்த குடும்பத்தை மையப்படுத்தியே இருந்து வந்துள்ளது. அந்த மையம் இன்று பலவீனப்படுத்தப்பட்டு வருவதால் அக்கட்சியையும் அதன் கொள்கைகளையும் முன்னெடுத்துச் செல்வதற்கு அடுத்த கட்ட தலைமைகள் என்று



குறிப்பிடும்படியாக எவரும் இல்லை என்பதே யதார்த்த நிலைமையாக உள்ளது. இவ்வாறானதொரு நிலைமை பௌத்த சிங்கள இனவாத வாக்குவங்கிக்குரிய தலைமைக்கான பாரிய வெற்றிடம் ஒன்றை உருவாக்கி வருகின்றது.

இவ்வாறானதொரு அரசியல் சூழ்நிலையில் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி தனது தற்போதைய நிலைப்பாட்டை மாற்றி முழுமையாகப் பௌத்த சிங்களப் பேரினவாதத்துக்குத் தலைமை தாங்கும் ஒரு நிலைமைக்கு மாறுவதற்கான நிலைப்பாட்டை எடுப்பதற்கான வாய்ப்பை நிராகரிக்க முடியாது. அவ்வாறானதொரு நிலைப்பாட்டை எடுப்பதும் அக்கட்சிக்குக் கடினமானதொன்றல்ல.

ஏனெனில் அக்கட்சி மட்டுமன்றி எல்லா சிங்களத் தேசியக் கட்சிகளின் அடிப்படையே அது தான். அரசாங்கம் இன்று இனவாதமற்றதொரு முகத்தை முன்னிலைப்படுத்த முனையும் போது அதேமுகத்துடன் பயணிப்பதன் மூலம் ஐக்கிய மக்கள் சக்தி தேர்தலில் அதிகளவு அறுவடையைச் செய்வது கடினமான காரியமாக இருக்கும். அரசியலில் இலாப நட்டக் கணக்கே அனைத்தையும் தீர்மானிக்கிறது. தேசிய மக்கள் சக்தி எனப்படும் ஜே.வி.பியின் இன்றைய முகத்துக்கும் அதுதான் காரணம். அதன் இந்த முகம் மக்களிடத்து எடுபடாமல் போகும் போது அது தனது சொந்த முகத்தைக் காட்டுவதற்கு ஒருபோதும் தயங்கப் போவதில்லை.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணிலும் தற்போது இந்த நிலைப்பாட்டை எடுத்து வருவதைக் காண முடியும். இதுதான் இலங்கை அரசியல் வரலாறு. இத்தகைய அரசியல் சூழ்நிலையில் தமிழ்,முஸ்லிம் வாக்குகளில் ஏற்படும் நட்டத்தை விட பௌத்த சிங்கள பேரினவாதத்துக்குத் தலைமை தாங்குவதால் வரக் கூடிய இலாபம் அதிகமாக இருக்கும். அதனால் அந்தத் திசையை நோக்கி நகர்வதற்கான ஒரு வெள்ளோட்டமாக அக்கட்சியின் தற்போதைய வெளிப்பாடுகளை நோக்குவதைத் தவறாகக் கருத முடியாது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தற்போதைய தலைவர் சஜித் பிரேமதாச உறுதியான கொள்கை நிலைப்பாடொன்றைக் கொண்டவரல்லர். அதற்கப்பால் தற்போது மட்டுமல்ல கடந்த காலத்திலும் முக்கியமான பல சந்தர்ப்பங்களில் பேரினவாதிகளுக்குச் சார்பான நிலைப்பாட்டையே வெளிப்படுத்தி வந்திருப்பதைக் காணமுடியும். பௌத்த பிக்குகள் சொல்வதையெல்லாம் தலை வணங்கிக் கேட்க வேண்டும் என்பதைத்தனது தந்தையிடமிருந்து கற்றுக் கொண்டதாக அண்மையில் கூறியுள்ள அவர் பேரினவாதிகளைத் திருப்திப்படுத்துவதற்கான ஏனைய விடயங்களையும் தன் தந்தையிடமிருந்து கற்றிருப்பார் என நம்பலாம்.

ஏனெனில் இவரது தந்தை ரணசிங்க பிரேமதாச பிரதமராக இருந்து கொண்டே ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனாவினால் மேற்கொள்ளப்பட்ட இலங்கை இந்திய உடன்படிக்கையை எதிர்த்து கிளர்ச்சி செய்த ஒருவர். அவரைப் போலவே மைத்திரி-ரணில் ஆட்சிக் காலத்தில் அரங்கேற்றப்பட்ட புதிய அரசியலமைப்பு நாடகத்தின் போது அவ்வாட்சியில் மூத்த அமைச்சராக இருந்த சஜித் தற்போது நடைமுறையிலுள்ள 13க்கு அப்பால் செல்வதற்கு நான் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை எனக்கூறி அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்துள்ளதை நிரூபித்த ஒருவர்.

வடக்கு கிழக்கில் 1000 விகாரைகளுக்கு அத்திவாரமிட நிதியொதுக்கிய வள்ளலும் இவரே. இதேபோல கடந்த காலத்தில் தமிழ் மக்கள் மற்றும் பௌத்தம் தொடர்பான சிக்கல்கள் எழுந்த பல சந்தர்ப்பங்களில் சஜித் பௌத்த சிங்களவர் பக்கம் தன்னை இனங்காட்ட ஒருபோதும் தவறியதுமில்லை. இயல்பாகவே இத்தகைய குணவியல்புகளைக் கொண்ட அவரும் அவர் தலைமையிலான கட்சியும் பௌத்த சிங்களப் பேரினவாதிகளுக்கு முழுமையாகத் தலைமை தாங்குவதற்கானதொரு நிலைமாற்றத்தை எய்துவது இலகுவானது. அதில் ஆச்சரியப்படவும் எதுவும் இருக்கப்போவதில்லை.

அவ்வாறானதொரு நிலை ஏற்படுமானால் அக்கட்சியுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் தமிழ் முஸ்லிம் தலைவர்களின் நிலை தான் பரிதாபமாக இருக்கப் போகிறது. குறிப்பாக அக்கட்சியில் இணைந்தும் கூட்டுச் சேர்ந்தும் இருக்கும் முஸ்லிம் தலைவர்களான முஜிபுர் ரகுமான், எஸ்.எம்.மரிக்கார், ரவுப் ஹக்கீம், றிசாட் பதியுதீன் போன்றவர்களுக்கும் இந்தியவழித் தமிழர்களின் தலைவர்களான மனோ கணேசன், திகாம்பரம், இராதாகிருஷ்ணன் போன்றவர்களுக்கும் இது போதாத காலமாக மாறக் கூடும். எனினும் இத்தலைவர்கள் இந்நிலை பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளப்போவதில்லை.

ஏனெனில் பதவிகளுக்காக எந்தப் பேரினவாதிகளுடனும் கூட்டுச்சேரக் கூடியவர்கள் என்பதை அவர்களின் வரலாறு சொல்லும். மனோ கணேசன் செய்ததைப் போல ஓர் எதிர்ப்பு அறிக்கையுடனும், இப்போது அந்த விடயம் பற்றிப் பேச இங்கு வரவில்லை என மரிக்கார் ஊடகவியலாளர்க்கு பதிலளித்தது போல நழுவுவதன் மூலமும் இலகுவாகக் கடந்து சென்று விடுவார்கள்.

பொதுவாக அரசில்வாதிகளின் தோல் மிகத்தடித்தது.அதிலும் இவர்களின்

**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**-க. அருந்தவபாலன் -**



தோலோ மரத்தது. அதனால் அவர்களுக்கு எதுவும் சுணைக்கப்போவதில்லை. ஆனால் அவர்கள் பின்னால் எத்தனை பேர் கூட வருவார்கள் என்பது தான் இங்கெழுகின்ற பெறுமதியான கேள்வி. சென்ற தேர்தலில் அவர்களின் வாக்கு வங்கியில் பெரியளவு சரிவை தேசிய மக்கள் சக்தி ஏற்படுத்தியிருந்தது. ஆளுங்கட்சியாக இருத்தல், இனவாத முகத்தை மறைக்க விரும்புதல், தேர்தல் நெருங்கும் காலத்தில் மக்கள் நலத் திட்டங்களை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகள், இறுக்கமான கட்சிக் கட்டமைப்பு போன்றவை எதிர்வரவுள்ள தேர்தல்களில் தேசிய மக்கள் சக்திக்கு ஏறுமுகத்தைத் தருமென இன்றைய நிலவரப்படி எதிர்வு கூற முடியும்.



குறிப்பாக அக்கட்சி பெறக்கூடிய தமிழ்,முஸ்லிம் வாக்குகளில் கணிசமான முன்னேற்றம் ஏற்படக்கூடும். இது தற்போது ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒட்டியிருப்போருக்கு இறங்குமுகத்தையே தரும். எனினும் இதைவிட வேறு தெரிவுகள் அவர்களுக்கு இருக்கப் போவதில்லை. பொதுஜன பெரமுன கேள்விக்குறி ஐக்கிய தேசியக் கட்சி இன்றைக்கோ நாளைக்கோ என்ற சேடமிழுக்கும் நிலை. தேசிய மக்கள் சக்தியை நெருங்க முடியாது நெருங்கினாலும் பதவிகள் கிடைக்கப் போவதில்லை. இதைத் தான் திரிசங்கு நிலை அல்லது இரண்டுங்கெட்டான் நிலை என்று சொல்வார்கள்.

இதுபோல இல்லாவிட்டாலும் கிட்டத்தட்ட இதுபோன்றதொரு நிலை தான் வடக்கு கிழக்கு அரசியல்வாதிகளுக்கும். இலவு காத்த கிளி போல இப்போது வெளியிலிருந்து ஆதரவு வழங்கும் பெரிய தமிழ்க் கட்சியான தமிழரசுக்கட்சிக்கும் இக்கட்டான நிலை தான். பாராளுமன்றத் தேர்தலில் தனித்து அல்லது தமிழ்க் கட்சிகள் சிலவற்றுடனான பெரியண்ணன் முறையிலான கூட்டு ஜனாதிபதித் தேர்தலில் வரவு-செலவு அடிப்படையில் தெற்குத் தலைவர் ஒருவருக்கு வாக்கு விற்பனை என்பனவே(18ம் பக்கம் பார்க்க)

# கனடிய பல்கலைக்கழகத்தில் படிக்கும் குற்றவாளி! மாணவ மாணவியர் அச்சம்! பல்கலை நடவடிக்கை!





குற்றவாளி ஒருவர் தங்களுடன் படிப்பது தெரியவந்துள்ளதால், கனேடிய பல்கலை ஒன்றின் மாணவ மாணவியர் அச்சமடைந்துள்ளனர். கனடாவின் மொன்றியலில் அமைந்துள்ள மெக் கில் பல்கலையில், சட்டம் பயில்கிறார் ஜெஃப்ரி ஜார்ஜ் எவர்ட் என்னும் நபர்.

விடயம் என்னவென்றால் 1984ஆம் ஆண்டு, மே மாதம், தன்னிடம் லிஃப்ட் கேட்ட கொரினா என்னும் இளம் பெண்ணை, கழுத்தை நெறித்து, வன்புணர்ந்து, அடித்து நொறுக்கி, நதி ஒன்றில் வீசினார் எவர்ட். பின்னர் அந்த இளம்பெண் சடலமாக மீட்கப் பட்டார்

அடுத்த மாதம், அதாவது, ஜீன் மாதம் 17ஆம் திகதி, தன்னை தத்தெடுத்த வர்கள் வீட்டுக்கு வந்த எவர்ட் அங்கு ஒரு 15 வயது சிறுமி தனியாக தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்ட எவர்ட், அந்தச் சிறுமியை தூக்கிச் சென்று, அடித்து நொறுக்கியுள்ளார். அவளை எவர்ட் ஒரு பள்ளத்தில் வீசிச் செல்ல அவள் உயிர் பிழைந்து விட்டாள். ஆனால், அவளுக்கு மூளை பாதிப்பு ஏற்பட்டு, அவளது கை கால்கள் செயலிழந்து விட்டன.

இன்னமும் அவள் அன்றாடகத் தேவைகளுக்கு மற்றவர்களை நம்பித் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறாள். ஆக எவர்ட் மீது ஒரு கொலைக் குற்றச்சாட்டும் ஒரு கொலை முயற்சிக் குற்றச்சாட்டும் பதிவு செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்.

இந்நிலையில் 2025ஆம் ஆண்டு அவருக்கு பரோல் வழங்கப்பட ஆகஸ்ட் மாதம் முதல் மெக் கில் பல்கலையில் இணைந்து சட்டம் படித்து வருகிறார் எவர்ட். இதற் கிடையில் எவர்ட் குறித்து அவரது சக மாணவ மாணவியருக்கு சமீபத் தில் தெரியவந்துள்ளது.

ஒரு பெண்ணை சீரழித்துக் கொன்று, மற்றொரு பெண்ணைக் கொலை செய்ய முயன்ற ஒருவர் தங்களுடன் படிப்பது தெரிய வந்துள்ளதால் மாணவ மாணவியர் அச்சமடைந்து ள்ளனர்.

பல்கலையில் படிப்பவர்களில் பாதிக்கும் மேல் இளம் பெண்கள் என்று கூறும் சில மாணவிகள், பல்கலை இந்த விடயம் குறித்து தெரியப்படுத்த வில்லை என குற்றம் சாட்டியுள்ளனர்.

பல்கலை, தனிப்பட்ட நபர் குறித்து சொல்வது அவரது தனியுரிமையை மீறும் விடயம் எனக் கூற, எவர்ட்டின் சட்டத்தரணியான நோரா டெம்னதி, எவர்ட் தனது பின்னணி குறித்து மறைக்கவில்லை என்கிறார்.

பிள்ளைகள் பயப்படுவது குறித்து நோராவிடம் கேட்டால் எவர்ட் குற்றச் செயலில் ஈடுபட்டபோது அவருக்கு வயது 20, இப்போது அவர் தனது 60 வயதுகளில் இருக்கிறார். அவர் மாறி விட்டார் என்கிறார்.

அத்துடன் குற்றம் செய்தவர்கள் திரு ந்தி வாழ வாய்ப்புக் கொடுப்பதற்குத் தானே மறுவாழ்வு மையங்களே அமை க்கப்பட்டுள்ளன என்கிறார் அவர்

இதற்கிடையில் எவர்ட் அக்டோபர் மாதத்திலிருந்து பல்கலைக்கு வருவ தில்லை என்று தற்போது கூறியுள்ள மெக் கில் பல்கலை தரப்பு, மாணவ மாணவியரின் பாதுகாப்புதான் முக்கி யம் என்றும், ஆகவே, சம்பந்தப்பட்ட நபர் தொடர்பில் முக்கிய முடிவெடு க்கப்பட்டுள்ளதாகவும், அது தொடர் பில் மீளாய்வு துவக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவித்துள்ளது.

# கடும் எதிர்ப்பால் பின்வாங்கிய ட்ரம்ப்! மரணதண்டனை விவகாரத்தில் திருப்பம்!





2009ஆம் ஆண்டு அமெரிக்காவின் போர்ட் ஹஜீட் இராணுவத் தளத்தில் 13 இராணுவ வீரர்களைச் சுட்டுக் கொன்ற முன்னாள் அமெரிக்க இராணுவ மேஜரும் மனநல மருத்துவருமான நிடால் ஹாசனுக்கு வழங்கப்பட்டுள்ள மரண தண்டனையைப் பொதுமக்கள் பார்க்கும் வகையில் நேரலையில் ஒளிபரப்ப அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்திருந்தது.

இந்நிலையில் பல்வேறு தரப்பில் இருந்தும் எதிர்ப்பு கிளம் பியதால் தனது முடிவில் இருந்து ட்ரம்ப் அரசு பின்வாங்கி யுள்ளது. அமெரிக்க இராணுவத்தில் கடந்த 60 ஆண்டு களுக்கும் மேலாக எந்தவொரு மரண தண்டனையும் நிறைவேற்றப்படாத நிலையில் தற்போது நிடால் ஹாசனு க்கு மரண தண்டனை அறிவிக்கப்பட்டுள்ளது. அத்து டன் இரண்டாம் உலக மகா யுத்தத்துக்கு பிறகு (1945) அமெரிக்க இராணுவத்தில் துப்பாக்கியால் சுட்டு மரண தண்டனை நிறைவேற்றப்படவுள்ள முதல் சம்பவமாகவும் இது பதிவாகவுள்ளது.

இத்தகைய கடுமையான குற்றங்களுக்குத் தக்க பலன் உண்டு என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இதனை நேரலையில் ஒளிபரப்ப முடிவு செய்துள்ளதாகப் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஆனால் மரண தண்டனையை நேரில் ஒளிபரப்புவது மனிதாபிமானமற்ற செயல் என அமெரிக்காவிலும் சர்வதேச அளவிலும் இயங்கி வரும் மனித உரிமை அமைப்புகள், செயல்பாட்டாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஐநா மனித உரிமைகள் அமைப்பும் இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. அதேநேரம் எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சியில் இருந்தும் டிரம்ப்பின் குடியரசு கட்சியில் இருந்துமே எதிர்ப்பு கிளம்பியது. குடியரசுக் கட்சி செனட்டர் தாம் டில்லிஸ் இதை வெறுக்கத்தக்கதுக்கும் அப்பாற்பட்டது என்று கூறி, பொது மரணதண்டனைகள் அமெரிக்காவுடன் தொடர்புடையவை அல்ல, மாறாக அடக்குமுறை ஆட்சிகளுடன் தொடர்புடையவை என்று விமர்சித்தார். ஓய்வுபெற்ற எழுபத்திரண்டு இராணுவ அதிகாரிகளும், (18ம் பக்கம் பார்க்க)






## ஜனவரி 10, 2027 • ஞாயிற்றுக்கிழமை • மாலை 6.00







### வீட்டின் விவரங்கள்

| அறை வகை | அளவு (அடி) | எண்ணிக்கை | விளக்கம் |
|---|---|---|---|
| D1 | 3'0" x 7'0" | 4 | மரக்கதவு |
| D2 | 2'6" x 7'0" | 2 | மரக்கதவு |
| D3 | 2'0" x 7'0" | 1 | மரக்கதவு |
| W1 | 5'0" x 4'0" | 4 | அலுமினிய சாளரம் |
| W2 | 4'0" x 4'0" | 1 | அலுமினிய சாளரம் |
| W3 | 3'0" x 4'0" | 1 | அலுமினிய சாளரம் |
| V1 | 2'0" x 2'0" | 2 | காற்றோட்ட சாளரம் |

### கட்டிடம் விவரங்கள்

| | | |
|---|---|---|
| வகை | : | தனி வீடு |
| தூங்கும் அறைகள் | : | 3 |
| கூடம் | : | 1 |
| சமையலறை | : | 1 |
| குளியல் அறை | : | 1 |
| கட்டிட பரப்பு | : | சுமார் 900 சதுர அடி |













கடந்த 14 ஆண்டுகளாக அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகியவற்றில் வாழும்சிறார்களின் உணவு மற்றும் அத்தியாவசியத் தேவைகளுக்காக முன்னெடுக்கப்பட்டு வரும் இந்நிகழ்வு, இம்முறை ஒரு புதிய மனிதநேயப் பணிக்காகப் பயன்படுகிறது.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அரசாங்கத்தின் புதிய திட்டத்தின் கீழ், சிறுவர் இல்லங்களில் வளர்ந்து 18 வயதைத் தாண்டும் இளைஞர், யுவதிகளுக்கு புதிய வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும் நோக்கத்தோடு; காணியுடன் கூடிய வீடுகளை நிர்மாணிக்க ரூ.20 இலட்சம் அரசாங்க உதவி வழங்கப்படுகிறது.

அந்த மனிதநேயத் திட்டத்தின் பயனாக, எமது இல்லத்தில் வாழும் 9 பெண் பிள்ளைகளுக்கும் காணியுடன் கூடிய வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.

எனினும், ஒரு வீட்டை முழுமையாக நிர்மாணிக்க சுமார் ரூ.30 இலட்சம் தேவைப்படுவதால், ஒவ்வொரு வீட்டுக்கும் மேலதிகமாக ரூ.10 இலட்சத்தை கனடா வாழ் தமிழ்சமூகத்தின் அன்புக் கரங்களிலிருந்து திரட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஒன்பது பெண் பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக இந்த உதவிக்கரம் நீட்டப்பட வேண்டியுள்ளது.

இன்னிசையும் இராப்போசனமும் இணையும் இந்த சிறப்பு நிகழ்வில் கலந்து கொண்டு ஆதரிப்பதுடன், வசதி வாய்ப்புள்ள அன்புள்ளங்களும் தங்களால் இயன்ற நிதியுதவியை வழங்கி, இந்த ஒன்பது பெண் பிள்ளைகளுக்கும் ஒரு சொந்த வீடு என்ற கனவை நனவாக்குமாறு அன்புடன் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

உதவிக்கரம் நீட்டுவோர் தங்கள் பெயரிலோ அல்லது உங்கள் அன்புக்குரியவர்களின் பெயரிலோ வழங்கினால் அவர்களது பெயர் விபரங்கள் வீட்டு சுவரில் பதியப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

ஒரு வீடு என்பது வெறும் கட்டிடம் அல்ல. அது ஒரு பெண் பிள்ளையின் எதிர்காலத்திற்கான பாதுகாப்பும், நம்பிக்கையும், புதிய வாழ்வின் வாசலுமாகும்.

10 லட்சம் இலங்கை ரூபா என்பது கனடிய டொலரில் ஏறக்குறைய 4500.00 டொலர்கள் மாத்திரமே. நாம் இந்த 90 லட்சம் ரூபாவை வழங்காது விட்டால் அரச உதவிப் பணம் கிடைக்காமல் போகலாம்.

எனவே அன்புக்குரியவர்களே! இந்த 9 பெண் பிள்ளைகளின் வாழ்விடத்திற்காக உங்களால் முடிந்தளவு உதவ முன்வாருங்கள்! எமது நிகழ்வில் கலந்து கொள்வதன் மூலம் உங்கள் பங்களிப்பை வழங்குங்கள்!

மேலதிக விபரங்களுக்கு

**ஈழநாடு பரமேஸ் - 416 841 9600**

தொலைபேசி அல்லது WhatsApp மூலம் தொடர்புகொள்ளலாம்.




# செம்மணிப் புதைகுழியில் தொற்றுநோயால் இறந்தவர்கள் புதைக்கப்பட்டிருக்கலாம்?

## நீதிமன்றத்தில் தடயவியல் அறிக்கையில் தெரிவிப்பு!

இயற்கைப் பேரழிவும் காரணமாக இருந்திருக்கலாம். சர்ச்சைக்குரிய புதைகுழி போல் செம்மணி இல்லை' – பேராசிரியர் ராஜ் சோமதேவ இவ்வாறு அறிக்கை.

செம்மணிப் புதைதழியின் பின்னணியில் தொற்றுநோய் அல்லது இயற்கைப் பேரழிவு என்பன காரணமாக இருந்திருக்கலாம். அத்துடன் இந்தப்புதை குழியானது சமய ரீதியிலான இறுதிச் சடங்குகள் இடம் பெற்றன என்பதற்கான சில குறிப்பிடத்தக்க ஆதாரங்களையும் கொண்டுள்ளது இவ்வாறு பேராசிரியர் ராஜ் சோமதேவவின் இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

செம்மணிப் புதைகுழி தொடர்பான தடய வியல் அறிக்கை பேராசிரியர் ராஜ் சோம தேவவால் யாழ்ப்பாணம் நீதவான் நீதி மன்றத்தில் 19 ஒக் 2026 சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் உள்ள முக்கிய மான அம்சங்களாவன.

செம்மணிப் புதைகுழியானது உலகின் பல பகுதிகளில் அவதானிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய மனிதப் புதைகுழிகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் காண்பிக்கின்றது. குறிப்பாக சரியான முறையில் அடக்கம் செய்யப்படும் சூழமைவுகளுடன் ஒப்பிடுகையில் அந்தப் புதைகுழி குறிப்பிட்டுக் கூறக்கூடிய அதிக ஒற்றுமைகளை வெளிப்படுத்துகின்றது. இறந்தவர்களின் அதிக அடர்த்தியானது சடலங்கள் எந்தச் சூழ்நிலையில் அடக்கம் செய்யப்பட்டன என்பதை முறையாகவும், துல்லியமாகவும் நிரூபிக்கவில்லை. அவ்வாறு நிரூபிப்பதற்குத் தேவையான ஆதாரபூர்வ விடயங்கள் தென்படவில்லை.

செம்மணிப் புதைகுழியில் இருந்து அதிகளவான என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டமைக்குக் காரணம் இதன் பின்னணியில் தொற்றுநோய் அல்லது இயற்கைப் பேரழிவு என்பன இருந்திருக்கலாம். ஆதலால் சடலங்களை முறையாக அப்புறப் படுத்துவதிலும் பார்க்க அதிவிரைவாக அப்புறப்படுத்த வேண்டிய தேவை அக்காலத்தில் ஏற்பட்டிருக்கலாம்.


செம்மணிப் புதைகுழியில்

தொற்றுநோயால் இறந்தவர்கள் புதைக்கப்பட்டிருக்க சாத்தியம்!

இயற்கைப் பேரழிவும் காரணமாக இருந்திருக்கலாம்
சர்ச்சைக்குரிய புதைகுழிபோல் செம்மணி இல்லை
பேராசிரியர் ராஜ் சோமதேவ இவ்வாறு அறிக்கை

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 20

செம்மணிப் புதைகுழியின் பின்னணியில் தொற்றுநோய் அல்லது இயற்கைப் பேரழிவு என்பன காரணமாக இருந்திருக்கலாம். அத்துடன் இந்தப் புதைகுழியானது சமய ரீதியிலான இறுதிச் சடங்குகள் இடம்பெற்றன என்பதற்கான சில குறிப்பிடத்தக்க ஆதாரங்களையும் கொண்டுள்ளது – இவ்வாறு பேராசிரியர் ராஜ் சோமதேவவின் இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. »11

செம்மணிப் புதைகுழி தொடர்பில்

சோமரத்ன ராஜபக்சவிடம் விசாரணை நடத்த முடிவு

சி.ஐ.டி.யின் கோரிக்கையை ஏற்றது மன்று

»11

செம்மணி என்பு ஆய்வுக்கு அடுத்தவாரம் நிபுணர் குழு

சட்ட மருத்துவ அதிகாரி தகவல்

»11

நாடு முழுவதும்

எதிர்வரும் 3 நாள்களுக்கு

இறுதிச் சடங்கில் பயன்படுத்தப்படும் பொருள்கள் அதிகளவில் மீட்கப்படாமைக்கு இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம். ஆயினும் இது வரை மீட்கப்பட்ட சில தடயங்கள், அங்கு முறைப்படி இறுதிச் சடங்குகள் இடம் பெற்றன என்பதையும் வெளிப்படுத்துகின்றன.

செம்மணியில் அகழாய்வு செய்யப்பட்ட மனித எலும்புக்கூடுகள் எதிலும், எலும்பு எச்சங்களுடன் இணைந்த நிலையில் நேரடியாகப் பாதுகாக்கப்பட்ட ஆடைகளுக்கான சான்றுகள் கிடைக்கவில்லை. இருப்பினும், துணிப் பொருள்கள் எஞ்சியிருக்கவில்லை என்பதற்காக, இறந்தவர்கள் ஆடையின்றி அடக்கம் செய்யப்பட்டனர் என்று பொருள் கொள்ளக் கூடாது. துணிகள் உள்ளிட்ட கரிமப் பொருட்கள், சாதகமற்ற அடக்கச் சூழல் களில் சிதைவடையக்கூடியவை. அவை பாதுகாக்கப் படுவதில் அவற்றைச் சூழ்ந்துள்ள மண்ணின் இயற்பியல் மற்றும் வேதியியல் பண்புகள், ஈரப்பதத்தின் அளவு, நுண்ணுயிர்களின் செயற்பாடு மற்றும் அடக்கம் செய்யப்பட்டு இருந்த கால அளவு ஆகியன பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

சில சந்தர்ப்பங்களில், மனித எலும்புக்கூடுகளுடன் தொடர்புடைய இடங்களில் பொத்தான்கள், பொத்தான் துளை வளையங்கள் மற்றும் ஆடைகளில் பயன்படுத்தப்படும் சிறிய உலோகப் பொருத்திகள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டன. அவை குறைந்த பட்சம் சிலர் அடக்கம் செய்யப்பட்டபோது ஆடை அணிந்திருந்திருக்கலாம் என்ற கருத்துக்கு ஆதரவளிக்கக்கூடிய சான்றுகளாக அமைகின்றன. எனவே, செம்மணியில் பாதுகாக்கப்பட்ட துணி எச்சங்கள் கிடைக்காத நிலையை, அடக்கம் செய்யப்பட்ட காலத்தில் ஆடைகள் இல்லாதிருந்ததற்கான உறுதியான சான்றாகக் கருதாமல், எச்சங்கள் காலப் போக்கில் சிதைவடைந்ததன் விளைவாக ஏற்பட்ட தொல்லியல் அவதானிப்பாக கருத வேண்டும் – என்றுள்ளது. ஆரம்பத்தில் செம்மணி புதைகுழி 1999 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 2000 ஆம் ஆண்டு பங்குனி 27 ஆம் திகதி வரையான ஒன்பது மாதங்கள் நடைபெற்றன. அப்போது 25 புதைகுழிகள் தோண்டப்பட்டு 16 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. இவ்வாறு மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளில் சுரேஸ்வரன் சுமதி (இளம் தம்பதிகள்), இராசையா சதீஸ் மனோகரன் பாபு ஆகியோர் அடையாளம் காணப்பட்டனர் குறிப்பாக சோமரத்னா ராஜபக்சே தனது வாக்குமூலத்திலும் சுரேஸ் வரன் சுமதி படுகொழுலையை அடையாளப்படுத்தியிருந்தார்

குறிப்பாக கப்டன் லலித் ஹேவா (தற்போது ஓய்வு நிலை பிரிகேடியர்) மற்றும் அப்துல் நாசர் ஹமீத் ஆகியோர் சுரேஸ்வரன் சுமதி ஆகியோரை கைது செய்து சி சித்திரவதை முகாமுக்குக் கொண்டு சென்றதாக சொல்லியிருந்தார்

பின்னர் அவர்களிருவரையும் கப்டன் லலித் ஹேவா செம்மணியில் உப்பளப் பகுதிக்குக் கொண்டு சென்றனர் எனவும் வாக்குமூலமளித்திருந்தார் அவ்வாறு அவர்களைக் கூட்டிச் செல்லும் போது மண்வெட்டியை எடுத்து வரும்படி தன்னிடமும் ஏ.எஸ் பெரேராவிடமும் கப்டன் லலித் ஹேவகே சொன்னதாக தனது வாக்குமூலத்தில் பதிவு செய்திருந்தார்

அதன்படி நாம் இருவரும் துப்பாக்கியுடன் மண்வெட்டியையும் கொண்டு சென்ற போது கப்டன் லலித் ஹேவா சுமதியுடன் தனிமையில் நிற்பதைக் தான் கண்டதாக சொல்லியிருந்தார் அச்சமயம் அந்தப் சுமதியின் உடலில் ஆடைகள் எதுவும் இருக்கவில்லையென்றும் பதிவு செய்திருந்தார்

அதன் தொடர்ச்சியாக சுமதியை சுரேஸ்வரன் அவர்கள் தடுத்து வைத்திருந்த இடத்திற்கு அழைத்து வந்து தான் கொண்டு சென்ற மண்வெட்டி மற்றும் பொல்லுகளால் கப்டன் லலித் ஹேவா மற்றும் அப்துல் நாசர் ஹமீத், சமரசிங்க ஆகியோர் அவர்கள் இருவரையும் தாக்கி கொன்றதாக வாக்குமூலமளித்திருந்தார் அந்தவகையில் அப்போது மீட்கப்பட்ட 16 பேரினது எலும்புக்கூடுகளும் அடித்துக் கொலை செய்யப்பட்டவை என மரண விசாரணை தீர்ப்பு வழங்கி, யாழ். நிரந்தர நீதிபதியிடம் வழக்கினை பாரப்படுத்தி விட்டு செம்மணி புதைகுழியின் விசேட நீதிபதி திரு மா.இளஞ்செழின் அப்போது தனது பணியினை நிறைவு செய்திருந்தார்.

# செம்மணிப் புதைகுழி:- பொறுப்புக் கூறலை நோக்கிய பாதையில் பயணிக்க வேண்டும் - அமைச்சர் ஹரி

செம்மணி மனிதப் புதைகுழியானது இலங்கையில் இன அழிப்புக்கு மத்தியில் வாழ்ந்த மக்கள் முகங் கொடுத்த அளவிலா துன்பங்களையும் மீறல்களையும் மீள நினைவுறுத்தியிருப்பதுடன், கடந்தகால மீறல்களுக்கு நீதி கோரி உலகளாவிய ரீதியில் இயங்கி வரும் சகல செயற்பாட்டாளர்களும் ஒன்றிணைந்து, பொறுப்புக்கூறலை நோக்கிய பாதையில் பயணிக்க வேண்டியதன் தேவைப்பாட்டையும் உணர்த்தியிருப்பதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி சுட்டிக்காட்டியுள்ளார்.

கனேடிய பாராளுமன்ற வளாகத்தில் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் சுட்டிக்காட்டிய விடயங்கள் வருமாறு:

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் பதில்களையும் நீதியையும் கோரிக் காத்திருக்கும் பாதிக்கப்பட்ட மக்களின் துயரம் அங்கீகரிக்கப் பட வேண்டியது அவசியமாகும். ஆரம்பத்தில் மனிதப் புதைகுழியாக இருக்கக் கூடும் எனச் சந்தேகிக்கப்பட்ட செம்மணியில் இருந்து அண்மையில் சுமார் 600ஐ அண்மித்த மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இது சர்வதேசத்தின் கவனம், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றுக்கான தேவைப்பாட்டைக் கொண்டிருக்கும் முக்கிய விவகாரமாகும்.

இலங்கை சுமார் மூன்று தசாப்தகால மோதல் வரலாற்றையும், அக்காலப் பகுதியில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பில் இன்னமும் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படாத பின்னணியையும் கொண்டதொரு நாடாகும். இவ்வாறானதொரு பின்னணியில் செம்மணி மனிதப் புதைகுழியானது இன அழிப்புக்கு மத்தியில் வாழ்ந்த மக்கள் முகங்கொடுத்த அளவிலா துன்பத்தையும் மீறல்களையும் மீள நினைவுறுத்தியிருக்கிறது.

அதேவேளை இலங்கையில் இடம்பெற்ற கடந்த கால மீறல்களுக்கு நீதி கோரி உலகளாவிய ரீதியில் இயங்கி வரும் சகல செயற்பாட்டாளர்களும் ஒன்றிணைந்து இவ்விவகாரத்தில் பொறுப்புக்கூறலை நோக்கிய பாதையில் பயணிக்க வேண்டியதன் தேவைப்பாட்டையும் இது உணர்த்தியிருக்கின்றது.

2009ஆம் ஆண்டு நவி பிள்ளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராகப் பதவி வகித்த போது, தமிழ்ச் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 5 – 6 பேர் அடங்கிய குழுவினரை ஜெனிவாவில் சந்தித்தார்.

அவ்வேளையில் தமிழர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை சர்வதேச சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்வதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

அதேவேளை கலாநிதி மரியோ அருள்தாஸ் இலங்கையின் இன அழிப்புக்கு எதிராக லண்டன் வீதிகளில் பிரசாரங்களிலும் கவனயீர்ப்புப் போராட்டங்களிலும் ஈடுபட்டார். அதனைத் தொடர்ந்து கடந்த 17 வருடங்களாக பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை இலக்காகக் கொண்ட பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றார்.



இது இவ்வாறிருக்க, இலங்கை தொடர்பான இணையனுசரணை நாடுகளில் கனடா அங்கம் வகிப்பதுடன், இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டும் பொறுப்புக்கூறல் செயற்றிட்டம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அத்தோடு இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை தான் என்பதை கனடா ஏற்றுக் கொண்டிருக்கின்றது. அது மாத்திரமன்றி இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகள் இருவர் உள்ளடங்கலாக நால்வருக்கு கனேடிய அரசாங்கம் தடை விதித்துள்ளது. இருப்பினும் இந்நடவடிக்கைகள் மாத்திரம் போதுமானவை அல்ல. இவற்றுக்கு அப்பால் மேலும் பல நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. எது எவ்வாறெனினும் இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் உண்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு நாம் ஆதரவளிக்கின்றோம் என்றார்.

